ஜனவரி 2016
Registered in the Department of Posts of Sri Lanka under No. QD/142/News/2015

# சோதிட கேசரி

ISSN 2012-5143
மலர்: 8 இதழ்: 10
விலை ரூபா 75 /-
தை மாத இதழ்



முருகனும் பூசத் திருநாளும்



மேல் மருவத்தூரில் தைப்பூசம்



மனித உடலில் பிரமிடு அமைப்பு!

அற்புதங்கள் செய்யும் சூரிய நமஸ்காரம்

வாசகர்களுக்கு இனிய பொங்கல் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



JEYECHANDRANS
The Art of Fashion
Wellawatte / Pettah
முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்

433, காலி வீதி, வெள்ளவத்தை
011 - 4528435, 011 - 4528438
Skype: jeyechandrans888

194, மெயின் வீதி, கொழும்பு - II
011 - 2448870, 011 - 2448860
Skype: jeyechandrans888


Web : www.jeyechandrans.com

# ஸ்ரீ மங்களாம்பிகை



திருக்கோவில் பொருட்கள்,
பஞ்சலோக சிலைகள்,
கற்சிலைகள், கோபுர கலசம்.
ஆலய மணிகள், உண்டியல்,
பித்தளைச் செம்பு குடம்,
விளக்குகள், மின்சார
மங்கள வாத்தியம்,
பட்டுத்தொம்பை,
பட்டுக்குடைகள்,

மற்றும் சகலவிதமான ஓமதிரவிய மூலிகை வகைகள்.



No : 6, ANDIVAL STREET,
COLOMBO- 13.

TEL : 0777 776 974
0771 414 676
0112 444 243



சோதிடகேசரி
SOTHIDA KESARI
*Astrological Magazine - Tamil*
மலர்: 8 | இதழ்: 10



# சீரிய பண்புகளைப் பற்றிக் கொண்டு பாங்குடன் வாழ்ந்திடுவோம்!

உலகில் மனிதராய் பிறந்த ஒவ்வொரு வரும் நல்ல ஒழுக்கங்களுடனும் சிறந்த பண்புகளுடனும் இருக்கவேண்டும் என்று தான் நான்கு வேதங்களும் தர்ம சாஸ்திரங்களும் எடுத்துச் சொல்லுகின்றன. புராண காலத்தில் வாழ்ந்த ரிஷிகளும் முனிவர்களும் கூட இதை வலியுறுத்தித் தான் மன்னர்களுக்கும் மக்களுக்கும் நன்னெறிகளை எடுத்துச்சொல்லி வந்தார்கள். பின் வந்த காலங்களிலும் கூட ஔவை மூதாட்டியும் வள்ளுவப்பெருந்தகை யாரும் மனிதன் பின் பற்ற வேண்டிய அத்தனையையும் தெள்ளத் தெளிவாகச் செப்பியுள்ளார்கள். மனிதர்களாய் பிறந்தவர்களுக்கு குணங்களில் குறைபாடுகள் இருப்பது இயற்கையே. ஆயினும் அவற்றை மற்றவர் சுட்டிக்காட்டும்போது திருத்திக்கொண்டு வாழ்வில் உயர்வது தான் சிறப்பு.

இதற்கு வால்மீகி ரிஷியின் வாழ்க்கை வரலாறு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். தன்னிலை தவறி, குணம் கெட்ட வாழ்க்கையை கைக்கொண்டிருந்த மகரிஷி வால்மீகி தாம் திருந்த சந்தர்ப்பம் கிடைத்த போது அதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு பின் வந்த காலங்களில் மிகச் சிறந்த மாமேதையாய் மகரிஷியாய் உயர்ந்து விட்டரர். ராமகதையின் தலைவனான ராமபிரான் சீரிய பண்புகளால் நிறையப் பெற்ற குணக்குன்று எனக் கம்பர் வர்ணித்துள்ளார். தர்ம நெறியுடன் ஒருவர் வாழ்ந்திட கம்பராமாயணத்தை நன்கு படித்து குணத்தால் நிறைந்த வள்ளலாம் ராமனை நினைத்தாலே போதும். நற்குணங்கள் தாமாகவே தொற்றிக் கொள்ளும் மனிதர்களை. எனவே சீர்மிகு பண்புகளை நமக்குள்ளே வளர்த்துக்கொண்டு, நமக்கும் பிறருக்கும் நன்மை தருபவர்களாக வாழ்ந்திடுவோமாக!

இம்மாத இதழில் முருகனுக்கு உகந்த பூசத் திருநாள், ஒரு ஆத்மாவின் அனுபவங்கள், மனக்கட்டுப்பாடு என்னும் புனிதப் போர், பழைமையே புதுமையின் தாய், செழிப்பின் அடையாளமாய் தைப் பொங்கல், கடன் நிவாரண ஸ்தலம், தை மாத சுபதினங்கள், இந்தோனேசியாவின் சாம்பிசரி சிவன் ஆலயம், தொழில் பெருக காயத்ரி மந்திரம், கண்ணனே கதி போன்ற கருத்துச் செறிவுள்ள கட்டுரைகளும் தை மாதத்திற்கான பன்னிரண்டு ராசிகளுக்கான பலன்களும் எமது அன்பு வாசகர்களுக்கு காணிக்கையாகின்றன.

ஆசிரியர்

## மன்மத வருடம் தை மாதம் 15.1.2016 முதல் 12.2.2016 வரை

| | | | |
|---|---|---|---|
| சந்திரன் | | | |
| கேது | ராசி<br>20.1.2016 தனுசு சுக்ரன் | | |
| சூரியன் | 6.2.2016 மகர புதன்<br>7.2.2016 சிம்ம குரு | | ராகு |
| ல / புதன் | சுக்கிரன் சனி | செவ்வாய் | குரு (அ.சா.) |

| | | | |
|---|---|---|---|
| | | ல | கேது |
| சூரியன் சுக்கிரன் | அம்சம்<br>7.2.2016 தனுசு குரு | | புதன் |
| குரு (அ.சா.) | 22.1.2016 விருச்சிக சனி | | சந்திரன் |
| செவ்வாய் ராகு | | சனி | |

Publisher : Express Newspaper (Ceylon) Limited
185, Grandpass Road, Colombo - 14.
Tel. : +91 115 322700 (30 Lines) Fax: +94 112 439987
Website: www.virakesari.lk





# கணபதியே பரப்பிரம்மம்

விநாயகர் என்ற சொல்லுக்கு தலைவன் என்பது பொருள். அதாவது ஆதியும் அந்தமும் இல்லாத எங்கும் நிறைந்த எல்லாம் வல்ல பரம்பொருள் முழுமுதற் கடவுள் எனப்படும். எந்த தெய்வ வழிபாட்டையும் விநாயகர் வழிபாட்டிற்குப் பிறகே தொடங்குவதும், கணபதி ஹோமத்திற்குப் பிறகே நவக்கிரஹ ஹோமம் முதலான பிற ஹோமங்களைச் செய்வதும், எந்தத் தொழிலையும் விநாயகரை வழிபட்டே தொடங்குவதும், எழுதத் தொடங்கும் முன் பிள்ளையார் சுழிபோடுவதும், "பிள்ளையாரே முழு முதற்கடவுள், அவரின்றி ஓரணுவும் அசையாது என்ற உண்மையின் எடுத்துக்காட்டுகளாக உள்ளன.

இந்த உண்மையின் விளக்கமாகப் பரம்பொருள் தனக்குத் தானே தவயோகிகளின் மனக்கண்ணில் தோன்றி தன்னை வழிபடுவதற்கு உரிய மூர்த்தமாக காணும் தெய்வ மாக வெளிப்படுத்திக்கொண்ட விக்னேஸ்வரர் உரு வம் குறைகளையெல்லாம் தீர்க்கும் குணக்குன்றின் உருவமாகும்.


அவரது நிறம் நீல நிறம். அவரது மேனியை "நெஞ்சில் குடிகொண்ட நீலமேனி" என்று விநாயகர் அகவல் விளக்குகின்றது. கண்களால் நாம் காணும் கடலும், ஆகாயமும் நீல நிறமாகவே காட்சியளிக்கின்றன. எட்டாத் தொலைவில் உள்ள காடுகளும், மலையும்கூட நீல நிறமாகவே தோன்றுவதால் அந்நிறத்தையே தம் நிறமாகக் கொண்டுள்ள விநாயகர் எங்கும் நிறைந்தவர். அவரே எல்லா பொருளாகவும் இருக்கிறார் என்ற உண்மை உறுதிப்படுகிறது.

பிள்ளையார் வழிபாடு எளிமையானது. அவரை கோயிலுக்குச் சென்றுதான் வழிபட வேண்டும் என்பதில்லை. வீட்டிலும், ஆற்றங்கரையிலும், குளக்கரையிலும்கூட அவரை வழிபடலாம். அவரை சிலை வைத்துத்தான் வழிபட வேண்டும் என்பதில்லை. இந்துக்கள் மிக எளிமையாக குளக்கரை மண்ணிலும், மஞ்சள் சாந்திலும், பசுவின் சாணத்திலும் பிள்ளையார் பிடித்து வைத்து விநாயகர் வழிபாடு செய்கின்றனர்.

### மழைநீர் போன்றது பரப்பிரம்மம்!

வானத்திலிருந்து வரும் மழை நீர் போன்றது பரப்பிரம்மம். அந்த மழை நீர் பல்வேறு வடிவங்கள் கொட்டுவது போன்று பிரம்மா, விஷ்ணு, மகேஸ்வரன், சத்குரு ஆகியவர்களின் மூலம் பரப்பிரம்மம் தன் அருள் சக்தியை உலக நன்மையின் பொருட்டு வெளிப்படுத்துகிறது.

காடு மேடுகளில் காணப்படும் அருகம் புல்லும், தும்பைப் பூவும், வெள்ளெருக்கு மலருமே அவரை அர்ச்சிக்கப் போதுமானவை. வெல்லத்தில் பிள்ளையார் பிடித்து வைத்து, அந்த வெல்லத்தையே கிள்ளி வைத்து நைவேத்தியம் செய்தாலும் ஏற்றுக்கொள்ளும் எளிய வரானவர் பிள்ளையார் என்று சொல்வதுவழக்கம். இவற்றிலிருந்து ஆனை முகக் கடவுள்தனக்கென்று ஓர் உருவம் இல்லாதவர். அருவமும் உருவமாகவும் இருப்பவர். அவரை எந்த உருவத்திலும் எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் வழிபடலாம் என்பது தெரிகிறது.



அவரது சிலை உருவமும் மாறுபட்ட குறிப்பிட்ட உருவமில்லாத அருவுருவம். விலங்கு முகம், மனித உடல், தேவர்களுக்கு உரிய நாற்கரங்கள், இவற்றோடு அவருக்கே உரிய துதிக்கை ஆகிய அமைப்போடு அவரே அஃறிணையைச் சார்ந்த விலங்காகவும், உயர்திணையைச் சார்ந்த மனிதனாகவும், தேவராகவும் விளங்குவதோடு இவர்களுக்கெல்லாம் அப்பாற்பட்டவராகவும் காட்சி கொடுக்கிறார். இத்தோற்றம் அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் உள்ள மகா கணபதியின் மெய்விளக்கமாக அமைந்துள்ளது.

அவரது திருவுருவம் ஆனைமுகம், ஐந்து கரங்கள், அகன்ற காதுகள், குறுகிய கண்கள், ஒற்றைத் தந்தம், பேழை வயிறு, குறுகிய கால்கள் ஆகிய அமைப்புகளுடையது. அவர் தலையில் பிறைச் சந்திரனையும், இடுப்பில் பாம்பையும் அணிந்துள்ளார். எலியை வாகனமாகக் கொண்டவர். அவர் வலக்கரங்கள் இரண்டில் ஒன்றை அபயகரமாக வைத்துள்ளார்.

மற்றொன்றில் அங்குசம் தாங்கியுள்ளார். இடது கைகளில் மேல் கரத்தில் பாசத்தைச் சுருட்டிப் பிடித்துள்ளார். கீழ்க்கரத்தில் மோதகத்தை ஏந்தியுள்ளார். அவரது நீண்ட துதிக்கையில் அமுதகலசம் உள்ளது. அவரது யானை முகம் "ஓம்" என்ற பிரணவ மந்திரத்தின் வடிவம். "ஓம்" என்னும் ஒலி பிரபஞ்சம் முழுவதும் நிறைந்து, செயல்பட்டு வரும் பரப்பிரம்மமே விநாயகர் என்பதை அவருடைய வேழமுகம் காட்டுகின்றது.அவரது தலையில் இடம் பெற்றுள்ள கலைகளோடு கூடிய இளம் பிறைச் சந்திரன் அவர் எல்லையில்லா ஆனந்தம் உடையவர் என்பதைக் குறிப்பதாகும்.

அவரது அகன்ற காதுகள் இரண்டும் பக்தர்கள் எந்த உலகத்தில் இருந்தாலும் அவர்களது குறைகளை அருள்கூர்ந்து கேட்பவர் என்பதைக் குறிக்கிறது. அவரது குறுகிய கண்கள் இடையறாத கருணை மழை பொழிந்து கொண்டிருப்பவை. அவர் பக்தர்களின் குற்றங்களை எல்லாம் மன்னித்து அருள்புரியும் கருணைக் கடல் என்பதை அக்கண்கள் பிரதிபலிக்கின்றன.

* தம்மண்ணன்

**மன்மத ஆண்டு தை மாதம்**

**15.01.2016 முதல் 12.02.2016 வரை**




செய்வதை திருந்தச் செய்யும் மனம் கொண்ட மேஷராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ராசி நாதன் பார்வை பெறுவதும் தொழில் ஸ்தானத்தில் சூரியன் அமர்வதும் உங்களின் வாழ்க்கை மேன்மை அடைய வழிவகுக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

**பணியாளர்களுக்கு**

பணியில் சிரமங்கள் இருந்தாலும் உங்களின் ராசிநாதன் பார்வையால் சிக்கல் தீரும். தொழிலாளர்களின் நன்மைக்காகப் பாடுபடுவீர்கள். தொழிற்சாலைகளிலும் தோட்ட வேலையிலும் சிறப்பாக செயல்படுவீர்கள். பொருளாதாரம் நன்றாக அமையும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

அரசியல் தொழிலில் இருப்பவர்களுக்கு முன்னேற்றம் உண்டாகும். புதிய பதவிகள் கிடைக்கும். மக்களின் ஆதரவும், புதிய வளர்ச்சியையும் பெறுவீர்கள். தொழிற்சங்கப் பணியில் சிறப்பாக செயல் படுவீர்கள். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

**வியாபாரிகளுக்கு**

தொழிலில் வளர்ச்சியை பெறும் காலமாக அமையும். பெட்ரோல், கேஸ் விற்பனை நன்றாக இருக்கும். வெளியூர் சென்று விற்பனையை விரிவு படுத்துவீர்கள். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். பொருளாதார நிலை சிறப்பாக அமையும்.

**கலைஞர்களுக்கு**

கலைஞர்களுக்கு நிதானமான வாழ்க்கை சூழ்நிலை அமையும். தொடர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். கலைஞர்களின் வளர்ச்சியை எண்ணி பெருமைப்படுவீர்கள். பொருளாதார நிலை ஏற்றமாக அமையும்.

**பெண்களுக்கு**

பெண்கள் தொழிலில் நல்ல வளர்ச்சியை பெறுவீர்கள். வேலை வாய்ப்புகளுக்காக காத்திருப்பவர்களுக்கு வாய்ப்பு அமையும். நண்பர்களிடம் எச்சரிக்கையாக பழகவும்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். சிவில், வங்கி கல்வியாளர்கள் முன்னேற்றம் பெறுவீர்கள். நல்ல ஆசிரியர்களிடம் அறிவுரைகளை பெற்று சிறப்பாக கல்வியில் வெல்வீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

**02.02.2016 செவ்வாய் காலை 08.16 முதல் 04.02.2016 வியாழன் மாலை 06.48 மணி வரை**

**நட்சத்திர பலன்கள்**

அசுபதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தனக்கென்று ஒரு விதியை உரு வாக்கி அதன்படி செயல்படுவீர்கள். யாரையும் பற்றி கவலைப்படாமல் கொடுத்த வேலையை முடித்து தருவீர்கள்.

**பரணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

பொறுப்புகளையும் கடமைகளையும் சரியாக செய்து முடிப்பீர்கள். கருத்துகளுக்கு முக்கிய முடிவு எடுக்கும் தருணமாக இருக்கும். கலைஞர்களின் வாழ்க்கை ஏற்றமாக இருக்கும்.

**கார்த்திகை 1ஆம் பாதம்**

அரசாங்க காரியம் நன்மையாக அமையும். பொது விடயங்களில் உங்களின் செயல்பாடுகள் சிறப்பாக அமையும். பொருளாதாரத்தில் வெற்றியை பெறுவீர்கள்.


**அதிர்ஷ்ட நிறங்கள்:** ஓரஞ்சு, வெண்மை, நீலம்

**அதிர்ஷ்ட திசைகள் :** கிழக்கு, வடமேற்கு, வடக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** ஞாயிறு, புதன், திங்கள்

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

ஞாயிறு ராகு காலத்தில் பைரவரையும் துர்க்கை அம்மனையும் வணங்கி வரவும். வெள்ளை நிற பூக்கள் வைத்து வணங்கி வர சிக்கல் மாறி நன்மை பெறுவீர்கள்.



**தடைகளை நீக்கும் தவமும் விரதமும்**

நம் மனதில் உள்ள அழுக்கு களை நீக்கிக் கொள்வதற்கு, தவமும் விரதங்களும் உதவு கின்றன. விரதங்களின் மூலம் இறைவனுக்கும் நமக்கும் இடை யிலுள்ள தடைகளை, நாம் நீக்கிக் கொள்ள இயலும்.

# எல்லாம் இறைவனின் அருட்பிரசாதம்

இறைவனின் சாயலாகப் படைக்கப்பட்ட மனிதன், இறைவனுக்கே தன்னை அர்ப்பணிக்க வேண்டும்.

"அந்தராத்மாவாகிய இறைவனை வணங்கியும், எழுதியும், படித்தும், கேட்டும், தொழுதும், உபசாரங்களைச் செய்தும், பூசித்தும் காலத்தைக் கழித்துக் கொண்டிருக்க வேண்டும். இப்படித்தான் இறைவனடியார்கள், உலகில் வாழ வேண்டும். அதனால் அவர்கள் இறைவனுடன் ஐக்கியமாகி மீண்டும் பிறவாத முக்தி நிலையைப் பெறுவார்கள்" இதை திருமழிசையாழ்வார், நான்முகன் திருவந்தாதி 63ஆவது பாடலில் பின்வருமாறு கூறுகிறார்.



"(திருமாலை) வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கனேன் போது."

இறைவன் படைத்த வாயால் நாம் இறைவனைப் பற்றிப் பேச வேண்டும். இறைவன் படைத்த கையால் நாம் இறைவனுக்கு அர்ச்சனை செய்ய வேண்டும். இறைவன் படைத்த காலால் நாம் இறைவன் திருக்கோயில் சென்று வழிபட வேண்டும். இறைவன் படைத்த மனத்தால் நாம் இறைவனைப் பற்றிச் சிந்திக்க வேண்டும். இவற்றோடு மக்களை இறைவனாகக் கருதி அவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டும்.

பாலுடன் தேன் சேர்ந்தால் சுவை மிகும். அதுபோல் பக்தர்களுடன் பக்தர்கள் சேர்ந்தால் அங்கு பக்திச்சுவை மிளிரும்.

எதையும் இறைவனின் அருட்பிரசாதமாக ஏற்கும் மனநிலையை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மன்மத வருடம்

# தை மாதத்து சுபதினங்கள்

திருமணம், வாசல் கால் வைக்க, கடன் வாங்க, வாகனம் வாங்க, தொழில் துவங்க, மாங்கல்யம் செய்ய, கிரக பிரவேசம்



| மாதம் | கிழமை | திதி | நட்சத்திரம் | யோகம் | நேரம் | லக்னம் | பிறை |
|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி 20 | புதன் | ஏகாதசி | ரோஹிணி | சித்த | 09.00 10.00 | கும்பம் | வளர் |
| பெப்ரவரி 05 | வெள்ளி | துவாதசி | மூலம் | அமிர்த | 07.30 08.30 | கும்பம் | தேய் |
| பெப்ரவரி 10 | புதன் | துவதியை | சதயம் | சித்த | 07.00 07.30 | கும்பம் | வளர் |

## சத்திர சிகிச்சை செய்து குழந்தை எடுக்க

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனவரி 15 | வெள்ளி | உத்திரட்டாதி | 06.00 06.30 | தனுசு |
| ஜனவரி 19 | செவ்வாய் | கார்த்திகை | 05.30 06.00 | தனுசு |
| ஜனவரி 20 | புதன் | ரோஹிணி | 05.30 06.00 | தனுசு |
| ஜனவரி 22 | வெள்ளி | திருவாதிரை | 05.30 06.00 | தனுசு |
| ஜனவரி 23 | சனி | புனர்பூசம் | 05.30 06.00 | தனுசு |
| ஜனவரி 24 | ஞாயிறு | பூசம் | 06.30 07.30 | மகரம் |
| ஜனவரி 26 | செவ்வாய் | மகம் | 06.30 07.30 | மகரம் |
| ஜனவரி 27 | புதன் | பூரம் | 06.30 07.30 | மகரம் |
| ஜனவரி 29 | வெள்ளி | ஹஸ்தம் | 06.00 07.00 | மகரம் |
| பெப்ரவரி 03 | புதன் | அனுசம் | 04.00 06.00 | தனுசு |
| பெப்ரவரி 06 | சனி | பூராடம் | 04.00 05.00 | தனுசு |
| பெப்ரவரி 07 | ஞாயிறு | உத்திராடம் | 04.00 05.00 | தனுசு |
| பெப்ரவரி 09 | செவ்வாய் | அவிட்டம் | 04.00 05.00 | தனுசு |
| பெப்ரவரி 10 | புதன் | சதயம் | 03.30 04.30 | தனுசு |
| பெப்ரவரி 11 | வியாழன் | பூரட்டாதி | 03.30 04.30 | தனுசு |
| பெப்ரவரி 12 | வெள்ளி | உத்திரட்டாதி | 03.30 04.30 | தனுசு |

## கடன் தீர்க்க

| | | | |
|---|---|---|---|
| ஜனவரி 18 | திங்கள் | பகல் | 12.00 02.00 |
| ஜனவரி 22 | வெள்ளி | பகல் | 01.00 02.00 |
| ஜனவரி 23 | சனி | பகல் | 12.00 01.00 |
| ஜனவரி 26 | செவ்வாய் | பகல் | 12.00 01.00 |
| ஜனவரி 27 | புதன் | பகல் | 01.30 03.00 |
| பெப்ரவரி 02 | செவ்வாய் | பகல் | 12.00 01.00 |
| பெப்ரவரி 03 | புதன் | பகல் | 02.00 03.00 |
| பெப்ரவரி 06 | சனி | பகல் | 12.00 01.00 |
| பெப்ரவரி 07 | ஞாயிறு | பகல் | 02.00 04.00 |
| பெப்ரவரி 08 | வியாழன் | பகல் | 12.00 01.30 |

## கும்பாபிசேகம்


ஜனவரி 20 புதன் ஏகாதசி ரோஹிணி
சித்த காலை 09.00 10.00 கும்பம் வளர்பிறை

## கிரக பிரவேசம்


| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி 20 | புதன் | சித்த | அதிகாலை | 05 06.00 | தனுசு | வளர் |
| பெப்ரவரி 03 | புதன் | சித்த | அதிகாலை | 04.00 06.00 | தனுசு | தேய் |
| பெப்ரவரி 06 | வெள்ளி | சித்த | அதிகாலை | 04.00 06.00 | தனுசு | தேய் |
| பெப்ரவரி 12 | வெள்ளி | சித்த | அதிகாலை | 03.30 04.30 | தனுசு | வளர் |

## சாந்தி முகூர்த்தம்

| தேதி | கிழமை | நேரம் |
|---|---|---|
| ஜனவரி 20 | புதன் | இரவு 08.00 09.00 |
| பெப்ரவரி 11 | வியாழன் | இரவு 07.30 08.30 |
| பெப்ரவரி 12 | வெள்ளி | இரவு 10.30 11.30 |



கணிப்பு: சோதிடர்
வாடிப்பட்டி
R. ஆனந்தன்



# அர்ச்சகரின் கைகள் தெய்வீகமானவை!

"அர்ச்சகஸ்ய ஹர ஸாக்ஷாத்" என்று, ஆகமங்களில் அர்ச்சகர் என்பவர் ஸாக்ஷாத் சிவனே ஆவார் எனக் குறிப்பிடப் பட்டிருக்கிறது.

வைணவ ஆகமங் களில் அர்ச்சகர்களை "சர நாராயணர்" என்பர். அதாவது, "நடந்து கொண்டி ருக்கக் கூடிய எம்பெருமான்" எனக் கூறுவார்கள். தர்ம விஷயங்களைக் கடைப்பிடித்து பிறரையும் கடைப்பிடிக்கச் செய்வதால் "ஆசார்யர்" என்றும் கூறுவர். மோக்ஷ தேசம் எனும் முக்தி நிலையை நமக்குக் காட்டுவதால் "தேசிகன்" என்றும் கூறுவர்.

அவர் அனுதினமும் ஆண்டவனை, ஆகமங் களில் கூறியுள்ளபடி வழிபாடு நடத்தி, அந்த விக்கிரகங்களில் தெய்வீக சக்தியை மக்கள் பயனடைவதற்குப் பரிணமிக்கச் செய்கிறார். அவர் தொண்டு மகத்தானது. அந்த இறையருளை பக்தர்களுக்கு அருட்பிரசாதமாக வழங்கும் அவருடைய கைகள் கடவுளின் கைகளைவிட மேலானது என வேதங்கள் கூறுகின்றன.


*அயம் மே ஹஸ்தோ பகவான்*
*அயம் மே பகவத் தர.*
*அயம் மே விச்வ பேஷ ஜோயம்*
*சிவாபிமர்ஷின*

சிவபெருமானை அனுதினமும் தொடுவதினால் அந்த அர்ச்சகரின் கைகள் மிகுந்த சக்தியுடையவை என்றும் உலகத்துக்கே மருந்தாக ஆகிறது என்றும் சாஸ்திரம் இயம்புகிறது. இந்தக் காரணத்தினால்தான் எந்த ஒரு ஆலயத்துக்குச் சென்றாலும், நாமே அருட் பிரசாதத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது என்று ஆகமங்கள் உபதேசிக்கின்றன.

ஒரு மனிதனின் உடலில் பாதங்கள் மிகுந்த சக்தி உடையவை. தாம் பொதுவாக பெரியவர்களை நமது வீட்டுக்கு அழைக்கும் போது கூட, வீட்டில் தங்கள் பாதம் பட வேண்டும் என்றுதான் கேட்டுக் கொள்வோம். பாதத்திலிருந்துதான் முக்கியமான நாடிகள் மூலமாக நமது ஆன்மீக சக்தி மேலெழுந்து சென்று நமக்குஇறை எழுச்சியைத்தருவதாகஆகமங் கள் கூறுகின்றன. அதனால்தான் நாம், ஆன்மீக சக்தி யின் வேரான பாதங்களுக்கு பூஜை செய்கிறோம்.

கடவுளுடைய அருட்சக்தியை, சாந்நித்யத்தைத் தனது விசேஷ பூஜைகளினால் நிலைத்திருக்கச் செய்து, உயிரினங்களுக்கு மிகப் பெரிய தொண் டாற்றி வரும் அர்ச்சகர்களை வணங்குவதின் மூலம் நாம் இறைவனை வணங்கிய உணர்வும் பயனும் கிடைக்கும் என்பது அனுபவ உண்மை.







# இந்தோனேசியாவின் சாம்பிசரி சிவன் ஆலயம்!

சாம்பிசரி ஆலயம் இந்தோனேசியாவின் யோக்யகார்த்தாவில் புருவோமார்த்தானி என்னும் கிராமத்துக்கு அருகில் சாம்பிசரி என்னும் மிகச்சிறிய ஊரில் அமைந்துள்ளது. யோக்ய கார்த்தாவிற்கு கிழக்கே 8 கி.மீற்றர் தொலைவில் அடிசசிப்டோ சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் பழைமை வாய்ந்த இந்த ஆலயம் அமைந்திருக்கின்றது. இந்த ஆலயத்திற்கு அருகில் ஒரு காலத்தில் மெராப்பி மலையில் ஏற்பட்ட எரி மலை வெடிப்பு மற்றும் அது சார்ந்த சாம்பலின் காரணமாக இந்த ஆலயம் பூமியின் மட்டத்திலிருந்து ஐந்து மீற்றர் ஆழத்தில் புதையுண்டது. தற்போது ஆலயத்தின் முக்கிய மான பகுதிகள் தோண்டி வெளிக்கொணரப்பட்டுள்ளன.

இந்த பகுதியில் வசித்து வந்த காரியோவினான்கன் என்னும் விவசாயி ஜூலை 1966ஆம் ஆண்டு தனது நிலத்தில் ஏர் கொண்டு உழுத பொழுது ஒரு கல் கூம்பில் ஏரானது முட்டுவதைக் கண்டார். ஏரை நிறுத்தி விட்டு அங்கு சற்று தோண்டிய போது கற்குவியல்கள் காணப்பட்டன. பூமிக்கடியில் ஏதோ ஒரு கட்டிடம் புதையுண்டு கிடப்பதை உணர்ந்து கொண்ட விவசாயி காரியோவினான்கன் இந்த தகவலை உடனடியாக அரசாங்கத்திற்கு தெரிவித்தார். பிராம்பனன் தொல்பொருள். ஆராய்ச்சி அலுவலகத்திலிருந்து வந்த அதிகாரிகள் இந்த இடத்தில் ஒரு புராதனமான ஆலயம் புதைந்து கிடப்பதை கண்டு பிடித்தார்கள். உடனே அந்த இடத்தை பாதுகாக்கப்பட்ட தொல் பொருள் ஆய்விற்கான இடமாக அறிவித் தார்கள். தொல் பொருள் ஆராய்ச்சி துறையின் மூலமாக மேற்கொள் ளப்பட்ட தோண்டுதலும் மறுசீரமைப்பும் மார்ச் 1987ஆம் ஆண்டு செய்து முடிக்கப்பட்டது.

1980ஆம் ஆண்டுகளுக்கு பின்பாக இந்தோனேசியாவின் யோக்னகார்த்தா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட மிக சுவராசியமான அகழ்வாராய்ச்சி இதுவே என்றும் சாம்பிசரி ஆலயத்தை கண்டுபிடித்த பின்பு இதைப் போன்ற பழைமை வாய்ந்த இன்னும் பல புராதன ஆலயங்கள் இந்த பகு தியில் புதையுண்டு கிடக்கலாம் எனவும் ஆராய்ச்



## உள்ளத்தூய்மை!



காமம், கோபம், வஞ்சனை, சூது, பொய் முதலிய அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்க மாட்டான். ஆகவே, சாந்தமாகிய பசுவின் சாணத்தால் மெழுகி, அன்பு என்ற சந்தனந் தெளிந்து, அறிவு என்ற விளக்கேற்றி, உண்மை என்ற தூபம் கமழவை. இறைவன் அங்கே எழுந்தருள்வான். தூய உள்ளமே இறைவன் குடிகொள்ளும் ஆலயம் என்பதை உணர்வாயாக!

சியாளர்கள் கருதுகின்றார்கள். இந்த ஆலயத்தின் கட்டிட அமைப்புக்களும் சிற்பங்களின் செழுமைகளும் இந்தோனேசியாவின் பிராம்பனன் பகுதியில் உள்ள மற்றொரு இந்து ஆலயத்தை ஒத்து இருக்கின்றது. இவ்வாலயத்தில் தெய்வச் சிலைகள், சுவர்களில் காணப்படுகின்ற புடைப்புச் சிற்பங்கள் அமையப் பெற்றுள்ள லிங்கங்கள் ஆகியவை சாம்பிசரி ஆலயம் ஒரு சைவ இந்து ஆலயம் என்பதற்கு ஆதாரமாக உள்ளன. மேலும் பழைமை வாய்ந்த இந்த ஆலயம் ஒன்பதாம் நூற்றாண்டின் முதல் அல்லது இரண்டாவது பத்து ஆண்டுகளில் எழுப்பப்பட்டிருக்கலாம் என ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கின்றார்கள். இதற்கு சான்று அளிப்பதைப் போல் ஒன்பதாம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட பொன் தகடால் இந்த பகுதியில் ஜாவா லிபி எழுத்துக்களால் எழுதி வைக்கப்பட்டுள்ள ஒரு செய்தி தகட்டின் மூலமாக அறிவது என்னவென்றால் சாம்பிசரி ஆலயத்தை மதாரம் வம்சத்தினர் 8ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கட்டியிருப்பார்கள் என்று யூகிக்கப்பட்டிருக்கிறது.

மேலும் மதாரம் வம்சத்தினரின் காலத்தில் மன்னர் ரக்காய்கருங் ஆட்சி செய்த போது இந்த ஆலயம் கட்டடப்பட்டிருக்கலாம் என மூன்றாவது வனுவா டெங்கா கல்வெட்டின் மூலமாக யூகிக்கப்படுகின்றது. இருப்பினும் சரித்திர ஆராய்ச்சியாளர்கள், சாம்பிசரி ஆலயத்தை எழுப்புவதற்கு மன்னர்கள் மட்டுமே உத்தர விட்டிருக்க முடியாது என்றும் அந்த பகுதியில் வாழ்ந்த பிரபுக்கள் ஒன்று சேர்ந்து இதற்காக முனைந்திருப்பார்கள் என்றும் இதற்காக அவர்களே பெரும் பொருள் திரட்டிக் கொடுத்திருப்பார்கள் என்றும் யூகிக்கின்றார்கள். ஆலயத்தின் கிழக்குப் புற



அமைந்துள்ள படிகளின் மூலமாக பக்தர்கள் கீழறங்கி சென்று ஆலயக் கர்ப்ப கிரகத்தில் வழிபட வேண்டும். இந்த படிக்கட்டுகள் பூமியின் மட்டத்திலிருந்து 6.5 மீற்றர் கீழறங்கி உள்ளன. இந்த ஆலயத்தின் பெரும் பகுதிகள் இன்னும் வெளிக்கொணரப்பட உள்ளன. சாம்பிசரி ஆலய வளாகம் ஒரு முக்கோண வடிவ வெள்ளை கல்லால் 50 x 48 மீற்றர் என்னும் அளவில் அமைந்துள்ளது.

ஆலயத்தின் சுவர்கள் முழுவதிலும் இந்துக் கடவுளர்களின் உருவங்கள் புடைப்பு சிற்பங்களாக செதுக்கப்பட்டுள்ளன. வடக்கு புறத்தில் துர்க்கை சிலையும், கிழக்கு புறத்தில் கணேசர் சிலையும் மற்றும் தெற்கு புறத்தில் அகஸ்தியர் சிலையும் காணப்படுகின்றன. ஒன்பதடி உயரமுள்ள சாம்பசரி ஆலயம், ஆறடி உயரமுள்ள அடித்தளத்தில் மேல் நின்று கொண்டிருக்கின்றது. ஆலயத்திற்கு எட்டடிக்கான அஸ்திவாரம் மண்ணுக்கு அடியில் தோண்டப்பட்டுள்ளது. இந்த ஆலயத்தின் கட்டிட கலையின் பாணியானது சாளுக்கியர் காலத்தை தழுவதாக உள்ளது. ஆலயத்தின் கருவறையில் உயர்ந்த சிவலிங்கம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பரிவார தெய்வங்களின் சன்னதிகளில் சிலைகள் ஏதும் காணப்படவில்லை. மண்ணுக்கடியில் இருந்து தோண்டி எடுக்கப்பட்ட பழைமையான இந்து ஆலயம் இது என்பதால் இதனை காணவரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை எப்போதும் அதிகமாகவே இருந்து வருகின்றது.

* அபிதா மணாளன்



# பழமையே புதுமையின் தாய்!



மரத்தின் புதிய கொழுந்து பழைய வேருக்கு எதிரியா? புதிய கொழுந்துக்குப் பழைய வேர்தான் ஆதாரம். பழைய வேர் உயிரோடு இருக்கிறது என்பதற்குப் புதிய கொழுந்து தான் அத்தாட்சி. எனவே சரியான மதம் புதுமைக்கு எதிரியாக் இருக்காது. முன்னைப் பழைமைக்கும் முன்னைப் பழைமையதாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியதாய் என்று கடவுளை வர்ணிக்கிறது திருவாசகம்.

ப்ரணவம் என்ற சொல்லுக்கு ப்ரநவம் என்று பிரித்து நவ நவமாய் புதிது புதிதாய் விரிவடையும் தெய்வீகம் என்றே பொருள் சொல்வதும் உண்டு. பழையன கழிதலும் புதியன புகுதலும் என்றே தமிழ்ச் சிந்தனைப் போக்கு உள்ளது. புராண என்ற சொல்லுக்குப் பழைமை என்று அர்த்தம். புராணங்களை பக்தி இலக்கியம் உள்வாங்கி வென்றது.

பக்தி இலக்கியத்தை தியான முறைகள் உள்வாங்கி வென்றன. தியான முறைகளை ஆத்ம விசாரம் உள்வாங்கி வென்றது. இன்னும் புதிய புதிய மாற்றங்களுக்கும் சிந்தனைகளுக்கும் இடம் உண்டு. ஸ்ரீராமகிருஷ்ணர் பழைய வேர். விவேகானந்தர் புதிய கொழுந்து. பழைமை புதுமையின் தாயாக இருக்கச் சம்மதிப்பதே இந்து மதத்தின் உச்சக்கட்ட உயிர்ப்பு நிலை.

சுகி சிவம்



# ரிஷபம்

மன்மத ஆண்டு தை மாதம்
15.01.2016 முதல் 12.02.2016 வரை

எதையும் மிகைப்படுத்தி பார்க்கும் குணம் கொண்டு விளங்கும் ரிஷபராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு குரு பார்வை படுவதும் ராசிநாதனும் யோகாதி பதியும் இணைந்து பார்வை இடுவதும் உங்களின் செயல்களின் உத்வேகத்தையும் நல்லவர்களின் நட்பு வளர்ச்சியையும் பொருளாதார நன்மையையும் தரும்.

### பணியாளர்களுக்கு

பணியில் சிறப்பாக செயல்படுவீர்கள். குருவின் பார்வை பெறுவதால் நன்மை பெறுவீர்கள். தொழிலில் இருந்து வந்த கஷ்டம் விலகி பொருளாதாரத்திலும் பணியிலும் மேன்மையை பெறுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். பொறுமை உங்களை மேன்மைப்படுத்தும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது வாழ்வில் முன்பைவிட வளர்ச்சியை பெறுவீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த குழப்பம் தீரும். திறமையை சரியான நேரத்தில் காட்டி பல விடயங்களைவெற்றி கொள்வீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானத்தில் கேது அமருவதும் போட்டிகளையும், எதிர்ப்பையும் சந்தித்து வியாபாரத்தில் நன்மை உண்டாகும். வெளிநாட்டு உணவு பண்டங்களின் விற்பனை அதிகரிக்கும். பொருளாதாரத்தில் ஏற்றம் பெறுவீர்கள்.

### கலைஞர்களுக்கு

ராசிநாதனின் பார்வை பெறுவதால் கலைஞர்களின் வளர்ச்சியையும், பொருளாதாரத்தில் ஏற்றமும் பெறுவீர்கள். கலை ஆர்வமிக்க நீங்கள் கலைஞர்களின் வளர்ச்சிக்கு பாடுபடுவீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களுக்கு திறமையை உருவாக்கி சமூகத்தில் ஏற்றம் பெற செய்வீர்கள். சுயதொழிலில் ஏற்றம் பெற்று விளங்குவீர்கள். பொருளாதாரம் சிறப்பாக அமையும்.



## பூரண மௌனத்தின் பெருமை!

பூரண மௌனத்தில்தான் ஆத்ம ஞானத்தை உணர முடியும். பூரண மௌனத்தில்தான் அகந்தை அழியும். "மோனம் என்பது ஞான வரம்பு" இது அவ்வைப் பாட்டியின் அமுதமொழி.

### மாணவர்களுக்கு

கல்வியின் வளர்ச்சியை பெறுவீர்கள். சட்டம், ஆயத்த ஆடை தயாரிப்பு கல்வி உங்களுக்கு சிறப்பாக அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

**04.02.2016 வியாழன் மாலை 08.49 முதல் 06.02.2016 சனி இரவு 12.56 மணி வரை**

### நட்சத்திர பலன்கள்

கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதங்கள்

அறிவு சார்ந்த போட்டிகளில் கலந்து கொள்வீர்கள். வறுமை நீங்கி செல்வாக்கு பெருகும். மனித நேய நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள்.

### ரோஹிணி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

சகோதரர்களின் அன்பை பெறுவீர்கள். தாயார் மூலம் பண வரவு இருக்கும். பலமிழந்த சக்தியை மீண்டும் பெறுவீர்கள். முக்கிய காரியங்களில் கலந்து கொள்ள வேண்டி வரும். பொருளாதார வளர்ச்சி கிடைக்கும்.

### மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்

விளையாட்டு துறையில் சிறந்து விளங்குவீர்கள். மருத்துவ கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். பண விடயத்தில் முன் கூட்டியே முடிவுகளை எடுப்பது நல்லது.

**அதிர்ஷ்ட நிறங்கள்: பழுத்த வெண்மை, நீலம், சிவப்பு**

**அதிர்ஷ்ட திசைகள் : தெற்கு, தென்கிழக்கு, மேற்கு**

**அதிர்ஷ்ட கிழமைகள் : வெள்ளி, சனி, ஞாயிறு**

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் அம்மன் வழிபாடு செய்யவும். செவ்வாய்க் கிழமை காலை 06, 07க்குள் சுப்ரமணியரை வணங்கி வர எல்லாம் நன்மையாக முடியும்.

காஞ்சி மன்னன் திருப் பாற்கடலில் பள்ளிகொண்ட நிலையில் திருமாலின் விக்கிரகம் ஒன்றைச் செய்வித்தான். அதற்கு அவன் நாள்தோறும் பலவித அலங்காரங்களைச் செய்வித்துசுவைமிக்க உண்டிகளையும் பழவகைகளையும் படைத்து வந்தான். இத்தகைய சிறந்த வழிபாட்டிற்கு இணையாகச் சொல்லும் வகையில் இந்த உலகிலேயே எவரும் இருக்க முடியாது என் செருக்குடன் அவன் அனைவரையும் நோக்குவது வழக்கம்.

இவ்விதம் இருந்தபோது ஒரு நாள்



# இறைவனது

## திருவடிகளைச் சேரும் வழி

அரசன் உலாவச் சென்றான். அவன் திரும்பி வரும் வழியில் யாரோ ஒருவர் ஒரு மரத்தடியில் அமர்ந்து கண்களில் நீர் மல்க துளசி மாலையை அணிந்த ஒரு விக்கிரகத்திற்குத் துளசி தளங்களை அர்ச்சித்தபடி அமர்ந்திருந்தார்.

அரசன் விஷ்ணு பக்தன் அல்லவா? உடனே அங்கேயே நின்று அவரைக் கூப்பிட்டான். "இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்? விஷ்ணுவின் விக்கிரகத்தை நான் எவ்வளவு அழகாக அலங்கரித்திருக்கிறேன் என்று வந்து பார். அழகிய ஆடைகளால் அலங்கரிப்பதை விட்டு வெறும் துளசிமாலையை மட்டும் சார்த்தி என் அண்ணலை அலங்கோலப்படுத்தி விட்டாயே!" என்றான்.

அரசன் செல்வச் செருக்குக் காரணமாகத் தன் வார்த்தைகளால் ஓர் ஏழை பக்தரான விஷ்ணு தாசரின் மனதை நூறு சுக்கல்களாக உடைத்து விட்டான். அரசன் எங்கே? அன்றாடங்காய்ச்சி எங்கே? மலைக்கும் மடுவுக்கும் எப்படிப் பொருந்தும்?

பகவானிடம் பக்தி செலுத்துவது ஒன்றையே முக்கியமாகக் கருதிய விஷ்ணுசித்தர், "அரசே! பகவானைப் பூஜிப்பதற்கு இதயத்தில் நிரம்பி வழியும் பக்தி என்ற மலரைவிடச் சிறந்தது வேறு ஒன்றும் கிடையாது. பொன்னும் மணியும் கொண்டு இறைவனை அளந்து விட முடியாது. பகவானை உண்மையான பக்தி ஒன்றாலேயே அடைந்து விடலாம். அத்தகைய பக்தி ஒன்றையே பிரார்த்தித்து நான் பகவானை வழிபட்டு வருகிறேன்" என்று சொன்னார். பிறகு அவர் மீண்டும் தம் போக்கில் விஷ்ணு ஸூக்தத்தைத் தமது தேன்மதுரக் குரலோடு இழைத்துப் பாராயணம் செய்வதில் முனைந்தார்.

இதைக் கேட்ட அரசன் வெகுண்டான். "அந்தணனே! உன் பக்தியின் மகிமையைப் பார்த்து விடுகிறேன்! நான் முதலில் பகவானைப் பார்க்கிறேனா, நீ முதலில் பார்க்கிறாயா என்பதைப் பார்த்து விடலாம்" என்று சூளுரைத் தான். அந்தணர் எதையும் பொருட்படுத்தவில்லை. காஞ்சி மன்னனும் ஆத்திரத்துடன் அரண்மனையை அடைந்தான்.

சில நாட்கள் சென்றன. மன்னன் முத்கல மகரிஷியை வரவழைத்தான். பகவானைத் தரிசிப்பதற்காக மிகுந்த பொருட்செலவில் விஷ்ணு யாகத்தைத் தொடங்கினான். நகரின் அலங்காரமும் அந்தணர்களின் வேத ஒலியும் யாகத்தின் போது அளிக்கப்படும் தானங்களும் தட்சணைகளும் அனைவரையும் காஞ்சியை நோக்கி ஈர்த்தன. எங்கே பார்த்தாலும் மக்கள் கூடி அரசனின் இத்தகைய சிறப்புமிக்க பக்தியையே பாராட்டிப் பேசினார்கள்.

இங்கு ஏழை அந்தணரும் "சேத்திர சன்னியாசம்" என்ற ஒருவகைத் துறவை மேற்கொண்டார். அனந்தசயன தீர்த்தத்திலேயே

அவர் தங்கி பகவான் விஷ்ணுவை ஆராதித்து விரதம், உபவாசம் ஆகிய அனுஷ்டானங்களைச் செய்து வந்தார். அவர் ஒரு சபதத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தார். அதன்படி பகவானின் தரிசனம் கிடைத்தால் அன்றி அவர் காஞ்சி திரும்பக் கூடாது. அவர் தம் நிபந்தனை நிறைவேறும் வரை பகலில் ஒரு முறை தன் கையால் உணவு தயாரித்து அதைப் பகவானுக்குப் படைத்த பிறகு உண்டு வந்தார். ஒரு நாள் இவ்விதம் வழக்கம் போல் உணவு தயாரித்தார். அதைப் பகவானுக்கு படைப் பதற்காக எடுத்துச் செல்ல வந்து பார்த்த போது தயாரிக் கப்பட்ட உணவைக் காண வில்லை!



இதுபோலவே ஒரு வாரம் உணவு தொடர்ந்து திருட்டுப் போயிற்று. மறுமுறை உணவு தயாரிப்பதில் நேரத்தைச் செலவிட்டால் பகவானை வழிபடும் நேரம் குறைந்து விடும் என்று கருதிப் பட்டி னியாகவே விஷ்ணு சித்தர் பஜனை செய்யக் கிளம்பிவி டுவார். ஏழாவது நாள் இந்த உணவுத் திருட்டு எப்படி நடைபெறுகிறது என்பதைக் கண்டு பிடிக்கத் தீர்மானித்தார். எனவே உணவைத் தயாரித்த பின் அதை மூடி வைத்து விட்டு ஒரு மறைவிடத்தில் அமர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்.

அவர் உணவை வைத்துச் சென்று விட்டார் என் பதை நிச்சயம் செய்து கொண்டு அங்கே ஒரு சண் டாளன் வந்தான். அவன் வறுமையால் வாடுகிறான் என்பதை ஒரே விநாடியில் தெரிந்து கொள்ளலாம். ஒல்லியாக ஒடிந்து விழுவது போன்ற உடல். அழுக் கேறிய கிழிந்த கந்தல் உடை, பரட்டைத் தலை. சுற்றுமுற்றும் பார்த்த சண்டாளன் யாரும் இல்லை என்று நினைத்துச் சமைத்த உணவை அள்ளிக் கொண்டு ஓடத் தலைப்பட்டான்.

இந்தக் காட்சியைக் கண்ட ஏழை விஷ்ணு சித் தரின் மனம் அனலில் இட்ட மெழுகு போல் உருகி யது. அவனிடம் இரக்கம் கொண்ட அந்தணர் ஒரு பாத்திரத்தில் சிறிது நெய்யை எடுத்துக் கொண்டு அவன் பின்னால் ஓட ஆரம்பித்தார். பின்னால் தன்னைத் தொடர்ந்து வரும் ஆள் சப்தத்தைக் கேட்ட சண்டாளனும் வேகமாக ஓடத் தலைப்பட்டான். அவனால் ஓட முடியவில்லை. கல் தடுக் கிக் கீழே விழுந்து மூர்ச்சை யடைந்தான். அந்தணரும் ஓடோடி வந்து அவன் அருகே அர்ந்து தன் மேல் துண்டை எடுத்து விசிறி அவனை ஆசு வாசப்படுத்தினார்.

அவ்வளவுதான், "அப் பனே! உனக்கான தேர்வு முடிந் துவிட்டது. நீ வெற்றி பெற்று விட்டாய்!" என்று கூறியபடி, சண்டாளன் இருந்த இடத்தில் சங்கு, சக்கரம், கதை, பீதாம் பரம் ஆகியவற்றோடு கூடிய திருமால் புன்னகையுடன் விஷ்ணு சித்தருக்குக் காட்சிய ளித்தார். திருமாலின் தரிசனம் கிடைத்த விஷ்ணு சித்தர் பேச்சற்றுப் போய் கல் லெனச் சமைந்து போனார். இத்தகைய நிலையில் அவர் விஷ்ணுவை நமஸ்கரிக்கவும் மறந்தார். பகவான் விஷ்ணுசித்தருக்குத் தன் தரிசனத்தையும் அளித்து விமானத்தில் ஏற்றி அவரை வைகுண்டம் அனுப்பி வைத்தார். தேவர்கள் புஷ்பமாரி பொழிந்தனர். கந்தர்வர்கள் பாடினர். அப்ஸர ஸ்திரீகள் ஆடினர்.

இதை அறிந்த மன்னன் அரச பதவியை துறந்து யாக குண்டத்தில் வீழ்ந்து வைகுண்ட பதவியையும் அடைந்தான்.

## தூய மனநிலை தொண்டு செய்ய உதவும்!

மனிதராகப் பிறந்த அனைவருக்கும் விதிவலக் கின்றி, ஆன்மிக வாழ்க்கையும் கட்டாயம் இருக்க வேண்டும். காந்திஜியின் அரசியல் பொது வாழ்க்கையில் ஆன்மிகத்திற்கும் முக்கிய இடம் இருந்தது. பொது வாழ்க்கையில் ஈடுபட்டு தொண்டு செய்ய விரும்புகிறவர்களுக்கு, ஆன்மிக வாழ்க்கையும் இருக்க வேண்டும் என்று கருதப்படுகின்றது. இது தூய மனநிலையில் தொண்டு செய்ய உதவும்.



சுவாமி கமலாத்மானந்தர்







# தை மாத சிறப்புக்கள்

தை மாதத்தில் கடைப்பிடிக்கப்படும் விழாக்கள் அத்தனையும் சிறப்பு வாய்ந்ததாக கருதப்படுகின்றன. தை மாத வெள்ளிக்கிழமை திருமகளுக்கு உகந்த நாளாக போற்றி கொண்டாடப்படுகின்றது. தமிழ் முறைப்படி ஆண்டின் பத்தாவது மாதம் தை மாதமாகும். சூரியன் மகர ராசியில் நுழைந்து அதை விட்டு வெளியேறும் கால அளவை குறிப்பதே தை மாத மாகும். இந்த தை மாத அறுவடையில் கிடைத்த புது நெல்லைக் கொண்டு சூரியனுக்கு படைத்து வணங்கும் உழவர்களுக்காக இது. உழவர் திருநாள் என்றும் அழைக்கப்படுகின்றது.

மற்றொரு சிறப்பு தைப்பூசமாகும். இந்த மாதம் முருகப்பெருமானுக்கு மிக உகந்த மாதமாகும். முழு நிலவு பூச நட்சத்திரம் அன்று வரும் இந்நாளை தைப்பூசமாக கொண்டாடுவார்கள். தை மாதத்து மற்றொரு சிறப்பு தை அமாவாசை ஆகும். ஆண்டின் அனைத்து அமாவசைகளும் சிறப்புதான் என்றாலும் ஆடி மற்றும் தை அமாவாசை அன்று கூடுதல் சிறப்பு. இறந்து போன பெற்றோர் மூதாதையரின் நினைவை போற்றும் வகையில் அவர்களுக்கு வேண்டிய உணவுகளை செய்து அவர்களுக்கு படையல் செய்து ஆறு கடல் போன்றவற்றில் புனித நீராடி பூசை செய்வார்கள். வள்ளலார் ராமலிங்க அடிகளார் தை மாத புனர் பூச நட்சத்திர தினத்தன்று தான் ஒளியானார். அதை நினைவு கூரும் வகையில் பக்தர்கள் அனைவரும் அவருடைய ஊருக்கு சென்று அவரை வழிபடுவார்கள். தைப்பூசம் என்பது ஈழம், மலேசியா பினாங்கு, சிங்கப்பூர், மொரிசியஸ், ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவிலும் சிறப் பாக கொண்டாடுகின்றார்கள். தை நீர் ஆடல் மிக சிறப்பு வாய்ந்த நாளாகும். திருமணமான இளம்பெண்கள் தாய்மை பேறு வேண்டி தையில் நீராடுவார்கள். பெண்களுக்கு யோகத்தை அள்ளித் தருகின்றது. தை மாத செவ்வாய்க்கிழமைகள் தமிழகத்தில் இதனை ஔவையார் விரதம் என்றும் அழைக்கின்றார்கள். தை மாத விரதங்களாக தை முதல் நாள் அமாவாசை ரத சப்தமி, தைப்பூசம் தைகிருத்திகை எனவிரதங்கள் வருகின்றன. இந்தியாவின் வட மாநிலங் களில் ஒரு சில பகுதிகளில் தை மாதத்தின் முதல் நாள் அன்று எமதர்மனுக்கு பூசைகள் செய்வார்கள். அன்று அவருக்கு செய்யும் பூஜையை காலன் பூஜை என்றும்



சொல்வார்கள். அந்த தினத்தன்று எமனின் திருவுருவப் படத்தை வைத்து எள்ளுருண்டைகள் செய்து பூஜிப்பர். அப்படி செய்தால் மரண அறிவித்தல் மற்றும் விபத்து செய்திகள் வராது என்பது அவர்களின் நம்பிக்கை.



இந்த தைத் திருநாளில் கேரளாவில் திருவனந்தபுரம் பத்மாநாப சுவாமி திருக்கோயிலில் 6 வருடத்திற்கு ஒரு முறை சிறப்பு பூஜை நடைபெறுமாம். அப்படி வரும் மகர சங்கராந்தியில் லட்ச தீபம் ஏற்றுவார்களாம். அன்று அந்த கோயிலே தீப ஒளியில் ஜொலிக்குமாம். தை மாத பௌர்ணமி பூஜையில் கலந்து கொள்பவர்களுக்கு குழந்தை பாக்கியம் மற்றும் கடன் தொல்லைகளில் இருந்து விடுதலை மற்றும் அனைத்து மனவலிமையையும் கொடுக்கும் என்று சொல்கிறார்கள் நமது முன்னோர்கள்.

இது தவிர தை மாதத்தின் பொதுவான தகவல்கள், ஆதிசிவனார் இம்மண்ணுலகுக்கு வந்தது தை மாதமே. ஆதிசிவனார் பார்வ தியை கரம் பிடித்தது தைப் பூசத்தில்தான். தை மாதத்தில்தான் திருப்பாற்கடல் கடையப்பட்டு இலக்குமியும் அமிர்தமும் வெளியில் வந்தது முருகன் தெய் வானை மற்றும் வள்ளியை மணந்ததும் தை மாதத்தில் தான். சபரிமலை ஐயப்பன் கோவிலில் ஏற்றப்படும் மகர ஜோதி என்னும் மகர விளக்கு ஒவ்வொரு தை மாதம் முதல் நாளில் ஏற்றப்படுவது மிக விசேஷமாகும். தை மாதத்தில் வரும் பூச நட்சத்திரம் இந்துக்களால் தொன்று தொட்டு புண்ணிய நன்னாளாக இறைவனை வணங்கும் சிறப்பு நாளாக கொண்டாடப்படுகின்றது. தை மாதம் உத்ராயண காலத்தில் ஆரம்பமாகின்றது. உத்தராயணம் என்பது பொதுவாக தேவர்களின் பகல் பொழுதாகும். அதுவே தை மாதம் என்பது காலை பொழுதாக சொல்லப்படுகின்றது.

தை மாதம் பிறந்தால் தொட்டதெல்லாம் துலங்கும் என்ற பழமொழிக்கேற்ப ஏடு தொடக்கம், புதிர் எடுத்தல், பெண் பிள்ளைகளுக்கு காது குத்தல் புதிய தொழிலுக்கு அடிக்கல் நாட்டுதல், திருமணம் சம்பந்தப்பட்ட பேச்சுக்களை தொடங்குதல் என்று ஆரம்பிப்பார்கள். சிவனும் சக்தியும் இணைந்ததே தைப்பூசம் என்ற நன்னாளில்தான். அதனால்தான் இந்த உலகமே இயங்கத் தொடங்கியதாக வரலாறுகள் கூறுகின்றன. தை மாதத்தில் வரும் அமாவாசை அன்று கடலை ஒட்டியுள்ள கோவில்களில் பக்தர்கள் புனித நீராடி அவர்களது பித்ருக்களுக்கு படையல் செய்து வழிபடுவார்கள்.

அப்படி செய்தால் வீட்டில் நடைபெற இருக்கும் சுப நிகழ்ச்சிகள் தங்கு தடையின்றி நடக்கும் என்பது ஐதீகம். தை மாத வெள்ளிக்கிழமைகளில்



கன்னிப் பெண்களும் திருமணமான பெண்களும் அம்பிகையையே விளக்காக பாவித்து குத்து விளக்கு ஏற்றி அதற்கு பூஜைகள் செய்து வழிபடுவார்கள். தை மாதம் என்பது மிக சக்தி வாய்ந்தது ஆகும். இதனை மகர மாதம் என்றும் அழைப்பார்கள். ஆன்மீகத்தை பாராட்டும் கேரள மாநிலத்தில் இத்தை மாத முதல் நாள் அன்று மாலை ஒரு விண் மீன் தெரியும். அந்த சமயத்தில் கருடன் வட்டமிடும். இந்து சுவாமி ஐயப்பனின் திருக்கோவிலில் வைத்து நடைபெறும். தை மாதத்தை மகர மாதம் என்றும் அழைப்பார்கள். அதனால் அந்த விண்மீனிற்கு மகர ஜோதி என்ற பெயரும் உண்டு. தை மாதத்தில் முதலில் வரும் செவ்வாய்க்கிழமை தொடர்ந்து அனைத்து செவ்வாய்க்கிழமைகளிலும் வடைமாலை சாத்தி பைரவரை வழிபட்டால் சகல நலன்களும் உண்டாகும் என்பது ஐதீகம். நாமும் தை மாதத்தில் விரதங்களையும் இறை வழிபாடுகளையும் மேற்கொண்டு வளம் பெறுவோமாக!

* ஒத்தக்கடை ராமன்



# பேராசையால் ஏற்பட்ட பெரும் கேடு!

வெகு காலத்திற்கு முன்பு சிருஞ்சயன் என்ற ஓர் அரசர் இருந்தார். அவருக்கு ஒரே ஒரு மகள் இருந்தாள். அந்த அரசருக்குத் தமக்கு வாரிசாக ஒரு பிள்ளை இல்லையே என்ற மனக்குறை இருந்தது. எனவே தனது குறையைப் போக்கிக் கொள்ள மறையோதும் சிறந்த அந்தணர்களை அழைத்து உபசரித்து ஆலோசனை கேட்டார். அந்தணர்கள் அரசரின் விருந்தோம்பலினால் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அவர்கள் அரசரின் குறையைப் போக்கி விடும்படி, தேவரிஷியான நாரதரிடம் பிரார்த்தனை செய்தார்கள். அந்தச் சமயத்தில் நாரத முனிவரும் சிருஞ்சயனின் விருந்தினராகத்தான் தங்கியிருந்தார்.

மறைப்பொருளை உணர்ந்த அந்தணர்களின் வேண்டுகோள் நாரதரின் உள்ளத்தை நெகிழ வைத்தது. தேவரிஷியும் அரசரின் குறையைப் போக்கத் திருவுளம் கொண்டார். நாரதர் அரசரை அழைத்து அவரிடம், "மன்னா! உனக்கு எப்படிப்பட்ட பிள்ளை பிறக்க வேண்டும் என்று விரும்புகிறாய்?" என்று கேட்டார்.

மன்னர் சாதாரணமான வரத்தைக் கேட்டிருக்கக் கூடாதா? விதி யாரை விட்டது! மன்னரின் உள்ளத்தில் பேராசை புகுந்து விட்டது. பேராசை மிக்க உள்ளத்துடன் மன்னர் நாரதரை வணங்கி, "மகரிசியே! எனக்குத் தாங்கள் பிள்ளைவரம் அளிக்க விரும்பினால் நான் கேட்கிற படியான பிள்ளை பிறக்கும்படி அருளுங்கள். அதாவது எனக்குப் பிறக்கும் பிள்ளை மிகவும் அழகானவனாகவும் உடல் ஆரோக்கியம் உள்ளவனாகவும் இருக்க வேண்டும். அதோடுகூட அவனது மலம், மூத்திரம், எச்சில், சளி போன்றவை கூடப் பொன்மயமாகவே இருக்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டான்.

ஒரு சிறிது யோசித்த நாரதரும்எல்லா வற்றையும் எளிதில் கணக்கிட்டு விட்டு, "அரசே! தங்கள் விருப்பப்படியே நடந்தேறும்" என்ற வரத்தை அருளி விட்டுத் தம் வழியே புறப்பட்டார்.

நாரத முனிவரின் வரத்தின்படி அரசருக்கு உரிய காலத்தில் ஒரு மகன் பிறந்தான். மன்னருக்கோ மட்டற்ற மகிழ்ச்சி உண்டாயிற்று. அரசர் தமது குழந்தைக்கு, "சுவர்ணஷ்டீவி" என்று பெயர் சூட்டினார். அரசரின் மகன் அழுதால் பொன்மணி கொட்டும். மற்ற எந்த அசுத்தங்கள் உடலை விட்டு வெளியேறினாலும் அது பொன்னாகவே இருந்தது. இதனால் அரசருக்கு வருமானம் அதிகமாயிற்று. அரசகுமாரன் எச்சில் துப்புவதும், கோழை உமிழ்வதும், மலம் கழிப்பதும், அரசரின் கஜானாவை பொற் காசுகளால் வழியவழிய நிரப்பின. அரசருக்கோ கரை காணாத இன்பம்!

அரசர் தம்முடைய நிலவறையைப் பொன்னால் நிரப்பினார். பிறகு அரண்மனையிலுள்ள பாத்திரம் பண்டங்கள், சுவர், கதவு எல்லாப் பொருள்களையும் தங்கமயமாக்கிவிட்டார். அரசரின் அரண்மனையில் எல்லாமே பொன்மயம்தான்! தரை, தூண், சுவர், கூரை எங்குப் பார்த்தாலும் தங்கம் ஜொலித்தது. பொன் அளிக்கும் அரசகுமாரனைப் பற்றிய செய்தி நாடு முழுவதும் பரவியது.

நீண்ட தூரத்திலிருந்துகூட மக்கள் சுவர்ணஷ்டீவியைப் பார்க்க வர ஆரம்பித்தனர் கொள்ளைக்காரர்கள்கூட அரசகுமாரனைப் பற்றிய செய்தியைத் தெரிந்து கொண்டனர். உடனே அவர்கள் ஒரு கூட்டமாகக் கூடினார்கள். அந்தக் கூட்டத்தில் சிறந்த பல வீரர் களைக் கொண்டு ஒரு குழுவை அமைத்து. அதன் மூலம் அரசகுமாரனைக் கடத்திக் கொண்டு வந்து விட வேண்டும் என்ற திட்டம் உருவாயிற்று.



அதன்படி ஒரு நாள் இரவு கொள்ளைக்காரர்கள் ரகசியமாக அரண்மனைக்குள் புகுந்தார்கள். திட்ட மிட்டிருந்தபடி தந்திரமாக அரசகுமாரனைத் தங்கள் இருப்பிடத்திற்குத் தூக்கிச் சென்றுவிட்டார்கள். அரசகுமாரனைத் தூக்கி வந்த பிறகு கொள்ளைக் கூட்டத் தலைவர்களிடையே பலவகையான பிரச் சினைகள் குறித்துக் கருத்து வேற்றுமை ஏற்படலா யிற்று. எந்த வகையில் அரச குமாரனின் கழிவு களைப் பங்கு பிரித்துக் கொள்வது என்பது தான் அவர்களது தலையாய பிரச்சினை.

அதோடு, அரசர் வேறு, மகனைக் காணாமல் நான்கு திசைகளுக்கும் பல சிறந்த வீரர்களை அனுப்பி விட்ட செய்தியும் கொள்ளைக்காரர்க ளுக்குக் கிட்டியது. அரச குமாரனை நீண்ட நாட் களுக்கு மறைத்து வைத்திருப்பது இயலாத காரி யமாகப் பட்டது. எனவே கொள்ளைக்கூட்டத் தலைவர்கள் தங்களுக்குள் பேசி ஒரு முடிவுக்கு வந்தனர். அரசகுமாரனைக் கொல்ல வேண்டியது. அதனால் கிடைக்கும் தங்கத்தைத் தங்களுக்குள் ஒற்றுமையுடன் பங்கிட்டுக் கொண்டு சென்று விட வேண்டியது என்ற முடிவுக்கு வந்த கொள் ளைக்காரர்கள் உடனே அதைச் செயற்படுத்தவும் முனைந்தனர். ஈவு இரக்கமற்ற கொள்ளைக்கூட் டத்தினர் அரச குமாரனைக் கொன்றார்கள். அரசகு மாரனின் உடல் தான் இரண்டு துண்டுகளாயிற்றே தவிர, அவனது உடலில் ஒரு குண்டுமணியளவு கூடத் தங்கம் இருக்கவில்லை.

பேராசையின் வசப்பட்டு, சிருஞ்சயன் கேட்ட வரத்தினால் அரசகுமாரனைக் காப்பாற்ற முடி யாது போயிற்று. அரசருக்கோ பிள்ளையை இழந்து வருந்தும் நிலை ஏற்பட்டது. அதே பேராசை கார ணமாகவே திருடர்களும் அரசகுமாரனைக் கொன் றார்கள். இது காரணமாக அவர்களுக்குப் பொருள் எதுவும் கிடைக்கவில்லை. மாறாக, ஓர் அறியாப் பிள்ளையைக் கொன்ற பாவம் தான் ஏற்பட்டது. அரசரின் கோபத்திற்கும் ஆளாயினர். ஆக, பேரா சையினால் சிருஞ்சயனோ பிள்ளையை இழந்தான். கொள்ளைக் கூட்டத்தினர் உயிரை இழந்தனர்.

இந்தக் கதை மகாபாரதத்தில் இடம் பெற்றுள்ளது. இந்தக் கதை ஒருவன், பொன்முட்டை இட்ட வாத்தை அறுத்தால் அதன் வயிற்றில் ஏராளமான பொன் முடடைகள் இருக்கும். அவை எல்லாவற்றையும் ஒரே சமயத்தில் விற்றால் மிகப் பெரிய செல்வச் சீமானாக ஆகி விடலாம் என்று நினைத்து, அந்த வாத்தைக் கொன்ற போது அதன் வயிற்றில் எதுவும் இல்லாததுடன், ஒவ்வொரு நாளும் தான் அடைந்து வந்த நிரந்தர வருவாயையும் இழந்தான். என்னும் கதையை நினைவு படுத்துகிறது.

- சுவாமி கமலாத்மாணந்தர்.

## இறைவனின் மன்னிக்கும் கருணை



பக்தர்கள் மீது இறைவன் கொண்டிருக்கும் தயையும் கருணை யும் எல்லையற்றவை. தவறு செய்யும் பக்தர்களையும் திருத்தி நல்வழிப்படுத்தி ஆட்கொள்ளவே இறைவன் விரும்புகிறான். சந்திரன், ராவணன் ஆகியவர்கள் செய்த பெரும் பிழையையும் மன்னித்து சிவ பெருமான் அருள் புரிந்தார். ஸ்ரீ ராமர், காகாசுரன் செய்த பெரும் பிழை யையம் மன்னித்து அருள் புரிந்தார்.




## வானவியல் விஞ்ஞானியாகவும் மிளிர்ந்த


# மகரிஷி வராஹமிஹிரர்!

மகரிஷி வராகமிஹிரர் உஜ்ஜையினியில் விக்கிரமாதித்த மகராஜாவின் ராஜசபையில் முக்கிய பதவி வகிப்பவராக இருந்தார். விக்கிர மாதித்த மகாராஜாவின் ஆட்சி காலம் பொற்காலம் என போற்றப்பட்டதற்கான காரணம் அவருடைய அரசவையில் எல்லா கலைகளிலும் கற்றுத் தேர்ந்த வல்லவர்களான காளிதாசர், தன்வந்தரி, க்ஷபனாக், அமரசிம்மர், சங்கு, வேதாளபட்டர், வரருசி, கட் கர்பர் மற்றும் வராஹமிஹிரர் ஆகிய ஒன்பதின்மர் நவரத்தினங்களாக இடம் பெற்று ராஜ சபையை அலங்கரித்தது தான்.

இவர்களில் வராஹமிஹிரர் தவ வலிமை மிக்க மகரிஷியாக மட்டுமல்லாமல் வானவியல் விஞ்ஞானம் மற்றும் கணித விஞ்ஞானத்தில் ஞானமும் சிறப்பும் பெற்றிருந்தார். அத்துடன் இவர் ஜோதிட சாஸ்திரத்தையும் கற்றுத் தேர்ந்திருந்தார். பல ஆண்டுகளுக்கு பின் மிகச் சிறந்த விஞ்ஞானிகளால் கண்டு பிடிக்கப்பட்ட விஞ்ஞான கருத்துக்களை இவர் தம்முடைய நூல்களில் பல ஆண்டுகளுக்குப் முன்பாகவே சற்றும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் மிகத் தெளிவாக தெரிவித்துள்ளார்.

வராஹமிஹிரர் தம்முடைய வானவியல், கணிதவியல் மற்றும் ஜோதிடவியல் ஆகிய துறைகள் சம்பந்தப்பட்ட எண்ணற்ற பல நூல்களை எழுதியுள்ளார். ப்ருகத் ஜாதகம், ப்ருகத் சம்ஹிதா, யோக யாத்ரா, பஞ்ச சித்தாந்திகா, ப்ரசன்ன வல்லபா, லகு ஜாதகா, திக்காணி யாத்ரா, பிரகத் விவாக பாதல், லகு விவாக பாதல், லக்ன வராஹி, கத்துகலா மஞ்சரி, தேவி வஜ்ன வல்லபா ஆகிய நூல்கள் வராஹமிஹிரரால் எழுதப்பட்டவையாகும். இந்த நூல்களில் உறுதியாக தெரிவிக்கப்பட்ட பல்துறை சம்பந்தமான கருத்துக் கள், இவர் ஒரு சிறந்த ரிஷி மட்டும் அல்ல, ஒரு சிறந்த விஞ்ஞானியும் கூட என்பதை நிரூபிக்கின்றன. ப்ருஹத் ஜாதகம், ப்ருஹத் சமிதாவில் பூகோளம், நட்சத்திர தொகுதிகள், தாவரவியல், மிருக வியல், வானவியல் உள்ளிட்ட பல்துறை விஞ்ஞானம் தொடர்பான வியத்தகு உண்மைகளை விளக்குகின்றார் வராஹமிஹிரர். வ்ருக்ஷ ஆயுர்வேதா என்ற சிகிச்சை முறை மூலம் தாவரங்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களையும் அதை தீர்க்கும் விதங்களையும் கூட அவர் விரிவாக விளக்கியிருக்கின்றார்.

வராஹமிஹிரரின் தீவிர ஆராய்ச்சிகளின் பயனாகவும், தீர்க்க திருஷ்டியின் மூலமாகவும்



கண்டுபிடித்த விஞ்ஞான உண்மைகள் உலகத்தாரை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. பஞ்ச சித்தாந்திகா என்ற அபூர்வ நூல் சூர்ய ரோமக பௌலீஸ, வசிஷ்ட பைதாமக சித்தாந்தங்களை எடுத்துரைக்கின்றது. ஐந்து சித்தாந்தங்களின் சுருக்க தொகுப்பாக இது இருப்பதால் பஞ்ச சித்தாந்திகா என்ற பெயரினை பெற்றது. இந்துக்களின் வானவியல் அறிவை விளக்குகின்ற பிரமிக்க வைக்கும் ஒரு அற்புதமான நூலாகும் இது என அறிஞர்கள் புகழ்ந்து கூறியுள்ளார்கள். சந்திரனும் இதர கிரகங்களும் தம்முடைய சுய ஒளியால் பிரகாசிக்கவில்லை என்றும் சூரியன் தருகின்ற ஒளியினால் அவை பிரகாசிக்கின்றன என்ற உண்மையையும் முதன் முதலாக உலகுக்கு தெரிவித்தவர் வராஹமிஹிரரே ஆவார்.

கோள்களின் ஒளி பற்றிய விஞ்ஞான உண்மைகளை ஆய்ந்து அறிந்து உலகுக்கு நல்கியது போலவே சில கணித சூத்திரங்களையும் வராஹமிஹிரரே முதன் முதலாக உலகுக்கு தெரிவித்துள்ளார். திரிகோண விதி தொடர்பான இன்றைய கண்டுபிடிப்புகளை வராஹமிஹிரர் அன்றே ரத்தின சுருக்கமாக சூத்திர வடிவில் உலகத்தாருக்கு தந்து விட்டார். மாஜிக் ஸ்குயர் எனப்படும் மந்திர சதுரங்களை அதாவது வர்க்கத்தின் நான்கு மடங்கு என்ற அளவில் இவர் விரிவாக விளக்கியிருப்பது கணித மேதைகளைக் கூட வியப்படைய வைத்தது.



சேர் ஐசக் நியூட்டன் என்ற விஞ்ஞானி புவியீர்ப்பு விசை பற்றி பல ஆண்டுகளுக்கு பின்பு கண்டுபிடித்த விஞ்ஞான உண்மையை வராஹமிஹிரர் அவருடைய காலத்திலேயே மிக கச்சிதமாக புவியீர்ப்பு விசை பற்றி விளக்கியிருப்பது பிரமிப்பூட்டும் விடயமாகும். வராஹமிஹிரர் புவியீர்ப்பு விசையை குருத்துவ ஆகர்ஷன் என விவரிக்கின்றார். குருவினால் ஈர்க்கப்படுவது என்பது பொருளாகும். சூரியனை மையமாக வைத்து, சூரியனின் ஆகர்ஷனத்தால் இதர கிரகங்கள் யாவும் பரஸ்பரமாக ஒன்றுடன் ஈர்க்கப்பட்டதை வராஹமிஹிரர் கண்டறிந்து "குருத்துவாகர்ஷன" என குறிப்பிட்டார்.

வராஹமிஹிரரின் குருவாக கி.பி. 476ம் ஆண்டில் பிறந்த ஆர்யபட்டர் விளங்கினார். இவர் வானவியலிலும் கணிதவியலிலும் தனக்கு நிகரே இல்லாத அளவில் திகழ்ந்தார். ஆர்யபட்டரிடம் வானவியல், கணிதம் ஆகியவற்றை நன்கு பயின்ற வராஹமிஹரர், அவருடைய புலமையை வெகுவாக வியந்து பாராட்டியதோடு அவரது சூத்திரங்களை தனது கணித் திறமையால் இன்னும் துல்லியமாக மேம்பட வைத்தார். வராஹமிஹிரரின் குருவான ஆர்யபட்டர் பூகோள சாஸ்திரத்தில் நிபுணராக திகழ்ந்து, பல கண்டுபிடிப்புகளைச் செய்து அனைவரது பாராட்டையும் பெற்றார். இவர் எழுதிய அற்புதமான ஆர்யபட்டீயம் என்னும் நூல் மிகச் சிறப்பானதாக கருதப்படுகின்றது. இந்த நூலுக்கு பிற்காலத்தில் வந்த பல மேதைகள் விரிவான விளக்க உரைகள் எழுதியுள்ளார்கள்.

வானவியல், ஜோதிடவியல், கணிதவியல் ஆகியவற்றை ஒரு புதிய பரிமாணத்திற்கு எடுத்துச் சென்ற வராஹமிஹரரின் புதல்வரான ஹோராசரரும் இவ்வகை விஞ்ஞானத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். வராஹமிஹிரருக்கு பின்பாக இவரும் ஒரு ஜோதிட கலை வித்தகராகவே திகழ்ந்தார்.




ஹோராசரரும் பிரசன்ன சாஸ்திரம் பற்றி சர்பஞ்சசிகா என்ற நூல் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார். வராஹமிஹிரர் எழுதிய நூல்களுக்கு ஹோராசரரின் விளக்க உரைகள் மிக பொருத்தமாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு உஜ்ஜையினி பிரதேசத்தில் வாழ்ந்த வராஹமிஹிரர் அவரது புதல்வர் ஹோராசரர் ஆகிய ஜோதிட கணித மேதைகள் வேத ஜோதிடத்திக்கு விஞ்ஞான முறையிலானதொரு வலுவான அஸ்திவாரத்தை ஏற்படுத்திக்கொடுத்ததோடு அதை உலகெங்கிலும் பரப்பவும் செய்தார்கள்.

* ஒத்தக்கடை ராமன்

## சுயநலமற்ற பிரார்த்தனை!

சுயநலமின்றிப் பொது நன்மையின்பொருட்டுச்செய்யப்படும் பிரார்த்தனையை இறைவன் நிறைவேற்றுகிறான் என்பது, ஓர் அனுபவ உண்மையாகும். ஒருவர் தனக்காக மட்டுமல்லாமல் பிறருக்காகவும் கட்டாயம் பிரார்த்தனை செய்ய வேண்டும். இதனால் மற்றவர்களுக்கு நன்மை ஏற்படுகிறதோ இல்லையோ, தனக்குப் பெரிதும் நன்மை ஏற்படும் என்பதை ஒருவர் நன்றாகப் புரிந்து கொள்ள வேண்டும்.



திருமால், பிரம்மா, சிவன் ஆகிய மும்மூர்த்திகளும் தங்களது தேவியருடன் காட்சி தரும் அபூர்வ ஸ்தலமே உத்தமர்கோயில். இக்கோயில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாகும். படைக்கும் தொழிலை செய்யும் பிரம்மாவிற்குப் பூவுலகில் தனக்கெனத்தனியே கோயில் இல்லை என்ற தனது மனக்குறையைத் தனது தந்தையிடம் தெரிவிக்க பூலோகத்தில் சென்று தவமிருந்தால் இவ்வரத்தை அருள்வதாகக் கூற, பிரம்மா இத்தலம் வந்து தவமிருந்தார்.

திருமால் அவருக்குக் காட்சி தந்து நீ பெற்ற சாபத்தால் உனக்கு வழிபாடு இல்லை. ஆனால் இத்தலத்தில் உனக்கும் பூஜை நடக்கும் என அருளினார். பிரம்மாவிற்குக் காட்சி தந்த பெருமாள், இங்கு புருஷோத்தமர் என அழைக்கப்படுகிறார். சிவனைப் போல ஐந்து தலைகள் உள்ளதாக அகம்பாவம் கொண்ட பிரம்மாவின் ஒரு தலையைக் கிள்ளியதால், சிவனுக்குப் பிரம்மஹத்தி தோசம் பிடித்து, கிள்ளிய கபாலம் அவரது கையில் பிரிக்க முடியாமல் ஒட்டிக் கொள்ள, படைக்கப்பட்ட உணவு முழுவதையும் கபாலம் எடுத்துக் கொண்டதால், எவ்வளவு உணவு இட்டாலும் கபாலம் நிறையாத நிலையில் சிவன் அதனை ஏந்தி பிச்சை எடுக்கும் பிச்சாண்டார் கோலத்தில் இத்தலம் வந்தார். அப்போது திருமால் சிவனின் பாத்திரத்தில் அன்னமிடும்படி மகாலட்சுமியிடம் கூறவே அவளும் அன்னமிட, கபாலம் பூரணமாக நிரம்பி, அவரது கையிலிருந்த கபாலமும் பிரிந்தது. சிவனுக்கு அன்னமிட்ட மகாலட்சுமி இங்கு பூரணவல்லி தாயார் என அழைக்கப்படுகிறாள். இவள் என்றும் உணவிற்குப் பஞ்சமில்லா நிலையைத் தருபவளாதலால், இவளை வழிபட வறுமை நீங்கும்.

இங்கு சிவகுரு, சக்தி குரு, விஷ்ணு குரு, பிரம்ம குரு, ஞான குரு, தேவ குரு, அசுர குரு ஆகிய ஏழு பேரும் அருள்பாலிப்பதால், இந்த ஸ்தலம் சப்த குரு ஸ்தலம் என அழைக்கப்படுகிறது. இவர்களை வியாழக்கிழமை நெய் தீபம் ஏற்றி வழிபட, ஜாதகத்தில் உள்ள குரு தோசங்கள் அனைத்தும் நிவர்த்தியாகும்.

# குரு தோஷங்கள் விலக்கிடும் உத்தமர்கோயில் வழிபாடு!







# அறிவின் அடையாளம்

அறிவு என்பதற்கு அடையாளம், அது நம்மைத் தீயவற்றிலிருந்து காப் பாற்றுவதாக இருக்க வேண்டும். நல்லவற்றில் நம்மைச் செலுத்துவதாகவும் இருக்க வேண்டும். இதை, "அறிவு அற்றம் காக்கும் கருவி" என்றும், "நன்றின்பால் உய்ப்பது அறிவு" என்றும் திருவள்ளுவனார் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

"அறிவு ஒன்றே வேதங்கள் கூறும் தெய்வம்" என்று, மகாகவி பாரதியார் குறிப்பிடுகிறார்.

அறிவு எது என்பதற்கு, "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்று ஐயன் திருவள்ளுவர் விளக்கம் தந்திருக்கிறார். மேலும் அவர், அறிவுடையார் எல்லாம் உடையார்" என்று கூறி, அறிவை வளர்த்துக் கொள்ளும் வழியை நமக்கு எடுத்துக்காட்டியுள்ளார்.

அறிவு வளர வளர அறியாமையின் தோல் உரியும். அறிவுடையவன் எல்லா நலன்களுக்கும் அதிபதியாகி விடுகிறான். உரிமை யாளனாகி விடுகிறான். புத்திமான் உண்மையில் பலவான் ஆவான்.

நம் அறிவு வெறும் அறிவாக இல்லாமல், இறைவனை உணர்த்தும் மெய்யறிவாக இருக்க வேண்டும்.


## அதிசக்தி வாய்ந்த பரம்பரை மலையாள மாந்திரீகம்

ஆண் பெண் இருபாலரையும் வசியம் செய்யும் மாந்திரிகத்தில் விசேட சக்தி பெற மந்திராச்சாரியாரான ஜீவகாந்தி சாமியிடம் உங்கள் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி மனநிம்மதி பெறுங்கள். 62 வருடங்களாக நம்பிக்கை நிறைந்த சேவையாற்றி வந்துள்ளேன். ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னர் எழுத்தோலைகளில் எழுதப்பட்டு பாதுகாப்பாக பேணப்பட்டு வந்திருக்கும் அந்த உண்மையான மலையாள மந்திரங்கள் என்னிடம் உள்ளன.
என்னால் முடித்துத்தரப்படும் மாந்திக வேலைகள் முழுமையாக பலன்களைத் தருவதன்
இரகசியம் இதுதான்



வெளிநாடுகளில் வசிப்போருக்கு விசேட காப்பு மந்திரம் அருளப்படும்

ஆண் பெண் வசிய மாந்திரீகத்தில் பாரம்பரிய நிபுணத்துவம் கொண்ட மஹா குரு

சந்திப்பு : திங்கள், புதன், ஞாயிறு
நேரம் : 10.00 - 5.30 வரை
சந்திப்புக்கட்டணம் : 300.00


**24 மணிநேரத்துள் பலன் கிடைக்கும் என்ற உத்தரவாதம்**

என்னால் முடித்துத் தரக்கூடிய எனைய மாந்திரிக வேலைகள் : நீண்ட காலமாக உங்களுடன் நெருக்கமாகப் பழகி எல்லா பலன்களையும் அனுபவித்துவிட்டு பின்னர் பிரிந்துசென்ற காதலனை/காதலியை உங்கள் காலடிக்கு கொண்டுவர வேண்டுமா ? கண்டதும் காதல் வந்துவிட்டதா ? வாழ்நாள் முழுவதும் பிரியத்துடன் வாழ்வதற்கு காரியம் செய்து கொடுப்போம், விலகிச்சென்ற தொடர்புகளை திரும்ப ஏற்படுத்தியும் கொடுப்போம். விலகிசெல்லவும் வைப்போம்,விவாகம் தாமதமாகிச் செல்லகிறதா ? குழந்தைகள் இல்லையா ? தொழில் நேர்முகத்தேர்வில் வெற்றிபெறவும்,திடீர் பணவரவுக்கும் காரியம் செய்து கொடுப்போம்.வீடு,வியாபார ஸ்தலம் மென்மேலும் விருத்தியடைய செய்வோம், செய்வினை அச்சுறுத்தல்,விற்கமுடியாத காணியை விற்றுத்தரல்,அதிக இலாபம் பெறுவதற்கு என பல காரியங்களை செய்து முடித்துத் தருவோம்,சகல மாந்திரீக வேலைகளினதும் முழுப்பலன்கள் சர்வ நிச்சயம்,இரகசியங்கள் பாதுகாக்கப்படும்.

**ஜீவகாந்தி** **இரகசியம் பேணப்படும்**

No.07-2/1(2nd Floor), W.A. சில்வா மாவத்தை,வெள்ளவத்தை.
கொழும்பு -06. TEL : 0770416205 / 0765529844
website : www.jeewakanthi.com (காலி வீதி சிக்னலுக்கு மிக அருகாமையில்)

max adz





## சிற்பச் செழுமையின் அடையாளமாய்

# காஞ்சி கைலாசநாதர் ஆலயம்!



இந்தியாவின் தமிழ்நாட்டில் காஞ்சிபுர மாவட்டத்தில் காஞ்சிபுரத்தில் அமைந்துள்ளது பழைமை பெருமைகளும் சிற்ப செழுமைகளும் நிறையப் பெற்ற காஞ்சி கைலாசநாதர் ஆலயம். திராவிட கட்டிட கலை பாணியில் இந்த ஆலயத்தின் கட்டிடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. சிவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த ஆலயம் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகும். பல்லவ வம்சத்தை ஆண்டு வந்த ராஜசிம்ஹா என்னும் இரண்டாம் நரசிம்மவர்மன் அரசர் காலத்தில் இவ்வாலயம் எழுப்பப்பட்டுள்ளது. கண்கவரும் சிற்பங்களுக்கும், காண்போரை கவர்ந்திழுக்கும் புடைப்புச் சிற்பங்களுக்கும் பிரசித்தி பெற்றதாக இந்த ஆலயம் விளங்குகின்றது. இச்சிவாலயத்தில் 58 பிரதான சன்னதிகள் சிவனின் பல்வேறு வித வடிவங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டு விளங்குகின்றன. மிக உயர்ந்த உள்சுவர்களில் இந்த வடிவங்கள் அனைத்தும் புடைப்பு சிற்பங்களர்க உருவாக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரத்தில் இந்த ஆலயம், இதன் அற்புதமான சிற்பங்களுக்காகவும் சிலைகளுக்காகவும் உள்ளூர் வெளியூர் சுற்றுலா பயணிகளால் கவரப்பட்டு வருகின்றது.

காஞ்சிகைலாசநாதர் ஆலயம், காஞ்சிபுரத்தில் மேற்கு புறத்தில் வேதவதி ஆற்றின் கரையோரத்தில் அமைந்திருக்கின்றது. இவ்வாலயம் கிழக்கு திசை பார்த்துள்ளது. மூன்று காஞ்சி என்று சொல்லப்படுகின்ற சிவகாஞ்சி, விஷ்ணு காஞ்சி மற்றும் ஜையினர் காஞ்சி ஆகியவற்றில் இது சிவகாஞ்சியாக போற்றப்பட்டுள்ளது. இந்த ஆலயம் சென்னை மாநகரத்தி லிருந்து 75 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. காஞ்சிபுரம் நகரத்தில் அமையப் பெற்றுள்ள பல முக்கியமான பழைமையான ஆலயங்களுள் காஞ்சி கைலாசநாதர் ஆலயமும் ஒன்றாகும் ஏகாம்பர நாதர் ஆலயம், கச்சபேஸ்வரர் ஆலயம், காமாட்சியம்மன் ஆலயம், குமரகோட்டம் ஆலயம், வரதராஜ பெருமாள் ஆலயம் ஆகியவை காஞ்சி மாநகரத்தில் இருக்கக்கூடிய பிற முக்கிய ஆலயங்களாகும்.

ஸ்மார்த்தா வழிபாட்டு பாரம்பரி



யத்தில், சிவ, விஷ்ணு, தேவி பராசக்தி மற்றும் சூரியன், கணபதி, முருகக் கடவுள் முதலியவர் களை வழிபடுவதற்காகவே ஆகம விதி முறை களின் படி காஞ்சி கைலாசநாதர் ஆலயம் எழுப் பப்பட்டுள்ளது. கைலாசநாதர் என்றால் கைலாய மலைக்குரிய தெய்வம் என்பது அர்த்தமாகின்றது. இந்த நகரத்திற்கு காஞ்சி என்ற பெயர் சூட்டப் பெற்றது பல்லவ ஆட்சியாளர்களால் தான். இவர்கள் இந்த நகரத்தை மிக அழகாக நிர்மா ணித்து பல்வேறு கோயில்களையும் கட்டினார்கள். காஞ்சிபுரம் நகரத்தை சிவவிஷ்ணு காஞ்சி என்றும் அழைப்பார்கள்.

இந்தியாவில் இருக்கின்ற மிகப் புனிதமான நகரங்களில் ஒன்றாக காஞ்சிபுரம் கருதப் படுகின் றது. இடைப்பட்ட காலத்தில் சாளுக்கிய வம்ச அரசர்களிடம் வீழ்ந்த பல்லவர்கள், தம்முடைய வீரபராக்கிரமத்தால் தங்களின் பிரதேசங்களை மிக விரைவில் மீட்டெடுத்தார்கள். அதன் பின்பும் குறிப்பிடும்படியான மிகப் பெரிய சிவவிஷ்ணு ஆலயங்களை காஞ்சி நகரில் எழுப்பினார்கள். இவற்றில் கைலாசநாதர் ஆலயம் மிகப் பெரிய பரப்பளவை கொண்டதாகும். காஞ்சியின் கைலா சநாதர் ஆலயம் பின் வந்த காலங்களில் தென்னிந் தியாவில் கட்டப்பட்ட ஆலயங்களுக்கு கட்டிட கலையில் ஒரு முன்னோடியாக விளங்கியது.



காஞ்சி கைலாசநாதர் ஆலயம் பல்லவர் கட் டிடக்கலை நிபுணத்துவத்துடன் எழுப்பப்பட் டிருந்த போதிலும், பின் வந்த காலங்களில் ஆன சோழர்கள் மற்றும் விஜயநகர கட்டிடக் கலையின் பாணிகளும் இதில் கலந்திருக்கின் றன என தொல்பொருள் வல்லுனர்கள் தெரிவிக் கின்றார் கள். இந்த ஆலயம் இந்திய தொல் பொருள் துறையால் நிர்வகிக்கப்பட்டு வருகின் றது. மன்னர்களுக்கு போர் காலங்களில் இந்த ஆலயம் ஒரு பாதுகாப்பு மையமாகவும் செயல் பட்டு உள்ளது என தொல் பொருள் துறை செய் திகள் தெரிவிக்கின்றன. மன்னர்களால் கட்டப் பட்ட சுரங்கம் ஒன்றும் இந்த ஆலயத்தோடு இணைக்கப்பட்டுள்ளது என சொல்லப்படு கின்றது. இந்த ஆலயத்தின் கட்டிடக்கலை சிறப்பை கண்டபின்பே முதலாம் ராஜராஜ சோழன் தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலை அதே பாணியில் எழுப் பினார் என்று வரலாறு தெரிவிக்கின்றது. இவ்வா லயத்தின் சுவர்கள் அனைத்திலும் அற்புதமான தெய்வச் சிற்பங்களும் விலங்குகளின் உருவங்களும் செதுக்கப்பட்டுள்ளன. பிரதான சன்னிதானத்தில் பதினாறு பக்கங்கள் கொண்ட கருங்கற்களால் சிவ லிங்கம் அமைக்கப்பட்டுள்ளது. பிரதான சன்னிதா னத்தில் சுவர்களுக்கு நடுவில் மிக அழகாக செதுக் கப்பட்ட தெய்வச்சிலைகளுடன் பாதபந்த ஆதி ஸ்தானம் இடம் பெற்றுள்ளது. ஆலயத்தின் தென்புறச் சுவற்றில் சிவன் சிலையானது உமா மகேஸ்வரராக வடிக்கப்பட்டுள்ளது. அதற்கு கீழ் வராகர், பிரம்மா, விஷ்ணு ஆகிய சிலைகளும் இடம் பெற்றுள்ளன.

மேற்குப் பார்த்த ஆலய வளாகத்தில் சிவனின் வடிவங்கள் சந்தியா தாண்டவமூர்த்தி மற்றும் மூர்த் தவ தாண்டவ மூர்த்தி ஆகியனவும் சிவ கணங்களின் சிலைகளும் பிரம்மா, விஷ்ணு, நந்தி மற்றும் பார்வதி சிலைகளும் வடிக்கப்பட்டுள்ளன. வடப்புறம் பார்த்துள்ள சுவற்றில் சிவனின் வடிவமானது திரிபுராந்தக நிலையில் வடிக்கப்பட்டுள்ளது மற்றும் அதே வரிசையில் தேவி துர்க்கா, சிவ கனங்கள், பைரவி, கௌசிகர் முதலியனவும் செதுக்கப் பட்டுள்ளன. சுருங்கச் சொல்லப் போனால் இந்த ஆலயம் கண்ணை கவருகின்ற சிற்ப கூட்டங்களின் தொகுப்பாய் அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

* நவநீதம்

அர்ஜுனன்: சாத்திரமுறை மீறி செய்யப் படும் உண்மையான யாகத்தின் பலன் என்னவென்பாய் கண்ணா?

கண்ணன்: ஆசையும் பற்றும் வலுத்தவர்களாய்... அகங்காரமும் பகட்டும் கொண்டவர்களாய், சில அறிவிலிகள் தங்கள் உடலையும் அதற்குள் உறையும் என்னையும் வருத்திக்

# மூவகைத்தவமும் தானமும்



கொண்டு சாத்திரத்திற்கு உட்படாத கொடுந்தவம் புரிகிறார்கள். அவர்கள் அசுரகுணம் படைத்தவர்கள்.

அர்ஜுனா! இயல்பாகவே மனிதன் நம்பிக்கைமயமான வன். அந்த நம்பிக்கை சாத்விகி, ராஜசி, தாமசி என்று மூன்று வகைப்படும். அவரவர் மனப்பாங்குக்கு ஏற்றபடிதான் இந்த நம்பிக்கைகள் அமைகின்றன. சாத்விக நம்பிக்கை கொண்டவர்கள் தேவர்களை வணங்குகிறார்கள். ராஜச நம்பிக்கை கொண்டவர்கள் அரக்கர்களை வழிபடுகிறார்கள். தாமச நம்பிக்கை கொண்டவர்கள் மூதாதையர்களையும் பூதகணங்களையும் வணங்குகிறார்கள். இதுபோல் அனைவருக்கும் விருப்பமான உணவும் மூன்று வகைப் படும். அவற்றின் பேதா பேதங்களைப் பற்றிக் கூறுகிறேன் கேள்!

ஆயுள், அறிவு, வலிமை, ஆரோக்கியம், சுகம், இன்பம் இவற்றை வளர்ப்பவை, சாறுள்ளவை, பசைக் கூறுள்ளவை, மனதுக்கு இதம் அளிப்பவை போன்ற மதுர உணவுகள் சாத்விகர்களுக்கு விருப்பமானவை. கசப்பானது, புளிப்பானது, உவர்ப்பானது, மிதச்சூடானது, காய்ந்து போனது, காரம் மிகுந்தது, எரிச்சல் தருவது, பசி எடுக்காமல் தடுப்பது, துக்கம், துயரம், நோய் இவற்றைக் கொடுப்பது என்ற வகையான உணவுகள் ரஜோ குணத்தினருக்குப் பிடித்தது. நாளூற்றது, வற்றிச் சுவையற்றது, பழையது, எச்சிலானது, கெட்டுப்போனது, நாற்றமடிப்பது இந்த வகை உணவுகள் தாமச குணத்தார் விரும்பி உண்பது. இதுபோல்

யாகமும் மூன்று வகைப்படும். பலன் கருதாமல், "யாகம் செய்வது கடமை" என்ற ஒரே எண்ணத்தில் சாத்திர முறைப்படி செய்யும் யாகம் சாத்விகமானது. பலன் கருதிப் பகட்டாகச் செய்யப்படும் யாகம் ராஜசமானது. அன்னதானம் செய்யாமலும், தட்சணை வைக்காமலும், மந்திரங் கள் ஓதாமலும், அக்கறை இல்லாமலும் வேதநெறி தவறி செய்யப்படும் யாகம் தாமசமானதாகும்.

இது போல் தவமும் மூன்று வகைப்படும். மனம் தெளிந்திருத்தல், மௌனமாய் இருத்தல், மனத்தை அடக்குதல், சாதுவாய் இருத்தல், ஆத்மா ஒன்றையே சிந்தனையில் நிறுத்தல் என்ற மனத்தவமும்... இனிமையாய்ப் பேசுதல், உண்மையே உரைத்தல், நயம்பட நன்மையே பகர்தல், வேதம் ஓதுதல் என்ற வாக்கு தவமும்... தேவர், பிராமணர், ஆசாரியர் மற்றும் ஞானியரை வழிபடல், புனித நீராடல், அகிம்சை, நேர்மை, பிரம்மச்சரியம் மேற்கொள்ளல் என்ற சரீர தவம் என்பனவற்றையும் பலன் கருதாமல் பக்தியுடனும் அக்கறையுடனும் செய்யும் போது, அது சாத்விக தலம் எனப்படும் பாராட்டும் பெருமையும் போற்றுதலும் பெறப் பகட்டாகச் செய்யப்படும் தவம் ராஜச தவம் எனப்படும்.

மற்றவர்களை அழிப்பதற்கென்றே உடம்பை வருத்திச் செய்யப்படும் மூடத்தனமான தவம் தாமசத் தவம் எனப்படும்.



இது போல் தானங்களும் மூன்று வகைப்படும். தனக்கு எந்த உதவியும் செய்யாதவனுக்கு பலன் கருதாமல் காலம், இடம், நடத்தை அறிந்து கொடுப்பது சாத்விக தானம், கைமாறு கருதியும், பலன் எதிர் நோக்கியும், மனம் வருத்தியும் கொடுப்பது ராஜச தானம், தகாத நேரத்தில், தகாத இடத்தில் தகாதவர்களுக்கு மரியாதையின்றி அலட்சியமாக செய்யப்படும் தானம் தாமச தானம்.

# மனக்கட்டுப்பாடு என்னும் புனிதப்போர்



இறைவன் திருவடியை அடைய விரும்புபவர்களுக்கு இருக்க வேண்டிய முதல் தகுதி ஐம்புலனடக்கம். "ஒருவரிடம் ஐம்புலனடக்கம், ஆமை தன் உறுப்புக்களைத் தேவைப்படும் போது உள்ளே இழுத்துக் கொள்வது போன்று அமைய வேண்டும்" என்ற கருத்து பகவத்கீதை, திருக்குறள் ஆகிய நூல்களில் இடம் பெற்றுள்ளது.

மனிதனுக்கு இன்பமும் துன்பமும் ஐம்புலன்களால் ஏற்படுகின்றன. ஆசைகள் என்ற புயல்காற்றால் ஐம்புலன்கள் அலைக் கழிக்கப்படுகின்றன. ஆதலால் அறிவு என்னும் அங்குசத்தால், ஐம்புலன்களாகிய யானையை அடக்கி நெறியில் செலுத்த வேண்டும்.

வரம்பு மீறிய புலன்வழி வாழ்க்கையால், ஆக்கபூர்வமாகப் பயன்பட வேண்டிய மனத்தின் ஆற்றல்கள் சிதறி வீணாகிவிடுகின்றன. ஐம்புலன் இன்பங்களில் அழுந்தியிருப்பவன், வாழ்க்கையைப் பாழ்படுத்திக் கொள்கிறான்.

வாழ்க்கையில் சுயக்கட்டுப்பாடு எந்த அளவிற்கு நம்மிடம் இருக்கிறதோ, அந்த அளவிற்கு நாம் உயர்வு பெறுவோம். மனத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு புனிதப் போரை எப்போதும் நாம் நடத்திக்கொண்டிருக்க வேண்டும்.

# மனித உடலில்

**அஞ்ஞானம் ஆன்மீகச் சுவையறியாது!**


நோயில் இருப்பவனுக்கு உணவின் சுவை தெரியாது. அது போல் அஞ்ஞானத்தில் இருப்பவர்கள், உலகப் பற்றில் இருப்பவர்கள் ஆன்மிகத்தின் சுவையை அறிய இயலாதவர்களாக இருப்பார்கள்.

இயற்கை தன் படைப்பில் ஜடப் பொருட்கள், உயிரினங்கள் என்ற வகைகளைப் படைத்துள்ளது. இவை அனைத்திற்கும் ஏராளமான வடிவியல் அமைப்பை உருவாக்கியிருக்கிறது. அவற்றில் ஒரு சில வடிவங்கள் மட்டுமே பிரபஞ்சத்தில் இருந்து ஆற்றலை இழுத்து உள்வாங்கும் தன்மை உடையன. அத்தகைய ஆற்றலை உண்டு பண்ணும் வடிவங்களில் முக்கோணம் முதன்மையான வடிவ மாகத் திகழ்கிறது. முக்கோண வடிவம் மூன்று முனைகளை உடையது. இந்த முனைகள் அனைத்தும் அண்டவெளியில் இருந்து காஸ்மிக் எனர்ஜி எனப்படும் நுண்ணிய மின்காந்தசக்திகளை இழுக்கும் தன்மையைப்பெற்றிருக்கின்றன. எனவேதான் வடிவ கணிதத்தில் கூட (Geometry) முக்கோண வடிவத்தை ஆற்றலும் செயல் விரைவும் உடையது (Dynamical Shape) என்று கூறுகிறார்கள்.

வேதத்தில் அக்னியின் ஆற்றலுக்கும், செயல் வேகத்துக்கும் முக்கோண வடிவத்தையே குறியீடாக அமைத்தனர். மேலும் வடிவியலில் மூன்று கோடுகளை மட்டும் வைத்து எளிமையாக ஒரு வடிவத்தை உருவாக்க வேண்டும்என்றால் அது முக்கோண வடிவம் மட்டுமே. மேலும் விண்வெளியில் இருந்து செயற்கைக் கோள்கள் பூமிக்கு தகவல் தொடர்பு சிக்னல்களை அனுப்புகிறது. இந்த சிக்னல்கள் பூமியில் ஓர் இடத்தில் பெறப்பட்டு பின்பு பூமியின் மற்ற பகுதிகளுக்கும் அனுப்பு வதற்கு பூமியின் மூன்று இடங்களில் ரிசீவர் மூலம் பெறப்படுகிறது. இது ஒரு முக்கோண பிரமிடு வடிவ நெட்வோர்க்கில்தான் நடைபெறுகிறது.

இத்தகைய பிரமிடு அமைப்புகள் மனித உடல் மற்றும் பிரபஞ்சத்தில் எங்கெங்கு அமைந்துள்ளது என்ற வியப்பூட்டும் உண்மைகளை இப்போது ஆராய்வோம். யோகாசனத்தில் பத்மாசனம் முதன்மையான ஆசனம் ஆகும். இந்த ஆசனம் கால்களை மடக்கி கைகளை முழங்காலின் மீது வைத்து சின் முத்திரை பிடித்து அமர்ந்திருப்பார்கள். இந்த ஆசனத்தில் தலை உச்சிப் பகுதியாகவும் முப்பரிமாணத் தோற்றத்தில் முக்கோண வடிவம் உருவாகும். இது சரியான அளவுடைய பிரமிடை ஒத்திருக்கும். இது மிகவும் ஆற்றல்மிக்க நிலையாகும்.

இந்த வடிவமானது பிரபஞ்ச சக்தியை அதிகமாக கிரகித்துக் கொள்கிறது. பத்மாசனத்தில் நமக்கு அதிக சக்தி கிடைக்க, இந்த பிரமிடு வடிவமே காரணமாகும். ஒரு சிலர் தலைக்கு மேலே இரு கரம் கூப்பி பிரார்த்தனை செய்வார்கள். இரு கைகளையும் மேலே தூக்கும் போது முக்கோண பிரமிடு வடிவம் உருவாகி நமக்குச் சக்தி உச்சந்தலையில் சேகரிக்கப்பட்டு. உடலுக்கு உள்ளே பாயும். நமது உடலில் உள்ள முக்கிய பாக



# பிரமிடு அமைப்பு

மான "இதயம்" பிரமிடு போலவே முக்கோண வடிவில் அமைந்துள்ளது. அதனால் தான் இதயம் மெல்லிய மின் அதிர்வுகளை உற்பத்தி செய்து இரத்தத்தை எல்லா வால்வுகளிலும் பம்ப் செய்கி றது. நம்முடைய சிறு நீரகத்தில் கார்டெக்ஸ் (Cortex, Medulla) மெடுல்லா என்ற இரண்டு அமைப்புகள் உள்ளன. இதில் மெடுல்லா என்ற பகுதியில் மெடுல் லரி பிரமிடு அமைப்புகள் அமைந்துள்ளன. இந்த மெடுல்லரி பிரமிடுகள் மிகச் சிறிய வடிவமாக அமைந்துள்ளது. இதில் மெடுல்லா என்ற பகுதியில் மெடுல்லரி பிரமிடு அமைப்புகள் அமைந்துள் ளது. இந்த மெடுல்லரி பிரமிடு தான் இரத்தத்தில் இருந்து சிறுநீரைப் பிரித்து வடிகட்டி வெளியேற்று கிறது. மூளையின் மேற் பரப்பு சாம்பல் நிறத்தில் 6 அடுக்கு செல்களாக அமைந்திருக்கின்றன. இந்த அடுக்கில் 6ஆவது அடுக்கில் உள்ள செல் பிரமிடு வடிவில் அமைந்துள்ளது. இச்செல்களில் உயிர் மின் காந்த அலைகள் (Bio Magnetic Energy) உருவாகி நரம்புகள் மூலமாக மூளையின் Thalamus என்ற பகுதியை அடைகிறது. மூளையில் இந்த இடத்தில் இருந்துதான் உடல் இயக்கத்திற்கான கட்டளைகள் உருவாகின்றன. ஆசனத்தில் திரிகோண ஆசனம் பிரமிடு வடிவத்தை உண்டாக்குகிறது. இதுவும் மிகுந்த ஆற்றலை உண்டாக்கும் ஆசனம் ஆகும். நம்முடைய கைவிரல்களை நன்றாக விரித்து வைத்துப் பார்த்தால் ஐந்து விரல்களுக் கிடையிலும் முக்கோண வடிவில் பிரமிடு உருவாகிறது. அப் போது கைகளில் பிரமிடு சக்தி (ஜீவகாந்த சக்தி) சக்தி ஓட்டம் ஒன்று விரைந்து பாய்வதை நீங்கள் உணர முடியும். அதேநேரம் விரல்களை மடக்கி, உள்ளங் கையை மூடிக் கொண்டால் அந்த ஆற்றல் தடைப் பட்டு விடுவதையும் உணரலாம்.

ஒரு மனிதன் நேராக நின்று இரு கால்களையும் மூன்று அடி இடைவெளி விட்டு அகற்றி வைத்துக் கொண்டு இரு கை களையும் மேலே தூக்கி பக்க வாட்டில் நீட்டி வைத்திருக்கும் போது செங்கோண வடிவம் கிடைக்கிறது. இந்த நிலையும் ஆற்றலை உருவாக்குகின்றன. கீழே இருக்கும் இரு முனைகள் இரு கால்களைக் குறிக்கும். மேல் பக்கம் இருபக்க நேர்கோடுகள் இரு கைகள், அதற்கும் மேலே உச்சி சிரசு. இந்த அமைப்பில் நிற்கும் போது ஆகா யத்தில் உள்ள சக்திகளை எளிதாக ஈர்க்கலாம். இது முக்கோண வடிவத்தை (பிரமிடு) ஒத்திருக்கிறது.

மனித உடலில் ஒவ்வொரு செல்லிலும் மையத்தில் உள்ள நியூக்ளியஸ் பகுதியில் (Nucleus) உட்புறம் 23 குரோ மோசோம்கள் உள்ளன. இவை உயரங் களின் அடிப்படையில் வரிசையாக உள்ளது கடைசியாக உள்ள 23ஆவது குரோமோசோ மைசெக்ஸ் குரோமோசோம் என்கிறார்கள். பெண் ணுக்கு XX அமைப்பிலும், ஆணுக்கு XY என்ற அமைப்பிலும் குரோமோசோம் அமைந்துள் ளது. இருவருக்குமான இந்த குரோமோசோம் அமைப்பானது பிரமிடு வடிவத்தில் முக்கோண மாக அமைந்திருக்கிறது. உயிர்களை உருவாக்கும் அடிப்படை செல் அமைப்பு கூட பிரமிடு வடிவில் அமைந்துள்ளது ஆச்சரியமான விஷயமாகும். இயற்கையின் தேர்வு முறை ரகசியம் இதன் மூலம் நமக்குப் புலனாகிறது. ஆற்றலை உருவாக்க வும், இயக்க ஒழுங்கு சிறப்பாக செயல்படவும் இயற்கை உருவாக்கி உள்ள சிறப்பான வடிவியல் அமைப்புத் தான் பிரமிடு X குரோமோசோம் என்பது நான்கு பிரமிடுகள். Y குரோமோசோம் என்பது ஒரு பிரமிடையும் உருவாக்குகிறது.

* வேல்முருகன்








**மன்மத ஆண்டு தை மாதம்**
**15.01.2016 முதல் 12.02.2016 வரை**

தன் பேச்சு திறமையால் அனைவரின் நட்பை பெறும் மிதுன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ராசிநாதன் பார்வை பெறுவதும் தொழில் ஸ்தானத்தில் சந்திரன் அமர்வதும் உங்களின் தொழில் வளர்ச்சியையும், வியாபாரத்தில் கூடுதல் ஆதாயம் பெறும் வாய்ப்பையும் நல்கும்.

**பணியாளர்களுக்கு**

பணியின் சிரமங்கள் குறையும். மருத்துவ ஆலோசனைகளை பெறுவீர்கள். தொழில் சார்ந்த விடயங்களில் உங்களுக்கு சாதகமான சூழ்நிலை உருவாகும். தொழில் ஸ்தானத்தை அதிகார குரு பார்வை பெற்று இருப்பது உங்களுக்கு மேலும் நன்மையைத் தரும். பொருளாதாரம் சிறக்கும்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

அட்டமஸ்தானத்தில் சூரியன் அமர்ந்தாலும் உங்கள் மதிப்புக்கும், மரியாதைக்கும் எந்த குறையும் இருக்காது. பொதுநலன் கருதி நீங்கள் எடுக்கும் முடிவுக்கு எல்லோரின் ஆதரவும் கிடைக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள்.

**வியாபாரிகளுக்கு**

வியாபாரத்தில் கடந்த காலம் போல ஏமாற்றங்கள் இல்லாமல் வளர்ச்சி பெறுவீர்கள். கடல் சார்ந்த உணவு பண்டம், தங்க அடவு கடை வியாபாரிகளுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும். திறமையாக பேசி நீங்கள் வியாபாரத்தை பெருக்கிக் கொள்வீர்கள். பண வரவு வரும்.

**கலைஞர்களுக்கு**

கலைத்துறையில் போட்டி பொறாமைகள் இருந்தாலும் சக கலைஞர்களின் ஆதரவுகளால் உங்களுக்கு வாய்ப்பும் வருமானமும் கிடைக்கும். உங்களின் முயற்சிகள் சிறப்பாக அமையும். பொருளாதாரத்தில் ஏற்றம் பெறுவீர்கள்.

**பெண்களுக்கு**

பெண்கள் சுயதொழிலில் மேன்மை பெறுவதுடன் தொழில் சார்ந்த சிறப்பு பயிற்சிகளில் கலந்து கொள்வீர்கள். பொன்னாபரண சேர்க்கை உண்டாகும். பொருளாதாரத்தில் மேன்மை பெறுவீர்கள்.

**மாணவர்களுக்கு**

கல்வி சார்ந்த சுற்றுலா சென்று வருவீர்கள். சிவில், நில அளவு கணினி பயிற்சிகள் பெற வேண்டி வரும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

**06.02.2016 சனி இரவு 12.56 முதல் 09.02.2016 செவ்வாய் அதிகாலை 05.46 மணி வரை**

**நட்சத்திர பலன்கள்**

மிருகசீரிடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

நிலங்களில் விவசாயம் செய்யும் வாய்ப்பு கிட்டும். சகோதரரின் அன்பை பெறுவீர்கள். புதிய முயற்சிகள் கைகூடும். வரவுக்குத் தகுந்த பணம் வரும்.

**திருவாதிரை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

காரணமின்றி காரியத் தடைகள் வரும். எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவது அவசியமாகும். வெளிநாட்டுத் தொடர்புகள் நல்ல வாய்ப்பை தரும்.

**புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

புத்திரர்களுக்கு வேலை வாய்ப்பு முயற்சி நன்றாக அமையும். தனிமையை விரும்பினாலும் உங்களை சுற்றி பலதரப்பட்ட பணிகள் தொடர்ந்து வந்து கொண்டே இருக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்: பச்சை, மஞ்சள், ஓரஞ்சு**
**அதிர்ஷ்ட திசைகள் : மேற்கு, தென்மேற்கு, வடக்கு**
**அதிர்ஷ்ட கிழமைகள் : புதன், வெள்ளி, சனி**

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வியாழக்கிழமை காலை 6, 7 மணிக்கு நவக்கிரக கேதுவுக்கு பல வர்ண பூக்கள் வைத்து வணங்கவும் தேங்காய் எண்ணெய் விளக்கு போட்டு வர தடைகள் நீங்கி நன்மை பெறுவீர்கள்.



**பொங்கல் வழிபாட்டில் வாழை**

வாழை, வாழையடி வாழையாக வளரும் இயல்புடையது. வாழை போன்று நமது குடும்பமும், நமது சமுதாயமும் வாழையடி வாழையாக வளமுடன் செழிப்பாக வாழ வேண்டும் என்ற கருத்தில், வாழை பொங்கல் வழிபாட்டில் இடம் பெற்றுள்ளது.




# அசையாத தூயபக்தி!

இறைவனைப் பலர் உலகியல் நன்மைகளுக்காக வழக்கறிஞரை நாடுவதுபோல், மருத்துவரை நாடுவதுபோல் நாடுகிறார்கள். இறைவனை இறைவனுக்காகவே, இறைவனைப் பக்திக்காகவே பக்தியுடன் அணுகுவதற்கு ஒரு பெரிய மனப்பக்குவம் தேவைப்படுகிறது. அந்த மனப் பக்குவம்தான் சுத்தபக்தி.

அசையாத தூயபக்திக்கு இறைவன் அசைந்து கொடுக்கிறான். சுத்தபக்தி பெறுவதற்குத் துறவு மனப்பான்மை வேண்டும். சுத்தபக்தி கொண்டவர்கள் பிரதிபலன் வேண்டாமல், இடைவிடாமல் இறைவனை நினைப்பார்கள். சுத்தபக்தியின் ஆழத்தையும், அகலத்தையும் தன்மையையும், சுத்தபக்தி கொண்ட பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர் போன்றவர்களே அறிவார்கள்.

சுத்தபக்தி ஒரு பிறவியிலேயே ஒருவருக்கு வந்துவிடுவதில்லை. அது முற்பிறவிகளில் செய்த முயற்சியால், நல்வினையால் வருகிறது.



## மனித வடிவில் வரும் இறைவனே குரு!

மனித வடிவத்தில் வரும் இறைவன்தான் குரு என்று கூறப்படுகிறார். உயிரானது மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐந்து புலன்கள் என்ற வேடர்களிடம் அகப்பட்டு, அளவற்ற துன்பங்களை அனுபவிக்கிறது. இந்தப் பொல்லாத வேடர்களிடமிருந்து விடுவித்து உயிரைக் காப்பாற்றி, முக்தி வழங்குவதற்காக இறைவனே குருவாக வருகிறார்.



# புத்திசாலித்தனம் மூளையை குழப்புகிறது!

அவரவர் பெற்ற ஜாதகம் எப்படியோ, அவரவர் களும் அப்படி அப்படியே தான் இயங்குவார்கள் என்பதை தத்ரூபமாக சித்திரித்துக்காட்டும் வகையில் ஒரு கடைகால் ஜாதகத்தை வைத்து அலசி ஆராய்ந்து ரத்தினச் சுருக்கமாக விபரங்களை வாசகர்களுக்குத் தந்து விட மிகவும் ஆசைப்படுகிறோம். இந்த ஜாதகரின் கிரக நிலைகளை, ராசி நவாம்ச கட்டங்கள் மூலம் தந்து விட்டோம்.

ராசிச் சக்கரத்தில், தனுர் லக்னம், தனுர் ராசி, மூல நட்சத்திரம் என்று கண்டவுடனேயே. ஆஹா என்ன பூரிப்பு மனதில் எழுந்து விட்டது. இந்த லக்னத்திற்கு அமைந்து விடும் அத்தனை குணபாவங்களும் நம் மனதிற்கு ஒரு தனித்தெம்பை ஊட்டி, இந்த ஜாதகர் அகராதியில் தோல்வி என்பதே இல்லையென்று ஒரே வார்த்தையில் முடிவு கட்டி விடுகிறோம். ஆனால் அப்போதைக்கப்போது இந்த ஜாதகர் படும் அவஸ்தைகளை அவரால் மட்டுமே. அவரேதான் சந்திக்க வேண்டும். ஆகவே ஜாதகர் முழித்துப் பார்க்கிறார். "என் ஜாதகம் ஒசத்தியாயிற்றே. கிரகாச்சாரங்கள் என்னை இந்தப் பாடு படுத்துகிறார்களே, இதற்கு காரணம் தான் என்ன" என்று திக்குமுக்காடும் நிலையில், இதோ கீழ்க்கண்ட விமர்சனங்கள்.

ஜாதகத்தைச் சற்று பாருங்களேன். உங்களுக்கும் இந்த ஜாதகம் ஒசத்தி என்றுதான் படுகிறதா? லக்னம் என்னவோ உறுதியான லக்னம்தான். லக்னாதிபதி பிரஹஸ்பதியாகிய குரு தான். அந்த குரு 7ம் வீட்டிலிருந்து லக்னத்தைப் பார்த்தபடியே இருந்தும் இந்த கதி இவருக்கு வேண்டுமா?

அடுத்த காட்சியைப் பாருங்கள். துடிதுடிக்கும் ஓட்டக்காரச் சந்திரன், இந்த லக்னத்திற்கு அஷ்டமாதிபதியாகியவன். அவனே மனோகாரகன் அன்றையதினம் கேதுசாரத்தில் (மூலம்) லக்னத் திலேயே நின்று கொண்டு இந்த ஜாதகரை உசுப்பிக் கொண்டு, அநாவசிய துடிதுடிப்பை சதா ஏற்படுத்திக் கொண்டேயிருப்பதால், இவருக்கு உருப்படியாக எந்தக் காரியத்தையும் சரிவர எடைபோட இயலவில்லை.

| | | | |
|---|---|---|---|
| சனி | சுக் | ராகு சூரி செவ் | புதன் குரு |
| | ராசி | | |
| | | | |
| லக் / சந் | கேது | | |

| | | | |
|---|---|---|---|
| | செவ் | லக் / சந் | |
| | நவாம்சம் | | சூரி சுக் கேது |
| குரு ராகு | | | சனி |
| | | புதன் | |

குரு பார்த்தும் என்ன பயன்? அதே வேளையில் 7ஆம் இடத்தில் உள்ள புதன் லக்னத்தில் உள்ள சந்திரனை சதா பார்த்துக்கொள்வதால் இவர் ஒரு அறிவுக்களஞ்சியம் தான். இவருடைய நுண்ணறிவு. அறிவாற்றல், ஆலோசனை தருவதில், வல்லமை இத்தனையும் அடுத்தவருக்குத்தான் பிரயோ ஜனமே தவிர தனக்குப் பயனே தருவதில்லை என் பதுதான் அனுபவம் கண்ட உண்மை.

அடுத்த காட்சியைக் காண்போம். மேலே சொல்லப்பட்ட புதனும் சந்திரனும் கேந்திரங்களில் பார்த்துக் கொண்டிருப்பதால், இவருடைய மகிழ்ச் சியில் தொடர்ச்சியில்லை. ஏனோ தெரியவில்லை. தலை முழுகிப் போனது போல, கப்பல் கவிழ்ந்து விட்டது போல, திடீர் திடீரென கன்னத்தில் கைவைத்துக் கொண்டு தனக்குள் வேண்டாத கவலையை உற்பத்தி பண்ணி, சோக மேகக்கூட்டத் திற்குள் தம் மனதை இட்டுச் சென்று சஞ்சல நிலைக்கு ஏன் போக வேண்டும்? இது புதன் சந் திரன் இவாளுக்குள் ஏற்படுகிற ஒரு அநாவசிய சமாச்சாரம். ஒரு புத்திசாலிக்கு இத்தனை தண் டனை வேண்டுமா?



அடுத்த காட்சி லக்னாதிப தியும் சப்தமாதி பதியும் ஒன்றாய் இணைந்து சப்தமத்தில் அமர்ந்து கொண்டு. லக்னத்தைப் பார்த்துக் கொண்டேயிருப்பதால், இந்த ஜாதகர், எவரோடும் தொடர்பு கொள்ளும் முன்பேயே, அவர் எப்படியோ இவர் இப்படித் தானே என்ற குழப்பத்தைத் தனக்குள் ஏற்படுத்தி, அடிக்கடி இப்படி மனதில் வெள்ளோட்டம் பண்ணிக் கொண்டேயிருப் பதாலும், இவர் சப்தமத்தில் கெட்டிக்கார புதனும், கம்பீர குருவும் சேர்ந்து கொண்டு யார் புத்திசாலி என்ற போட்டியை அவாளுக்குள்ளேயே உற்பத்தி பண்ணி இந்த ஜாதகரைப் படுத்துகிற பாடு இருக்கி றதே அதற்கு இரக்கம் கொள்ளுங்கள்.

அடுத்த காட்சி தனாதிபதியும் சிந்திக்கத் தூண்டுபவனுமாகிய சனி இவருக்கு 4ஆம் வீட்டில் அமர்ந்து விட்டதில் தவறே இல்லை. மற்றும் அவர் 3ஆம் பார்வையாக யோகாதிபதிகளாகிய சூரியனையும், செவ்வாயையும் சதா பார்த்துக் கொள்வதால் ஜாதகரீதியாக அதிகப்படியான ஆசீர் வாதங்களையும் இவர் பெற்று விட்டார். இனி சவால் மறுபுறம் என்ற நிலையில் இந்த சனிக்கி ரகமே சந்திரா ராசிக்கு அர்த்தாஷ்டத்தில் (4ஆம் இடத்தில்) அமைந்து விட்டதால், பழமைக் கருத் துப்படி இந்த ஜாதகர் "சச யோகம் பெற்று விட்டார் இவரை எவரும் அசைக்க முடியாது" என்ற ஏகோ பித்த பாராட்டுக்களையும் இதுவரை பெற்று வந் தவ ராயிற்றே.

ஆனால் நடப்பதென்ன? இந்த சனி, சந்திரன் பார்வை அநேக வேளை களில் ஜாதகர் மனதில் சபலத்தை நப்பாசையை உண்டு பண்ணி நன்ந டத்தையில் மாற்றத்தையும், குறுக்கு வழி சம்பாத் தியத்திற்கும், அகோரமான சிற்றின்ப உடலுறவு களுக்கும் அடிக்கடி வேட்கையை உண்டாக்கி விடுவதால் ஜாதகரின் மதிப்பு மரியாதை கெடுகி றது. ஜாதகருக்கு மற்றவர்களை காலை வாரி விட் டாவது தான் சுகபோகம் அனுபவித்தால் போதுமே என்ற குறிக்கோளை கடைப்பிடிக்க இட்டுச் செல்ல வைக்கிறது.

ஆகவே மேலே கண்ட காட்சிகளிலி ருந்து நாம் தெரிந்து கொள்வதென்ன? ஒவ் வொரு ஜாதகத்திலும் ஆசீர்வாதங்கள் ஒரு புறம். சவால்கள் மறு பக்கம்.

இது பகவான் திரு விளையாடல் ஜாத கத்தை கையிலெடுத்த உடனேயே பழமைக் கருத்துப்படி ஜாதகர் ஏகப்பட்ட யோகங் களை பெற்று விட்டார் என்று புகழாரம் சூடு வதும் தவறு மேலே சொல்லப்பட்ட காட் சிகள் ஜாதகரை என்ன பாடுதான் படுத்தும் என்று நாம் அறிந்து கொண்டு அதற்கேற்ற முறையில் ஆறுதல் ஆலோசனை தந்து விட்டால் ஜாதகருக்கு எத்தனை ஆனந்தம் போங்கள்.

இதல்லவோ தர்மத்தின் வழி, ஜாதகரும் அநாவ சிய ஜபர்தஸ்துகளை, அனாவசிய ஆசைகளை அகோர சுயநலத்தை இனியாவது விட்டு விலகி மற்றும் தன் ஜாதக ரீதியாக கிரகா சாரங்கள் தன்னை உச்சாணிக்கு கொண்டு போய் விடுவார்கள் என்ற நிலைக்கு புரிந்து கொண்டாலே போதும் சவால்களை ஜெயித்துக் கொள்ளவும் முடியும். சாதனை படைத்து விடவும் முடியும்.

* மிராண்டா



## தொழில் பெருக

# காயத்ரி மந்திரம்

வியாபாரம் பெருகவும், தொழில் சிறக்கவும் அறிவுத் திறன் மிகவும் அவசியமாகும். "அறிவுடையார் எல்லாமே உடையார்" என்பதற்கிணங்க, அறிவுத் திறன் பெற்றோர் புத்திசாலித்தனமாக வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்வார்கள். தொழிலையும் சிறக்கச் செய்வார்கள்.

நமது அறிவுச் சூரியன் விழித்து எழுவதற்குத் தூண்டி விடும் மந்திரம் ஒப்பற்ற காயத்ரியாகும். அறிவுச் சூரியன் விழித்து எழுந்தால்தான் ஆக்க பூர்வமாகச் செயல்பட முடியும். அப்போதுதான் வியாபாரம், தொழில் சிறக்க முடியும். பெருக முடியும். அறிவைத் தூண்டி விடுவதற்கும் ஒரு மகத்தான சக்தி வேண்டும். இந்தச் சக்தியே கடவுளாகும். இந்த மகத்தான சக்தியைப் பெறுவதற்கு ஶ்ரீகாயத்ரீ மந்திரம் உதவும். கையில் பணமே இல்லாமல் ஏதேனும் ஒரு தொழிலைச் செய்பவர்கள் சில ஆண்டுகளில் பெரிய தொழி லதிபர்களாக விளங்கக் காணுகிறோம்.

வண்டியில் சாமான்களை வைத்துக் கொண்டு வீதி வீதியாகச் சென்று வியாபாரம் செய்து வந்தவர்கள். சில ஆண்டுகளில் பெரிய வியாபாரிகளாகத் திகழ்வதைக் காண்கிறோம். இவை அனைத்திற்கும் பக்கபலமாக இருப்பது அறிவுத் திறனும், கூர்ந்த மதியுமாகும்.

இந்தக்கூரிய மதியைத்தருவது ஶ்ரீகாயத்ரீமந்திரம் என்றால் மிகையில்லை. இயற்கையாகவே நுண்ணறிவைப் பெற்றவர்கள் எந்தவிதமான கைப் பொருளின்றி வெகு விரைவில் முன்னேறுவதைக் கண்கூடாகக் காணுகிறோம். இவர்கள் ஶ்ரீகாயத்ரீ மந்திரத்தையும் முறைப்படி உச்சரித்து வருவார்களானால் இன்னும் சிறந்து விளங்குவார்கள். வியாபாரத்தைப் பொறுத்த வரையில் அல்லது தொழிலைப் பொறுத்த வரையில் போட்டிகள் பலமாக இருந்தாலும் கூட சிலர் அமோக வெற்றி பெறுவதற்கு அவர்களின் மதிநுட்பமும் செயல் நேர்த்தியுமே காரணமாகும்.

வியாபாரத்தில் பெருக்கம் ஏற்பட வேண்டும். தொழில் சிறக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் வியாபாரம் தொழில் போன்றவற்றில் ஈடுபடுபவர்கள், "காயத்ரீ" என்ற சிறப்பான மந்திரத்தை மட்டும் உச்சரித்தால் போதாது. அறவழியில் செயல்பட வேண்டும். அறவழியில்தான் பொருளீட்ட வேண்டும். அப்போதுதான் பொருள் மேலும் மேலும் பெருகும். வியாபாரம் பெருகும். தொழில் சிறப்படையும்.

"வாணிகம்செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தம்போல் செயின்"
என்பது குறள்.

பிறர் பொருளையும் தம்முடைய பொருள் போலப் பேணி வாணிகம் செய்தால் அதாவது அற வழியில் வியாபாரம் செய்தால், இவ்வாறு செய்யப் படும் வியாபாரம் மேலும் மேலும் பெருகும் என் பதே இந்தத் திருக்குறளின் சரியான விளக்கமாகும்.

பத்துப் பாட்டும் இதையேதான் கூறுகிறது. "கொள்வதும் மிகைக் கொள்ளாது. கொடுப்பதும் குறை கொடாது" வியாபாரம் செய்ய வேண்டும் என்று விளக்குகிறது. "காயத்ரீ" மந்திரம் என்னும் சிறப்பான மந்திரத்தை உச்சரித்து வருபவர்களுக்கு இவ்விதம் நடுவு நிலை பிசகாமல் வியாபாரம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். எனவே வியாபாரம் செய்வோருக்கும், தொழில் செய்வோருக்கும் இது பொருந்துவதாகும்.

**காயத்ரீ மந்திரத்தை உச்சரிக்கும் முறை**

வெறும் தரையில் உட்கார்ந்து மந்திரத்தை உச் சரிக்கக் கூடாது. மணைப் பலகையிலோ அல்லது ஒரு தடிப்பான துணி விரிப்பிலோ உட்கார்ந்து உச் சரிக்க வேண்டும். கோயில்கள், ஆற்றங்கரை குளத் தங்கரை, அமைதியான தோட்டம், மொட்டை மாடி போன்ற இடங்களில் உட்கார்ந்து அமைதியாக உச்ச ரிக்க வேண்டும். காலையிலும், நண்பகலிலும் செய் பவர்கள் நின்று கொண்டுதான் உச்சரிக்க வேண்டும். மாலையில் உச்சரிப்பவர்கள் மேற்கு நோக்கியோ வடக்கு நோக்கியோ, அமர்ந்த நிலையில் உச்சரித்து வருவது சிறப்பாகும்.

1008 தடவை உச்சரிப்பது நலமாகும். முடியா தவர்கள் 108 தடவையாவது உச்சரிக்க வேண்டும். அதிக அளவில் உச்சரிப்பது முக்கியமல்ல. முறைப் படி மனம் ஒன்றி உச்சரித்து வரவேண்டும்.

எல்லா மந்திரங்களையும் "ஓம்" என்ற பிரணவ மந்திரமுடன் ஆரம்பிக்க வேண்டும். அவசர அவ சரமாக உச்சரிக்க வேண்டியதில்லை. எங்கேயோ மனதை பறிகொடுத்து விட்டு ஒரே மூச்சில் அவசர அவசரமாக இந்த மந்திரத்தை உச்சரிக்கக் கூடாது. "காயத்ரீ" மந்திரத்தை முறைப்படி உச்சரித்து நன் மைகளை அடைய வேண்டும் என்ற எண்ணத்தில் மனம் ஒன்றி ஆர்வமுடன் உச்சரிக்க வேண்டும்.

**காலையில் சூரிய உதயத்தின் போதும், மாலையில் சூரியன் அஸ்தமனத்தின் போதும் உச் சரித்து வருவது பெரிதும் நலம் பயப்பதாகும்.**

**அறிவில் நல்ல தெளிவைப் பெற்று உயர்ந்த நிலையை அடைய விரும்புபவர்கள்.**

**நல்ல காரியங்களில் ஈடுபட்டுப் புகழுடன் விளங்க விரும்புபவர்கள்.**

**மனக்கட்டுப்பாட்டுடன் வாழ்ந்து, வாழ்க் கையின் மகத்தான வெற்றிபெற விரும்புப வர்கள் துணிவு பெற்றவர்களாக விளங்கி.**

**இறைவன் முன்பு எல்லோரும் சமம்!**

எல்லோரும் இறைவனின் குழந்தைகள், எல்லோரும் இறைவனின் அன்புக் குரிய வர்கள். இறைவன் முன் எல்லோரும் சமம். இறைவன் முன்பு ஆண் பெண் என்ற வேற்றுமை இல்லை என்பதுதான் முழு உண்மை. திரு நாளைப் போவார், திருப் பாணாழ்வார் போன்ற வர்களின் வரலாறுகள் இறைவன் முன்பு அனை வரும் சமம் என்ற உண்மையை உறுதிப்படுத்துகின்றன.



**வியாபாரம், தொழில் இவைகளில் மேலும் மேலும் மேன்மை அடைய விரும்புபவர்கள்**

கலையார்வம் மிக்கவர்கள் சிறந்த எழுத்தா ளர்களாகவும், பேச்சாளர்களாகவும் சிறக்க விரும்புபவர்கள் இனிய சுகமான வாழ்வை வாழ விரும்புபவர்கள் அழகிய அறிவுமிக்க குழந்தை களைப் பெற்றுச்சிறக்க விரும்புபவர்கள்

இவர்கள் அனைவரும் இந்த மந்திரத்தை உச்சரித்து வரவேண்டும். நண்பகல் வேளையில் இந்த மந்திரத்தை உச்சரிக்க முடியாவிட்டாலும் காலையிலும் மாலையிலுமாவது உச்சரித்து வரவேண்டும்.

1008 தடவை அல்லது 108 தடவை உச்சரிக்க முடியாவிட்டாலும் கூட 18 தடவையாவது உச்சரித்து வருவது நல்ல பலனளிக்கும்.

* ஆபஸ்தம்பன்



# ஒரு ஆத்மாவின் அனுபவங்கள்



உபநிடதங்கள், பகவத்கீதை போன்ற நூல்களில் கூறப்பட்டுள்ள பல அமர உலகச் செய்திகள் இன்றைய அறிவியல் ஆய்வுகளோடு ஒத்துப் போகின்றன. அமெரிக்க நாட்டு, ஐக்கிய மாகாணத்தைச் சேர்ந்த நீதிபதி எட்மண்ட் என்ற அறிஞரின், "சூட்சும சரீரத்தில், ஒரு அமர ஆத்மா" என்ற நூல் விண்ணுலக நிலைகளை விளக்கியது.

1913ஆம் ஆண்டு லெவி என்பார் விண்ணுலகில் ஒளி ஆகாயத்தில் உண்மை நிகழ்ச்சிகள் அவ்வப்போது பொறிக்கப்பட்டு, உயர் ஞானிகளால் படித்தறியப்படுவது பற்றி ஒரு நூல் எழுதியுள்ளார்.

ஜே.மாக்லென்ட் கிரேக் என்ற அமெரிக்க அறிஞர் ஒளி ஆகாயத் தன்மையைப்பற்றி ஒரு ஆய்வு விரிவுரை ஆற்றியுள்ளார். அது நூலாக வந்துள்ளது. அமரர் தமிழறிஞர் மறைமலையடிகளார் அவர்கள், மேற்கண்ட அமெரிக்க அறிஞர்கள் அறிந்த, ஒளி ஆகாய நிலைகளைப்பற்றி மரணத்தின் பின் மனிதர் நிலை என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். நூலாசிரி யர், 1977ஆம் ஆண்டு முதல் நாள்தோறும் அமர உலக சுத்த ஆத்மாக்களோடு ஆன்ம விசாரம் தொடர்பாகப் பேசி வருபவர்.

அமர உலகத்து வாழும் வேலூர் வே.பா.வேதபுரி என்ற பெயருடைய ஆசிரியரின் மாமனார் ஸ்வீடன் பர்க்கின் நூல்களைப் படித்தவர். ஸ்வீடன்பர்க் பல்வேறு அண்டங்கட்குத் தன் சூட்சும சரீரப் பயணம் செய்த அனுபவங்களை எழுதிய, அமர ஆன்மவுலக ஆய்வு முன்னோடிகளுள் ஒருவர். இராமநாதபுரம் அரசர், விவேகானந்தரின் சிகாகோ பயணம் சென்று திரும்புகையில் அவரைத் தேரில் வைத்து, தன் கையால் தேர் இழுத்த புண்ணியவான், அமரர் பாஸ்கர சேதுபதி அவர்களோடு, 1994 இல் இராமநாதபுரம் அரச குடும்ப மிக நெருங்கிய உறவினர்களுக்காக, எழுத்து அட்டை வழி பேசும் வாய்ப்பு கிடைத்தது. அதன் மூலம் பல அரிய அறிவுரைகள் பெறப்பட்டன.

22.05.2000 திங்கட்கிழமை அன்று நள்ளிரவு அவரோடு, பெண்டுலம் வழி பேசினேன். பல இரகசியங்களைச் சொல்லி வாழ்த்தினார்கள். விவேகானந்த சுவாமிகள் அமர உலகில் மிக மிக உயரத்தில் இருக்கிறார். அவரை நான் பார்க்கிறேன் என்ற இனிய செய்தியையும் நவின்றார். என்னைப் பற்றிய எதிர்கால இரகசியம் ஒன்றையும் கூறினார். அது முன்னரே பல அமர முனிவர்களால் எனக்கு அறிவிக்கப்பட்ட ஒன்று பிதிர் உலகம், விண்ணுலகம், சுவர்க்கம் என்ற மூன்றும் ஒன்றே என அமர உலகு வாழ் அமரர்கள் வே.பா.வே, பாஸ்கர சேதுபதி இருவரும் சொல்கின்றனர். நூல்களின் வழியும், விஞ்ஞான ஆய்வின் வழியும் அது உண்மை என உறுதிப்படுகிறது. மரணத்தின் பின் மனிதர் நிலை என்ற நூலை எழுதிய மறைமலையடிகளின் நல்லாத்மா இன்று அமர உலகில் இல்லை என அமரர் வே.பா.வே. அவர்கள் உணர்த்தினார்கள். எனவே அவரின் நேரடி உதவியை நான் பெற இயலவில்லை. ஒளியுலகம், விண்ணுலகம், அமர உலகம், சுவர்க்கம் என்றெல்லாம் அழைக்கப்படும் பிதுர் உலகில் வாழும் (1.06.2000) எனது மாமனார், அமரர் வே.பா.வே, அமரர் இராமநாதபுரம் மன்னர் பாஸ்கர சேதுபதி இருவருடனும், நான் ஆய்ந்து, படித்து அறிந்து வந்துள்ள கருத்துகளைச் சொல்கிறேன். நான் எடுக்கும் குறிப்புகளையும், நான் படிக்கும் போது நூல் நல்கு செய்திகளையும் அவர்கள் இருவரும் அவ்வப்பொழுது என் மேசைக்கு அருகே சூட்சும நிலையில் இருந்து படிக்கிறார்கள். அவர்களுடன் பெண்டுலம் வழி கலந்துரையாடல் செய்கிறேன். பல கருத்துக்கள் அங்கு நடப்பது உண்மை என இசைகின்றனர். சில அவ்வாறு இல்லை என மறுக்கின்றனர். சில எங்களுக்குத் தெரியாது என வெளிப்படையாகக் கூறிவிடுகின்றனர். சில எங்கட்குத் தெரியவில்லை எனினும் உங்கள் கருத்து ஏற்புடையதாகலாம் எனக் கூறுகின்றனர். அவர்களின் தோன்றாத் துணையோடு இப்பயணக் கட்டுரை தொடங்குகின்றது.

### அமர உலகில் கடவுள்

விண்ணுலகில், பூவுலகை விட்டு, மேலே சென்று, நல்வினைப் பயன் காரணமாக பிதுரர் உலகை அடைபவர்கள் தமக்கு அண்மையில் இறைவன் இருப்பதை உணர வாய்ப்புண்டு. இந்த உலகுக்கு மேலே மண்ணுலகில் வாழும் நம்மால் ஊகிக்க முடியாத, அரை உலகில் வாழும் அந்நல்லோரும் அறிய முடியாத பல மேல் உலகுகள் உள்ளன என நம்புகின்றனர். பண்டைச் சாத்திரங்களின் கூற்றுக்கள் இதற்கு ஓரளவு துணை செய்ய முடிகின்றது.

### ஒளி வடிவில் இறைவன்

திருமுறை, பண்டார சாத்திரங்கள். வேத உபநிடத நூல்கள் முதலியவற்றின் மேம்பட்ட ஞானம் வரும் போது, குரு வழி ஐயத் தெளிவு வரும் போது, அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த பூர்த்தியாகி, அணுவினுக்கு அணுவாய், சூட்சுமப் பொருளாய், அகண்டாகார வியாப்தியாய், நுண் ஒளியாய், அண்டத்தும் நம் பிண்டமாய உடம்பிலும் ஒளிரும், ஐந்தொழிற் கருத்தாவாய பரமசிவனை, பரமாத்வாவை, பரந்தாமனை, எல்லாமய ஒரே கடவுளை நுண்ணிய மிகப்பெரிய ஒளிவடிவில் காண்கிறோம்.

### தேஜோமயக் கடவுள்

மண்ணுலக மாந்தர், விண்ணுலக அழைப்பு வந்த உடனேயே, சூட்சும நுண்ணிய பொருளாக, உடம்பற்ற, ஒளியுருவாக ஆகி விடுகின்றனர். ஒளியுடம்பு என்ற சொல் உபசாரமானதே அன்றி உண்மையில் அது உடம்பு அற்ற நிலையே. மனிதன், பூத உடலை விடுத்து மிக நுண் ஒளிப் பொருளாக மாறும் போது. தெய்வம் எவ்வாறிருக்கும். அது மிக மிக நுண்ணிய, மிக மிகப் பெரிய மிக மிகப் பேராற்றலும் அதிக ஞானமும் உடைய தேஜோமயம் என்னும் ஒளி மயமானதாகவே இருக்கும் என்பது தெளிவு.

### இறைவனின்கட்டளை!



மனிதனிடம் தெய்வீக இயல்புகள், அசுர இயல்புகள் ஆகிய இரண்டும் உள்ளன. இவற்றில் விவேகத்தின் துணையுடன் பயிற்சியும் முயற்சியும் மேற்கொண்டு, அசுர இயல்பைத் தவிர்த்துத் தெய்வீக இயல்புகளில் மனிதன் நிலைத்திருக்க வேண்டும். இதை இறைவனின் கட்டளை என்று சொல்லலாம்.

### அளவுகடந்த ஞான மும் ஆற்றலும்

பேரண்டத்தில், காஸ்மாஸில் அமைந்த எல்லா அண்டங்களிலும் நடந்த, நடக்கின்ற, நடக்கப் போகும் மூன்று கால நிகழ்ச்சிகளும் அவர் அன்றி அசையாத அவர் அறிந்த, அவர் திட்டமிடும் செயல்கள் என்பதும் நூல்கள், சாத்திரங்கள் ஒப்புக் கொண்ட ஒன்று. மனிதனுக்குக் கண் என்ற உறுப்பும், மற்ற உறுப்புகளும் இருப்பது போல் இறைவனுக்கும் உண்டா என்றால் இல்லை. தேவை இல்லை என்பதே நமது பதில். அமர உலகில் வாழும் நம் முன்னோர்கள், இறைவனது அருளாற்றலை, தேஜோமய இயல்பை அவ்வமர உலக அமைப்பில் எங்கணும் காண்கிறார்கள். அமர உலக நம் முன்னோரின் ஆத்மாக்களே அதி சூட்சும கனபரிமாணமற்ற, எல்லா ஆற்றலுமுடைய ஒளிமயமானவை தான் என்பதை மறக்க முடியாது. ஆத்மாவை, ஆள்பவனாக, பரமாத்மா அதே போன்ற தேஜோமய அகண்டகார நுண்மை உடையவர். அவரது புலனறிவு மூன்று காலத்தையும் அறிந்து அறியும், ஆற்றல் இயல்பாக உடையது.

டாக்டர் வை.தட்சிணாமூர்த்தி



ஒவ்வொரு மனிதனிடமும் சின்னங்களை வலது பக்க மூளையில் பரப்பி விரும்பியதை அடையும் பேராற்றல் இருக்கிறது. அதிசயம் மேஜிக் என்று சொல்லுவது, இப்போது சின்னங்களுக்கு முன்னால் சாதாரணமாகிவிட்டது. உங்களிடம் மறைந்திருக்கும் இரட்டையர்களை சின்னங்களால் செயல்பட வைத்து நீங்கள் இயற்கையாகவே அதிசயங்களைச் செய்யலாம். உங்கள் வாழ்க்கையில் அசாதாரணமான விஷயங்களை செயல்களை நீங்கள் இப்போது சாதாரணமாகச் செய்யலாம். பாமரனும் எளியவனும் படிப்பறிவு இல்லாதவனும் கூட இந்த அதிசயங்களை நிகழ்த்தி பெரிய வசதிகளை அடையலாம்.


சின்னங்கள் தான் நீங்கள் அதிசயங்களைச்

# டரட் சின்னங்களும் அதன் பலன்களும்

செய்வதற்குத் திறவுகோலாக இருக்கிறது.

சின்னங்களின் பயன்பாடுகளை யாரும் இன்னமும் உணரவில்லை.

டரட் சின்னங்கள் என்று சொல்லப்படுவது 22 விதமான படங்கள் சீட்டாடும் சீட்டுக்களில் உள்ள ராஜா ராணி ஜாக்கி படங்கள் போல 22 விதமான படங்கள் தாந்திரீகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்தச் சின்னங்களைப் பயன்படுத்தி Tarto cards குறி சொல்லுதல், எதிர்காலத்தைச் சொல்வதற்கு இந்த டரட் சீட்டைப் பயன்படுத்தி வருகிறார்கள்.



இந்தச் சீட்டில் உள்ள படங்கள் பல உள் அர்த்தங்களைக் கொண்டுள்ளது. சாதாரணமாகப் பார்க்கும் போது படமாகத்தான் தெரிகிறது. ஆனால் அவைகள் சூட்சும மனதில் வேலை செய்யக் கூடியது என்கிறார்கள்.

மேலும் 56 கார்டுகள் மைனர் அர்க்கானா என்று சொல்கிறார்கள். ஆக 78 டரட் கார்டுகள் உள்ளன.

டரட் சின்னங்கள் மறைமனதைத் திறப்பதற்கான சின்னங்கள் என்கிறார்கள். மேலும் டரட் கார்டுகளை தியானத்துக்குப் பயன்படுத்தினால் உள்ளன ஆற்றல்களை இதன் மூலம் இயக்க முடியும் என்றும் சொல்கிறார்கள்.

டரட் கார்டுகள் மிகவும்பழமையான காலங்களில் இருந்து பயன்படுத்தப்பட்டு வந்திருப்பதாகச் சொல்கிறார்கள். டரட் கார்டுகளை எந்தக் காலத்தில் யார் பயன்படுத்தி வந்தார்கள் என்று யாருக்கும் தெரியாது. கபாலா என்று சொல்லப்படும் தாந்திரீகர்களும் இந்த டரட் சின்னங்களைப் பயன்படுத்தி வந்தார்கள் என்று யாருக்கும் தெரியரது. கபாலா என்று சொல்லப்படும் தாந்திரீகர்களும் இந்த டரட் சின்னங்களைப் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் பரவலாக டரட் சின்னங்களைப் பயன்படுத்தி பலரும் பெரும் நன்மைகளை அடைந்துள்ளார்கள்.

ஆர்.ஜாசன் என்பவர் எப்படி டரட் சின்னங்களைப் பயன்படுத்தி வெற்றியடைந்தார் எனப் பார்ப்போம்.

தினசரி ஜாசன் என்பவர் சுலபமான முறையில் டரட் சின்னங்களை தினசரி இரவு படுக்கும் முன்பு பார்த்து வந்தார். அதன் பலனாக ஒரு பெரிய கோடீசுவரரிடம் கார் ஓட்டுனராகச் சேர்ந்தார். நல்ல சம்பளம் கிடைத்து வந்தது. அவரது முதலாளி உலகிலேயே உயர்ந்த கார் தான் வைத்து இருந்தார்.

ஜாசன் இந்தக் கார் டிரைவர் வேலையில் சேர்ந்தார். அடிக்கடி கார் முதலாளி பெரிய பெரிய ஓட்டல்களில் பார்ட்டிக்குப் போவார். பெரும் கோடீசுவரர்கள் கார் டிரைவர்களுக்கும் பெரும்



மதிப்பு இருந்தது. நாளடைவில் முதலாளியின் மகள் ஜாசன் மேல் காதல் கொண்டார். ஜாசன் இளைஞர் நல்ல அழகான தோள்களும் உடையவர்.

விரைவில் ஜாசன் கோடீசுவர பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். அதனால் பெரும் பணக்காரர்களில் ஒருவராக ஆகிவிட்டார். சைக்கோ சிம்பலாஜி மூலம் டரட் சின்னத்தை தினசரி பார்த்து வந்ததில் இது போல் பெரும் வசதியான வாழ்வு கிடைத்தது என்கிறார்.

டரட் சின்னங்களில் மேஜர் அர்க்கானாவில் 22 சின்னங்கள் உள்ளன. அது 22 விதமான செயல்பாடுகளைக் குறிக்கிறது. 22 விதமான டரட் கார்டுகள் உள்ளன.

இது போல மைனர் அர்க்கானா என்று 58 டிரட் கார்டுகள் உள்ளன. இவைகளில் The sword வாள் கோப்பை, பெண்டக்கில் Pentacle ஐங்கோணம் Magic வாண்ட் Magic Wand என்னும் மந்திரக் கோல் ஆகிய நான்கும் 58 அர்க்கானா சின்ன ங்களில் முக்கியமான சின்னங்களாகும்.

இந்த நான்கு சின்னங் களும் மறைமனதின் ஆற்றல்களால் செயல்பட்டு பெரும் வசதிகளைத் தருகிறது.

1. Pentacle ஐங்கோணச் சின்னம்

இது உள்ளுணர்வுகளை செயல்பட வைக்கிறது It symbolise sensation.

2. The Wand மந்திரக்கோல் இது நடக்கும் சம்பவங்களை முன்கூட்டியே தெரிவிக்கும் Wands Symbolise Intution.

3. கப், கோப்பைச்சின்னம். இது உணர்ச்சி வசப்படுதல் உணர்வுகளில் செயல்படுதல்.

4. வாள் The Sword சின்னம்.

இது நினைவு ஆற்றல்களை ஏராளமாகக் கொடுக்கிறது. Swords symbolize thinking.

ஆகவே இந்த நான்கு சின்னங்களும் மறை மனதில் நான்குவிதமான செயல்பாடுகளைச் செய்யக் கூடிய ஆற்றல் படைத்த சின்னங்களாகும்.

இந்த நான்கு சின்னங்களில் இருக்கும் நான்கு விதமான சக்திகளைச் செயல்பட வைக்க இச்சின்னங்களை வலது மூளையில் பார்த்து மறைமனதில் பதித்து செயல்பட்டு சகல காரிய சித்தியடையலாம். விரும்பிய பொருள்களை அடையலாம். பெரும் பணவசதிகள் வந்து சேரும். உயர் ஞானத்தையும் பலவிதமான தாந்திரீக சக்திகளையும் அடையலாம்.

என்.தம்மண்ணன்





# வேண்டும் நல்ல சிந்தனை!



மானம் காக்க ஆடை உதவுகிறது. அதுபோல் மனத்தைக் காப்பதற்கு நல்ல சிந்தனைகள் உதவுகின்றன.

நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்ய முடியும். "விதை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்காது. தினைவிதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்" என்று பழமொழிகள் கூறுகின்றன. இவை போன்ற பழமொழிகள் எதுவும் சும்மா உருவாகிவிடவில்லை.அவை நீண்ட நெடிய அனுபவத்தின் வெளிப்பாடுகள் என்பதை நாம் உணர வேண்டும்.



கோபம், பொறாமை, வெறுப்பு போன்றவற்றை உள்ளத்தில் விதைத்தால் ஒரு நெல்மணியை விதைத்தால் அது பல நெல் மணிகளைத் தருவதைப்போல், ஒரு மாங்கொட்டையை நட்டால் அது பல மாங்கனிகளைத் தருவதைப்போல் அது பல மடங்காக உள்ளத்தில் வளர்ந்தோங்கி அறுவடையாகும். அதனால் நம் வாழ்க்கை பாதிக்கப்படும். இதுபோலவே நல்ல எண்ணங்களை நாம் நம் உள்ளத்தில் விதைத்தால், அவை பல மடங்காக வளர்ந்தோங்கி நம் வாழ்க்கையை வளப்படுத்தும்.

பயிரை வயலில் வளரச் செய்வதால் பயன் உண்டு. களையை வயலில் வளரச் செய்வதால் பயனில்லை. நல்ல எண்ணங்கள்தான் பயிர். தீய எண்ணங்கள்தான் களை.

தீய சிந்தனைகள் காலப் போக்கில் மன அமைதியைக் குலைத்துவிடும்.

சிறந்த எண்ணங்கள் இறைவனின் கோயில்களே ஆகும்.

மனிதன் மனநிம்மதி இல்லாமல் இருப்பதற்கு 1. உலக ஆசைகள், 2. தவறான அணுகுமுறைகள் காரணமாக அமைகின்றன.

மனிதர்களின் வாழ்வியல் மேம்பாட்டிற்காகவும் நல்ல சிந்தனைகளுக்காகவும் அகத்திய மகா முனிவர் தமது எண்ணற்ற பாடல்களின் மூலமாக அரிய பல பொக்கிஷமான விடயங்களை அளித்திருக்கின்றார்.



# கடகம்

**மன்மத ஆண்டு தை மாதம்**

**15.01.2016 முதல் 12.02.2016 வரை**

சொந்தங்களின் அவசியத்தை அறிந்து எல்லோரையும் அனுசரிக்கும் குணம் கொண்ட கடக ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு மாத முற்பகுதியில் சோதனை களும் பிற்பகுதியில் நற்பலன்களும் மாறி உண்டாகும். தொழிலில் நல்ல வளர்ச்சியை பெறுவீர்கள். மாத இறுதியில் நல்ல பலனையும் பெறுவீர்கள்.

**பணியாளர்களுக்கு**

யாரையும் சமமாக நினைக்கும் நீங்கள் எல்லோரிடமும் அன்பைச் செலுத்தி தொழிலாளரின் ஒற்றுமைக்காகப் பாடுபடுவீர்கள். தொடர்ந்து பல நாட்கள் பணி செய்ய வேண்டி வரும். திருப்பங்களையும், எதிர்ப்புகளையும் தாங்கிக்கொண்டு செயல்படுவீர்கள். மேலும் பொருளாதாரத்தில் நன்மை அடைவீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

குறுகிய காலத்தில் மக்களின் பிரச்சினைகளை களைந் திட பாடுபடுவீர்கள். அர சாங்கத்தின் உதவிகளை யும் சலுகைகளையும் மக்க ளுக்கு பெற்றுத் தருவீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

**வியாபாரிகளுக்கு**

தொழில் ஸ்தானாதிபதி செவ்வாய் உங்களின் தொழில் ஸ்தானத்தை பார்வை இடுவது உங்களுக்கு வளர்ச்சியையும், புதிய செயல்பாடுகளில் கவனம் செலுத்தி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளவும் உதவும், முத்து, ரத்தினம் போன்ற தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும்.

**கலைஞர்களுக்கு**

உங்களின் யோகாதிபதி வீட்டில் சுக்கிரனும் சனியும் இணைந்திருப்பதுடன் லாபஸ்தானத்தை பார்வை இடுவது உங்களுக்கு கலை நிகழ்ச்சிகள் மூலம் வருமானம் கிடைக்க உதவும். சொந்த ஊரில் பிரபலம் அடையும் வாய்ப்பு கிட்டும்.

**பெண்களுக்கு**

பெண்களின் பேச்சும் அறிவாற்ற லும் சிறந்த வளர்ச்சியை பெற்றுத்தரும். கணவன் மனைவி உறவு சிறு வருத்தத்துடன் சுகமாகும். பொருளாதாரம் சிறக்கும்.

**மாணவர்களுக்கு**

கப்பல், கட்டுமான பணிகள், நுண் ஆராய்ச்சி கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். ஆசிரியர்களின் உதவி கிடைக்கும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

**09.02.2016 செவ்வாய் அதிகாலை 05.47 முதல் 11.02.2016 வியாழன் காலை 08.55 மணி வரை**

நட்சத்திர பலன்கள்

புனர்பூசம் 4ம் பாதம்

உடல் நலனில் கவனம் தேவைப்படும். சீரான பணிகளில் சில கடமைகளை அவசியம் செய்ய வேண்டி வரும். வங்கிப் பணியில் சிறப்பாக செயல்படுவீர்கள்.

**பூசம் 1, 2, 3, 4 ஆம் பாதம்**

எல்லையில்லா பொறுப்புகளையும் பணி களையும் தொடர்ந்து செய்து வருவீர்கள். உற்ற நண்பர்களின் உதவி கிடைக்கும். தொழிலில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**ஆயில்யம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

மனித நேயத்தில் ஆர்வம் உண்டாகும். பந்தய லாட்டரியில் அதிகம் ஆர்வம் உண்டாகும். குழந்தைகளை பராமரிக்க வேண்டி வரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்: வெண்மை, சிவப்பு, ஓரஞ்சு அதிர்ஷ்ட திசைகள் : மேற்கு, வட மேற்கு, கிழக்கு அதிர்ஷ்ட கிழமைகள் : திங்கள், ஞாயிறு, செவ்வாய்**

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் தொடர்ந்து முருகன் வழிபாடு செய்யவும். திங்கட் கிழமை அம்மன் படத்திற்கு பூ போட்டு விளக்கு ஏற்றி வர சிரமங்கள் மாறி நன்மை பெறுவீர்கள்.



**மேலான வழிபாடு**

மற்றவர்களுக்குத் தீமை செய்யாமல் நன்மை செய்வதுதான், இறைவனுக்கு நாம் செய்யும் மேலான வழிபாடாகும்.





# தஞ்சம் என்றால் அஞ்சேல் என்பாள்!

1984ஆம் ஆண்டு சித்திரைத்திங்களில் "சக்தி ஒளி" இதழ் மூலம் மேல்மருவத்தூர் கோயில் பற்றியும், அன்னை ஆதிபராசக்தியின் அருள் பற்றியும் தெரிந்துகொண்டு, மருவத்தூர் கோயிலுக்குச் செல்லும் பேற்றினையும் பெற்றேன். அன்னை ஆதிபராசக்தியின் திருவுருவப் படத்தை யும் வாங்கி வந்து வீட்டில் வைத்து வணங்கி வந்தேன்.

மதுரையில் நடந்த ஆன்மிக மாநாட்டில் குத்துவிளக்கும் கலச மும்வாங்கிச்செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் வழிபட்டு வந்தேன்.

**ஒரு சோதனை:**

அனுதினமும் குத்து விளக்கேற்றி வணங்கு வதற்கு முடியாதபடி அன்னை எனக்கு ஒரு சோதனை வைத்தாள். 1984 தீபாவளிக்குச் சில தினங்களுக்கு முன்பு என் கணவருக்குச் சிறுநீரில் இரத்தம் கலந்து வந்தது. கவலைப்படாதிருந்த என் கணவர், வயிற்றில் சிறிது வலியும் தோன்றியதால் டாக்டரிடம் சென்று உடம்பைக் காட்டினார்.

அவர் உடல்நிலையைப் பரிசோதித்த டாக்டர், கல்லினாலோ, T.B.யினாலோ, அல்லது புற்று நோயினாலோ சிறு நீருடன் இரத்தம் கலந்து வரலாம் என்று கூறி எங்களைக் கலங்கச் செய்து விட்டார். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்த போது ஒன் று ம் தோன்றவில்லை.

ஆனாலும் டாக்டர், சிறிய கல் ஒன்று இருந்தா லும் இருக்கலாம் எனச் சொல்லி மருந்து கொடுத்தார்.

**கவலையும் சோதனையும்:**

இதைக் கேட்டு எனக்கு வேதனையும் வருத்த மும் ஆக இருந்தது. வீட்டில் தினமும் விளக்கேற்றி வைத்து, மந்திர நூலில் உள்ள 1008 போற்றி, 108 போற்றி, சக்தி கலசம், வேண்டுதற்கூறு, மந்திரக்கூறு படித்து வழிபட்டு வந்தேன். என் கணவரும் சிறுநீர்ப்பையில் இருந்த கல்லைக் கரைப்பதற்காகப் பத்தியம் இருந்து மருந்தும் சாப்பிட்டுக் கொண்டு வந்தார்.

**மன்றக்கூட்டு வழிபாட்டில் கலந்து கொண்டது:**

எங்கள் வீட்டுக்கு அருகில் ஞாயிற்றுக்கிழமை தோறும், ஆதிபராசக்தி மன்றக்கூட்டு வழிபாடு பற்றிக் கேள்விப்பட்டு, நானும் செவ்வாடையணிந்து அங்குசென்றேன். மன்றத்துக்குள் செல்லுமுன்பாக அன்னையின் படத்துக்கு விளக்கேற்றி வைத்து மல்லிகைச் சரம் அணிவித்துச் சென்றேன்.

கூட்டு வழிபாட்டின் போது கண்கலங்கித் "தாயே! நான் உன்னை வணங்குவது

உண்மையென்றால் என் கணவருக்கு ஒன்றுமில்லையென்று சித்தாடல் மூலம் காட்டு" என மனமுருக வேண்டினேன்.

**அதிசயம் கண்டேன்:**

வழிபாடு முடிந்து எலுமிச்சம்பழத்தைப் பிரசாதமாகப் பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்து அன்னையின் படத்துக்கு முன்பாக அப்பழத்தை வைத்து வணங்கும் போது ஓர் அதிசயம் கண்டேன்.

அன்னையின் படத்துக்கு நான் அணிவித்திருந்த மல்லிகைச்சரம் நீண்டு வளர்ந்திருந்தது. அந்நிகழ்ச்சியே என் கணவரைப் பற்றிய எனது கவலையைப் பெரிதும் குறைத்தது. எனினும் என் கணவர் தீபாவளி கழித்து ஒரு பெரிய டாக்டரிடம் சென்று உடம்பை பரிசோதித்தார். அந்த டாக்டர், வேறு ஒரு நாள் வரும்படியும், வரும்போது எந்த உணவும் சாப்பிடாமல் வெறும் வயிற்றுடன் வரும்படியும் சொல்லி அனுப்பி விட்டார்.

**கலச தீர்த்தம் கொடுத்தது:**

ஒரு ஞாயிறன்று மீண்டும் என் கணவர் மருத்துவப் பரிசோதனைக்கு புறப்பட்டார். புறப்படும்போது "ஓம்சக்தி ன்று சொல்லி ஒரு தேக்கரண்டி கலசதீர்த்தம் அருந்தி விட்டுச் செல் லுங்கள்" என்றேன்.



என் கணவர் டாக்டர் சொல்லியதை நினைவில் வைத்துக் கொண்டு, வேண்டாம் என்று தடுத்த போதிலும், சலசத் தீர்த்தத்தை அருந்தும்படி சொன்னேன். அவ்வாறே கலச தீர்த்தம் அருந்தி விட்டே சென்றார்.

பகல் 2.30 மணியிலிருந்து 5.30 மணி வரை என் கணவருக்கு மருத்துவப் பரிசோதனை நடக்கும் நேரம். அந்த 3 மணி நேரமும் அம்மாவின் படத்திற்கு முன்பாக விளக்கேற்றி வைத்து, மந்திர நூலில் உள்ள அத்தனை மந்திரங்களையும் அழுதவாறே படித்துக் கொண்டிருந்தேன்.

**சிரித்துக் கொண்டே வந்த கணவர்:**

மந்திர நூலை முடித்துக் கற்பூரம் காட்டி அறையிலிருந்து வெளியே வருவதற்கும், என் கணவர் சிரித்துக் கொண்டே வீட்டிற்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது.



அவரை முதலில் கற்பூர ஒளியை ஒற்றிக் கொள்ளச் செய்து, என்ன நடந்தது? என்று கேட்டவுடன். அவர் கூறிய முதல் வாக்கியம் என்னை மெய் சிலிர்க்க வைத்தது. "நீ வணங்கும் தெய்வத்துக்குச் சக்தி நிறையவே இருக்கு!" என்றார் என் கணவர்.

மருத்துவப் பரிசோதனையின் முடிவில் அந்தப் பெரிய டாக்டர், என் கணவரிடம் சொன்னது இது! "உங்களுக்கு ஒன்றுமே இல்லையே! இது கல்! டி.பி! புற்று நோய்! என்று யார் சொன்னது? ஒன்றும் இல்லை, போய் வாருங்கள்" என்று கூறி விட்டாராம்.

**அப்பாடா! என்று ஒரு பெருமூச்சு விட்டேன். ஓம்! தஞ்சம் என்றே தொழுதோம் போற்றி ஓம்.**

ஓம்! அஞ்சேல் என்றே அருள்வாய் போற்றி ஓம் என்ற மந்திரங்களின் உண்மைப் பொருளை அனுபவத்தில் உணர்ந்தேன்.

**ஓம் சக்தி!**

*செல்லமணி ரவீந்திரன்

### தியானம் நன்றாக அமைந்திட!

சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம் என்பது போல், தன்னை உணரச் செய்யும் மற்றும் இறைவனை உணரச் செய்யும் நல்ல தியானமும் நீண்ட நெடிய முறையான பயிற்சியாலேயே அமைகிறது. உழைப்பிற்கேற்ற பயன் என்பது இயற்கை விதி.

வண்ண உணர்வுகள் பல நிலைகளிலும் நமது சரீரத்தில் செயல்பட்டு வருகின்றன. நாம் சாதாரணமாகப் பார்ப்பது எல்லாமே முப்பட்டைக் கண்ணாடியில் பார்த்தால் எல்லாமே ஏழு வண்ணங்களுடன் பிரகாசித்துக் கொண்டிருப்பது தெரிய வரும்.

அது போலவே வண்ண கிரிஸ்டல் கண்களால் நாம் பார்க்கும் போது ஒவ்வொரு வண்ணமும் மனதில் பிரதிபலித்து அதன் கதிர்கள் உணர்விலும், உணர்ச்சியிலும் பிரதிபலித்து நமது தன்மைகளுக்கு ஏற்ப செயல்படுகின்றன.

உதாரணமாக வீடுகளில் நாம் விரும்பும் வண்ணப் பூக்கள், காரின் வண்ணம், நாம் அணியும் ஆடைகளின் வண்ணம், அணியும் ஜெம் கற்களின் நிறங்கள் ஆகியவை எல்லாமே நமது விருப்பங்களுக்கு ஏற்றபடி நன்றாக இருக்கும் என தீர்மானித்து அதன்படி செயல்படுகிறோம்.

# வண்ண

ஆகவே வண்ணங் களைத் தேர்ந்து எடுப்பதற்கு நமது உள் உணர்வு பெரிதும் உதவி செய்கிறது. நாம் நமக்குப் பிடிக்காத வண்ண ஆடையோ மற்ற பொருட்களையோ பார்க்கும் போது மனம் அவற்றை ஏற்க மறுக்கிறது.

இவைகள் அல்லாமல் நமது மனமானது ஒவ்வொரு நிறத்துக்கு ஏற்றபடி உணர்ச்சிகளை வெளிப்படுத்துகிறது. உதாரணமாக ஒரு அறையின் சுவற்றில் இளநீல வண்ணப்பூச்சு பூசப்பட்டு அந்த அறையில் நாம் இருந்தால் நீல வண்ணமானது மனதில் ஒரு அமைதி நிலையை ஏற்படுத்துகிறது. நல்லவிதமான சூழ்நிலையை உரு வாக்குகிறது.

சிவப்பு வண்ணமோ அல்லது பிங்க் வண்ணமோ உஷ்ணத் தன்மையை உண்டாக்குவதுடன் காம உணர்வுகளைத் தூண்டும்.

மஞ்சள் அல்லது ஆரஞ்சு வண்ணத்தின் தன்மையானது கிரியா மன உணர்வுகளைச் செயல்பட வைத்து தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் தருகிறது.

பிரகாசமான இள வண்ணங்கள் மனதுக்கு ஒரு மலர்ச்சியையும் நல்ல சூழ்நிலையையும் உருவாக்குகின்றன. இதனால் நமது மனதின் பாரம் கரைந்து மனம் அமைதியடைகிறது.

ஆகவே வண்ணங்கள் நமது உணர்வுகளில் பிரதிபலிப்பதால் நம் மன நிலைக்கும், தன்மைக்கும் ஏற்ற வண்ணங்களை உபயோகப்படுத்தி நல்ல அமைதியான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொள்ள லாம்.

அதுபோல ஜெம் கற்களால் ஆன ஆபரணங் களையும், மோதிரங்களையும் அணிவதால் அவை யும் நமது மனதில் வண்ணத்தின் பிரதிபலிப்புகளை ஏற்படுத்துகின்றன.

நீல வண்ண ஜெம் கற்களாலான லபிஸ் லசூலி போன்றவற்றை அணியும்போது அதன் வண்ணத்தின் ஆற்றல்களால் நாம் மற்றவர்களுடன் சுமுகமான உறவு களை வளர்த்து பேச்சுக்கள் நடத்தி மகிழ்ச்சியடைய முடிகிறது.

ரோஸ் குவார்ட்ஸ் மாலையாக அணியும் போது, அது இருதய சக்கரத்தில் வேலை செய்து அன்பு அமைதி மற்றும்

பலரிடம் நட்பை வளர்த்துக் கொள்ளப் பெரிதும் உதவி செய்கிறது.

மரகதப் பச்சை, ஜேடு ஆகிய பச்சை வண்ண ஜெம் கற்களை அணியும் போது அதன் குளிர்ச்சித் தன்மையானது நமது சூட்சும சரீரத்துக்கு ஒரு பரிபூரண சுகத்தைத் தருகிறது. உஷ்ணத்தைக் குறைத்து நல்ல அமைதியை உண்டாக்குகிறது.

அது போலவே ரூபி என்னும் மாணிக்கம் கார்னட் பிளட் ஸ்டோன் ஆகிய ஜெம் கற்கள் நாம் இழந்த சக்திகளை மீட்டு அதிக சக்திகளை உடலுக்குத் தருகின்றன.

நமது உணர்வு உணர்ச்சிமயமான உள்ளுணர்வில் ஒவ்வொரு ஜெம் கல்லும் ஒவ்வொரு விதமான பிரதிபலிப்பை ஏற்படுத்துகிறது.

இதுபோலவே நாம் அணியும் உடைகளின் வண்ணங்களும் கூட நமது உடலின் உணர்வு, உணர்ச்சிகளுக்கு ஏற்பட செயல்பட்டு நல்ல உணர்ச்சிகளையே தருகின்றன.

சிவப்பு வண்ண ஆடைகளை அணியும் போது அது மனோபலத்தையும் சக்திகளையும் அதிகரிக்கச் செய்கிறது. அத்துடன் கிரியா சக்திகளையும் தூண்டு கிறது.

ஒரஞ்சு வண்ண உடைகள் தைரியத்தைத் தருகின்றன. பச்சை வண்ண உடைகள் மனதுக்கு இதமானவையாகவும், மன இறுக்கத்தை நீக்கி மகிழ்ச்சியையும் ஏற்படுத்துகின்றன.

நீல உடைகள் கோபதாபங்களைக் குறைத்து நல்ல மன நிலையை அடையச் செய்கின்றன.

# கிரிஸ்டல்களின் இயக்கங்கள்



இண்டிகோ மற்றும் வயலட் வண்ணங்கள் மனதை உயர்ந்த தியான நிலைக்குக் கொண்டு செல்ல உதவி செய்கின்றன. வெள்ளை உடையானது பரிசுத்தத்தின் பிரதிநிதியாக விளங்குகிறது. மனம், வாக்கு, காயம் அதாவது மனம் உடல் ஆத்மா பேச்சு, செயல் ஆகியவைகளை பரிசுத்தப்படுத்தி தூய உள்ளத்தின் சக்திகளை வெளிக்கொணர்கிறது.

ஆகவே வண்ணங்களை எந்த வகையில் உபயோகப்படுத்தினாலும் அவைகள் உள்ளத்தில் பிரதிபலித்து செயல்படுகின்றன என்பதுதான் உண்மையாகும்.

*சிவராஜயோகி



## மனிதனின் ஆன்மா!

உடம்பு, மனம், ஆன்மா என்ற மூன்றால் ஆனவன் மனிதன். உலகச் செயல்கள் மனத்தை மட்டுமே பாதிக்கின்றன. ஆன்மாவை அவை பாதிப்பதில்லை. ஆன்மா என்றும் தூயது, சுய ஒளி உடையது, கடவுளின் அம்சமாக விளங்குவது. தீமை என்பது ஒரு திரையாக ஆன்மாவை மறைக்கிறது அல்லது ஆன்மா வெளிப்படுவதைத் தடுக்கிறது. ஆனால் அதைப் பாதிப்பதில்லை. அதனால்தான் விவேகானந்தர், "ஒவ்வோர் ஆன்மாவும் உள்ளடங்கிய தெய்வீகம் நிறைந்தது" என்றார்.

**மன்மத ஆண்டு தை மாதம்**

**15.01.2016 முதல் 12.02.2016 வரை**



## சிம்மம்

தன் கடமையை தவறாது செய்து கொண்டு எடுத்ததை முடிக்கும் வரை விடாத சிம்மராசி வாசகர்களே! இம்மாதம் உங்களுக்கு எதிர்பாராத வெளியூர் பயணம் மிகப் பெரிய வளர்ச்சியையும் நன்மையையும் தரும். தொழிலில் திடீர் வளர்ச்சியை பெறுவீர்கள். ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு கொள்வீர்கள்.

### பணியாளர்களுக்கு

பணியாளர்களுக்கு இடமாற்றங்கள் வரலாம். பதவி உயர்வு, சம்பள உயர்வுகளுக்கு வாய்ப்புகள் அமையும். எதிலும் முதன்மை நிலைக்கு செல்லும் வாய்ப்புகளை பெறுவீர்கள். திறமைகளால் முன்னேற்றம் அமையும் நிலை உண்டாகும். பொருளாதாரத்தில் நினைத்ததை அடைவீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொதுக் கருத்துகளிலும், செயல்களிலும் எப்பொழுதும் ஆர்வமாக இருப்பீர்கள். நில சீர் திருத்தங்களிலும் பொது மக்களின் சிறு பிரச்சினைகளிலும் உங்களின் பங்கு பாராட்டும்படி இருக்கும். பொருளாதாரத்தில் சிறப்பாக செயல்பட்டு நன்மை அடைவீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானத்தை சனி பார்ப்பதால் தொழிலில் சிறு இடையூறுகளையும் பணியாளர்களால் சிரமங்களையும் அடைய வேண்டி வரும். இருந்தாலும் உங்களின் நிலையில் சீராக இருந்து வருவீர்கள். வாகனம் வாங்குதல், வீட்டு பொருட்கள் விற்பனை நன்றாக இருக்கும். பொருளாதாரத்திலும் நன்மையை பெறுவீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையின் வளர்ச்சிக்காக பல நாட்கள் பட்ட கஷ்டம் விலகும். எதிர்பார்த்த நன்மை பெறுவீர்கள். இயக்குனர்கள் சிறப்பான வளர்ச்சியை பெறுவீர்கள். பொருளாதார நிலை ஏற்றம் பெறும்.

### பெண்களுக்கு

பெண்கள் தொழிலில் முன்னேற்றம் பெறுவீர்கள். குறுகிய காலத்தில் திடீர் முன்னேற்றம் உண்டாகும். பல நாள் காத்திருந்த விடயம் விரைவில் முடியும். பொருளாதாரம் சிறக்கும்.

### மாணவர்களுக்கு

நிர்வாகம், சட்டம், தொல்பொருள் ஆராய்ச்சி கல்வியில் சிறந்து விளங்குவீர்கள். மருத்துவக் கல்வியில் திறமையாக பயிலும் வாய்ப்புகள் அமையும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

11.02.2016 வியாழன் காலை 08.56 முதல் 13.02.2016 சனி பகல் 11.20 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

மகம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

எதிர்ப்புகளை வெற்றி பெறுவீர்கள். கடந்த கால தீய எண்ணங்கள் வெற்றியை தரும். குற்ற உணர்வுகள் மறையும். எடுத்த காரியம் ஜெயமாகும்.

### பூரம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

கற்பனை வளம் செழிப்பாக இருக்கும். வாழ்க்கையில் எதிர்நீச்சல் பெறுவீர்கள். புதிய உலகத்தை உருவாக் கப் புறப்படுவீர்கள். பொருளாதாரத்தில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

### உத்திரம் 1ஆம் பாதம்

தந்தை மூலம் சில காரியத்தில் உடன்பாடு கொள்ள வேண்டி வரும். மருத்துவ காரணங்களால் சிலருக்கு சிகிச்சை எடுக்க வேண்டி வரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** சிவப்பு, ஓரஞ்சு, வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள்:** கிழக்கு, தெற்கு, தென்கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வெள்ளி, வியாழன்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

திங்கள் அன்று சிவன் ஆலயம் சென்று வணங்கி பைரவருக்கு நெய் விளக்கு போட்டு வரவும். துர்க்கை அம்மனுக்கு சிவப்பு நிற பூ வைத்து வணங்கி வர எல்லா காரியங்களும் சுபமாக அமையும்.



### பக்தரின் மனநிலை!

"எனக்கு என்று தனியான ஒரு சிந்தனையில்லை, எது இறைவனின் கட்டளையோ அதற்கேற்ப பணி செய்வோம்" என்று, மாணிக்கவாசகர் திருபள்ளியெழுச்சியில் குறிப்பிடுகிறார். இது, இறைவனிடம் சரண் புகுந்த பக்தனின் மனநிலைக்கு, நல்ல ஓர் எடுத்துக்காட்டு.



# நாளை என்பது நம் கையில் இல்லை

**வா**ழ்க்கை என்பது இறைவனால் நமக்கு அளிக்கப்பட்ட ஒரு அருமையான சந்தர்ப்பம். இந்த வாய்ப்பை மிக நன்றாகப் பயன்படுத்திக் கொள்வதன் மூலமாக நாம் கர்மத்தளைகளில் இருந்து விடுபடுவதோடு, மறுபிறவி எடுப்பதையும் தடுத்து நிறுத்தலாம். நல்லனவற்றையே நினைத்து, நல்லனவற்றையே மற்றவர்களுக்குச் செய்து வாழவேண்டும். கோபம், பொறாமை, பேராசை ஆகியவற்றை ஒழித்து அன்போடும், மனிதத்தன்மையோடும் நடந்து கொள்ள வேண்டும். இத்தகைய வாழ்க்கையினால் நாமும் மனநிறைவோடு வாழலாம். மற்றவர்களையும் அவ்வாறே வாழச் செய்யலாம்.

இந்த வாழ்க்கை நமக்குக் கொடுக்கப்பட்டு இருப்பது நமது தவறுகளைச் சரிசெய்து கொண்டு அடுத்த பிறவிக்குச் செல்வதற்குத்தான் என்பதை எந்த நேரமும் மறக்கக்கூடாது.

தவறு செய்து விட்டு சிறைக்கு வந்தவர்கள் அதைத் தண்டனையாக நினைத்து மனம் புழுங்கி மேலும் பல குற்றங்களைச் செய்தால் என்ன ஆகும். சிறைக்குள்ளேயே நிரந்தரமாகத் தங்கிவிடும் நிலைதான் ஏற்படும்.

உலகவாழ்க்கையில் உழலும் நாம், போன பிறவியின் கர்மவினைகளைத் தீர்ப்பதற்காகத்தான் இங்கே வந்திருக்கிறோம். இதை மறந்து விட்டு உடலாலும், மனத்தாலும், வாக்கினாலும், மேலும் மேலும் பாவங்களைச் செய்து குவித்தால் நம் நிலைமை என்னாகும்? யோசித்துப் பாருங்கள் கர்மவினைகள் அதிகமாகி மேலும் மேலும் பிறவிச் சுழலுக்குள் அகப்பட்டு உழல வேண்டியிருக்கும்.

ஒரு விதை முளைக்கிறது, செடியாகிறது, மரமாகிறது. காய்கனிகளைத் தருகிறது. சில காலத்திற்குப் பிறகு பட்டுப்போகிறது. அதில் இருந்து தோன்றிய விதைகள் அடுத்த சந்ததியைத் தோற்றுவிக்கின்றன. இது இயற்கை நியதி. உலகில் தோன்றிய அத்தனை உயிரினங் களுக்கும் இந்த இயற்கை விதி பொருந்தும். மனிதர்களும் இப்படித்தான் பிறக்கிறார்கள், வளர்கிறார்கள். திருமணம் செய்து கொண்டு இனவிருத்தி செய்கிறார்கள். முதுமை அடைந்து நோய்வாய்ப்பட்டு இறக்கிறார்கள்.

ஆரம்பம் என்ற ஒன்று இருந்தால் முடிவும் இருக்கும். அதைப்போல மனிதன் இந்த உலகத்தில் பிறந்துவிட்டால், இறப்பு என்ற ஒன்று அவனுக்காக் காத்திருக்கிறது. அதில் இருந்து யாராலும் தப்ப முடியாது.

வாள் என ஒன்று போல்காட்டி உயிர் ஈரும்
வாளது உணர்வார்ப் பெறின்
என்கிறார் திருவள்ளுவர்.

ஒவ்வொரு நாளும் சூரியன் உதிக்கிறது. மாலையில் மறைகிறது. ஒரு நாள் பொழுது ஓடிப்போகிறது. நாம் நமது கணக்கில் ஒரு நாளை இழக்கிறோம். அது வெறும் நாள் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். அது உங்கள் வாழ்நாட்களை அறுத்துத் தள்ளும் ஆரம்பம் என்பதை உணருங்கள் என்பது அதன் பொருள். ஒவ்வொரு நாளும் நாம் தூங்கி விழிக்கும் போது ஒரு நாள் போய்விடுகிறது. அவ்வளவுதானா? என்றால் நிச்சயமாக இல்லை. நாம் ஒவ்வொரு நாளும் மரணத்தை நோக்கி ஒரு அடி எடுத்து வைக்கிறோம் என்பதும் பொருள் அல்லவா? அதற்குள் நாம் நல்ல செயல்களைச் செய்து முடித்து விட வேண்டும். நாளைக்குச் செய்து கொள்ளலாம் என்று தள்ளிப் போடக்கூடாது. ஏன் என்றால் நாளை என்பது நம் கையில் இல்லை.

* வேணு சீனிவாசன்



# முருகனுக்கு உகந்த பூச திருநாள்



தைப்பூச நன்னாள் எனும் சிவசக்தி ஐக்கியத்தையும் மேம்பாட்டையும் விளக்கும் புனிதமான ஒரு பெருநாள், தை மாதம் உத்தராயண காலத்தில் ஆரம்பமாகும். உத்தராயணம் என்பது தேவர்களின் பகல் பொழுது என்பதால் தை மாதம் அவர்களின் காலைப் பொழுது சிவாம்சமான சூரிய மகர ராசியில் இருக்க, சக்தி அம்சமான சந்திரன் கடக ராசியில் பூச நட்சத்திரத்தில் ஆட்சி பெற்றிருக்க சூரிய சந்திரரர்கள் பூமிக்கு இருபுறமும் நேர்கோட்டில் நிற்றல் தைப்பூசத்துடன் இணைந்த பௌர்ணமியில் நிகழும்.

தை என்றதும் இந்துக்கள் அனைவருக்கும் நினைவுக்கு வருவது பொங்கல் திருநாள் தான். ஆயினும், ஆன்மீகத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர்களுக்கும், இந்து சமயத்தில் விரதங்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவங்கள் பற்றித் தெரிந்தவர்களுக்கும் முதலில் நினைவுக்கு வருவது தைப் பூசமே. தைப்பூசத்தன்று சிவனை நினைத்து விரதம் அனுஷ்டிப்பவர்கள், அன்றைய தினம் அதிகாலையில் எழுந்து குளித்துவிட்டு, திருநீறு, உருத்திராட்சம் அணிந்து சிவபெருமானை வழிபடுவர். தேவாரம், திருவாசகம் போன்றவற்றைப் பாராயணம் செய்வர்! உணவு உண்ணாமல் 3 வேளைகளிலும் பால், பழம் சாப்பிட்டு மாலையில் கோயிலுக்குச் சென்று சிவபூஜையில் பங்கேற்று சிவனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்வர். ஒரு முறை, வாயுபகவான், வருணதேவன் அக்கினிதேவன் மூவரும் பேசிக் கொண்டிருந்த போது அவர்களுக் கருகில் இருந்த ஒரு சிறு துரும்பை இலகுவாக அழித்துத் தமது சக்தியை நிரூபிக்க நினைத்தனர். ஆயினும், அவர்களால் அந்தத் துரும்பை அசைக்கக்கூட முடியவில்லை.

மூவரும் திகைத்து நின்றனர். அப்போது நாரதமுனிவர் அங்கு தோன்றி பரம்பொருளின் சக்தியை எடுத்து உரைக்க மூவரும் தம் மமதை நீங்கி இறைவனிடம் மன்னிப்புக் கோரினர்.

அவர்களது அறியாமையைப் போக்கிய சிவன் தைப்பூச நன்னாளில் அவர்களது அருட்சக்தி அதிகரிக்க அருள்செய்வதாகக் கூறி அருள்புரிந்தார். ஆகையால், தைப்பூசத்தன்று சிவனை மனதார வழிபட்டு ஆத்மபலம் மிகப் பெறலாம். தந்தைக்கு மட்டுமன்றி தனயனுக்கும் இது சிறப்பு மிக்க ஒரு நாள் தான்.

மூவுலகத்தோரையும் வருத்தி வந்த தாரகாசுரன் எனும் அரக்கனை அழிப்பதற்கு பார்வதி தேவி தனது சக்தியை ஒன்று திரட்டி வேல் வடிவாக முருகப் பெருமானுக்கு வழங்கியதும் தைப்பூச தினத்தில் தான். இவ்வாறு வேல் வழங்கிய நிகழ்வு பழனியில் நடைபெற்றது. இன்றும் கூட பழனியில் நடைபெறும் தைப்பூசத் திருவிழாவில் கலந்து கொள்வதற்காக பாதயாத்திரையாகச் செல்லும் பக்தர்கள் எண்ணிக்கை பல ஆயிரங்களைத் தாண்டும். அதுமட்டுமன்றி தமது வேண்டுகோள்களை முருகனிடம் முன்வைத்து அவை நிறைவேறப் பெற்றவர்களும் அது நிறைவேற எண்ணுபவர்களும் காலடி எடுத்துத் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவர்.

இவை மட்டுமல்லாமல் சிவனையே தம் மனதில் நிறுத்தி சேவைகள் பல புரிந்த பதஞ்சலி வியாக்கிரபாதர் முதலான முனிசிரேஷ்டர்கள் தரிசிக்க சிவபெருமான் ஆனந்தத் தாண்டவ மாடியதும் தைப்பூச நாளிலேதான். தேவர்களின் குருவாகிய பிரகஸ்பதியின் நட்சத்திரம் பூசம் என்பதால் தைப்பூசத்தன்று குருவழிபாடு செய்வதும் மிகுந்த பலனைத் தரும். இத்துடன் வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் ஒரு தை மாத வெள்ளிக்கிழமை புனர்பூச நட்சத்திரத்தன்று தான் ஒளியானார். இதனைக் குறிக்கும் விதமாக அவர் ஒளியான வடலூருக்கு அருகில் உள்ள மேட்டுக்குப்பத்தில் தைப்பூசத்தன்று இலட்சக்கணக்கானோர் கூடி வள்ளலார் விழாவைக் கொண்டாடுகிறார்கள்.

தைப்பூச தினத்தன்று மங்கல நிகழ்வுகளை ஆரம்பிப்பது இன்றும் தமிழ்நாட்டில் வழக்கமாக இருந்து வருகிறது. ஏடு தொடக்குதல், திருமணப் பேச்சுக்களை ஆரம்பித்தல், புதிய வியாபாரங்களை ஆரம்பித்தல், புதிய கணக்குகளை ஆரம்பித்தல், தங்கம் வாங்கி அணிந்து கொள்ளுதல் என இந்நாள் நற்காரியங்களால் நிரம்பி வழியும்.

இலங்கையில் தைப்பூசத்தில் தான் யாழ் மக்கள் புதிர் எடுப்பர். அன்று அதிகாலையில் எழுந்து வீடு வாசலைச் சுத்தம் செய்து, வீட்டில் இருக்கும் ஆண்கள் நெல்லறுக்கும் அரிவாள், தேங்காய், கற்பூரம், கத்தி, கடகம் என்பவற்றுடன் வயலுக்குச் சென்று கிழக்கு முகமாக நின்று சூரியனை வணங்கி ஒருவர் தேங்காய் உடைக்க மற்றவர் முற்றிய புது நெற்கதிர் சிலவற்றை அறுத்து வீட்டிற்கு எடுத்து வருவர். அதனைக் குடும்பத்தலைவி பெற்று சுவாமி அறையில் வைப்பார். அதில் இருந்து சில நெல்மணிகளை எடுத்து உமியை நீக்கி அந்த அரிசியைப் பசும்பாலுடன் கலந்து வாழைப்பழத்தை சிறு துண்டுகளாக நறுக்கி அதில் இட்டு குடும்பத்தினருக்குப் பரிமாறுவர். அந்த அரிசியுடன் வீட்டிலுள்ள அரிசியையும் கலந்து அன்றைய மதிய உணவு சமைக்கப்படும். இந்த வழக்கம் இன்று சற்றே அருகி வருகின்றது.

மலேசியாவின் பத்துமலைக் கோவில் தைப் பூசம் விழா உலகப் புகழ் பெற்றது. அன்றைய தினம் காலை, பக்தர்கள் கோலாலம்பூர் மாரியம்மன் கோவிலிலிருந்து பத்துமலைக்கு அதிகாலையில் தொடங்கி ஊர்வலமாக நடந்து வருவார்கள். இதற்கு எட்டு மணி நேரமாகும். நேர்த்திக்கடன் செலுத்த சிலர் காவடி எடுத்தும் வருவார்கள். அலகு குத்தியும் நேர்த்திக்கடன் செலுத்துவோர் உண்டு. கங்கை பத்து ஆற்றில் நீராடிவிட்டு மலைக்கோவிலுக்கு 272 படிகள் ஏறி வருவார்கள்.



சிங்கப்பூரிலும் தைப்பூசம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படும். சிங்கப்பூர் முருகன் கோவில் வேல் தான் மூலவர். தைப்பூசத்தன்று முருகன் வெள்ளித்தேரில் ஊர்வலமாக கொண்டு செல்லப்படுவார். பக்தர்கள் காலடி எடுப்பார்கள். மற்றவர் பெருந்திரளாக தேரினை இழுத்துச் செல்வார்கள். சீனர்கள் கூட முருகனுக்கு வேண்டுதல்கள் செய்து பூசத்தன்று நேர்த்திக்கடன் செலுத்துவார்கள்.

ஆகையால் தைப்பூசம் போன்ற மகிமைகள் பல பொருந்திய நன்னாளை நாமும் முறைப்படி அனுஷ்டிப்போமாக! தைப்பூச தினத்தன்று முருகப் பெருமானை உள்ளன்போடு வணங்கி வாழ்வில் நலம் பல அடைவோமாக!

* நவநீதம்

மழையென்றும் வெயிலென்றும் பாராது ஓய்வுகள் தேவையென்றும் நினையாது, உலகத்தார் பசிப்பிணி போக்க ஓயாது வயலில் உழைத்துக் கொண்டிருக்கும் உழவருக்கு மனதார நன்றி தெரிவிக்கும் திருநாளே பொங்கல் திருநாள். இத்திருநாளில் உழவருக்கு நன்றி சொல்லிப் போற்றுதல் சாலச் சிறந்தது. அதேபோல் உழவருக்கும் பாத்திகளில் வளர்கின்ற பயிர்களுக்கும் ஒளி எனும் உயிர் கொடுத்து உய்விக்கின்ற சூரிய பகவானுக்கும் இந்தப் பொங்கல் திருநாளில் மக்கள் நன்றியைத் தெரிவித்து வணங்குகின்றார்கள். உயிர்கள்



# செழிப்பின் அடையாளமாய் தைப்பொங்கல்

வாழவும் பயிர்கள் செழிக்கவும் சூரியனின் ஒளிவெள்ளம் ஒரு குறையில்லாச் செல்வம். ஆகவேதான் பொங்கல் திருநாளை சூரியப் பொங்கல் எனவும் அழைக்கின்றார்கள்.

உலகெங்கிலும் இருக்கின்ற மக்கள் அனைவரும் சமய வேறுபாடுகளைத் துறந்து எந்தவித வேற்றுமை உணர்வுகளுக்கும் இடமின்றி மகிழ்ச்சியுடன் காலம் காலமாகக் கொண்டாடுகிறார்கள். பொங்கல் திருநாள் வேதகாலம் தொட்டு தொடர்ந்து செய்யப் பட்டு வரும் ஒரு புனிதமான தொழில். உழவுத் தொழில் யாருக்கும் அஞ்சாமல் ஒருவருக்கும் தலைவணங்காமல் அன்னை பூமியையும் தமது சொந்த உடல் உழைப்பையும் மட்டுமே நம்பிச் செய்யப்படும் தொழிலும் இது ஒன்றேதான்.

தை பிறந்தால் வழிபிறக்கும். தங்கச் சம்பா நெல் விளையும் என்று கூறி செய்யப்பட இருக்கும் அறுவடையைப் பெறப்போகும் உழைப்பின் ஊதியத்தை எண்ணி விவசாயிகள் ஆனந்தப்படுவார்கள். அந்த அற்புதமான ஆனந் தத்தை இயற்கையோடு இய்யைந்து சிறப்பாக கொண் டாடுகிறார்கள். பொங்கல் நன்னாளாம் தை மாதப் பிறப்பன்று சூரியன் தனுர் ராசியிலிருந்து மகர ராசிக்குள் பிரவேசிக்கின்றார். மகரத்தில் சூரியன் பிரவேசமாகும் நாளே தை மாதப் பிறப்பாகின்றது. எனவே தான் இந்த நாளை மகா சங்கராந்தி என்றும் அழைக்கின்றார்கள். மேலும் இந்நாளே சூரியன் வடக்கு நோக்கிச் சஞ்சரிக்கத் துவங்குகின்ற நாளும் ஆகும். உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே எனச் செப்புகின்றது புற நானூறு. வள்ளுவப் பெருந்த கையார் தமது குறள் வழியாக உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅது எழு வாரை எல்லாம் பொறுத்து என்று தெரிவிக்கின்றார்.

இவற்றிலிருந்து உழவர் பெருமக்களின் பெருமையும் உழவுத் தொழிலின் சிறப்பும் தைப்பிறப்பு தைப்பொங்கல் ஆகியவற்றின் மகிமை களும் புலப்படுகின்றன. உழவும், உழவரும் இத்துணை சிறப்புக்களைப் பெற்றிருப்பதாலேதான், உலகெங்கிலும் மக்களுக்குச் சேவைகள் செய்கின்ற அரசுகளும், உண்டி கொடுக்கும் உழவர்களுக்கு அளப்பரிய ஊக்கங்களை அளித்து வருகின்றன. சங்ககாலம் முதற்கொண்டே பொங்கல் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. உலகில் உழவுத் தொழில் சிறப்புற்று இருக்கும் காலம் வரை இவ்விழா சிறப்பாகவே கொண்டாடப்படும்.

ஆனால் நம் முன்னோர்களைப் போலவே பொங்கல் விழாவின் முக்கியத்துவத்தை நாமும் மறக்காமல் இருக்க வேண்டியது மிகவும் அவசியமாகும். பொதுவாக பொங்கல் விழா நான்கு நாள் விழாவாகவே இன்றளவும் விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றது. முதல் நாள் அதாவது பொங்கலுக்கு முந்திய நாள் போகிப் பண்டிகை யாகவும், அடுத்தநாள் பொங்கல் திருநாளாகவும், மூன்றாவது நாள் மாட்டுப் பொங்கலாகவும், கடைசியாக நான்காவது நாள் காணும் பொகங்கலாகவும் ஆண்டாண்டு காலமாக அனுசரிக்கப்படுகிறது.

இருட்காலம் நீங்கி பிரகாச கால (உத்தராயணம்) ஆரம்பத்தைக் குறித்து இன்புற்றிருப்பதே



போகி எனக்கூறுவர். இந்திரனின் ஒரு பெயர் போகி என்பதாலும் அவனுடைய ஆக்ஞையால் மேகங்கள் கூடி மழை பொழிந்து உலகுக்கு நன்மைகளைச் செய்வதால் அவனுக்கு நன்றி சொல்லி வணங்குதலும் போகி என்றாயிற்று. எப்படியும் போகிப் பண்டிகை ஒரு சுபதினமாக விளங்குகின்றது.

பொங்கல் புதுநாளுக்கு முன்னாகிய இந் நாளில் மக்கள் வீடு வாசல்களைச் சுத்தம் செய்து மாவிலை தோரணங்களால் அலங்கரிப்பர். பழைய குப்பை கூளங்களைத் தீயிட்டுக் கொளுத்தி விடுவர். இத்துடன் கடந்தகால கஷ்டங்களையும் கவலைகளையும் சேர்ந்தே பொசுக்கி விடுவர். வாழ்க்கையில் ஒரு பிரகாசம் புத்துணர்ச்சி. இன்பம் வருகின்றது என்பதைக் குறிக்கவே போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது. தைப் பொங்கல் திருநாளன்று கதிரவன் தனது ஒளிமிகுந்த முகத்தை உலகுக்குக் காட்டும் முன்னரே எழுந்து நீராடிப் புத்தாடையணிந்து வீட்டு முற்றத்தில் சாணமிட்டு மெழுகி. கோலங்கள் இட்டு, மண் அடுப்பை ஸ்தாபிதம் செய்வார்கள்.

## இறையருளே இறைவனை உணரச் செய்யும்!



மனிதன் தன் சிற்றறிவால் இறைவனைக் காண முடியாது. அதில் இறைவனின் அருளும் சேர்ந்தால் தான் இறைவனை உணர முடியும். மனிதனின் பகுத்தறிவு என்பது ஓர் எல்லை வரையில்தான் செல்கிறது. அந்தப் பகுத்தறிவையும் மீறி நம்மை இறையருள் அழைத்துச் செல்கிறது.

வாசல்களில் மாவிலைத் தோரணங்களைக் கட்டுவதன் மூலம் வீடுகள் யாவும் விழாக்கோலம் பூண்டு விடும். இஞ்சி மற்றும் மஞ்சள் கொடியில் மண் பானையைச் சுற்றி கட்டுவார்கள். பின்பு நல்ல நேரம் பார்த்து சூரியக் கடவுளையும், இதர தெய்வங்களையும் மனதிலே நினைந்து அடுப்பில் தீ மூட்டுவார்கள். பின்னர் பானையை அடுப்பில் வைத்து பாலையும் ஊற வைத்த அரிசித் தண்ணீரையும் ஊற்றுவார்கள். அது பொங்கி வழியும் நேரம் "பொங்கலோ பொங்கல்" என்று குலவையிடுதல் அந்த அதிகாலை நேரத்தில் எங்கெங்கும் மங்களகரமாக ஒலிக்கும்.

பொங்கல் பொங்கி முடித்தபின் சூரியக் கதிர்கள் படுகின்ற இடத்தில் அவனுக்குப் படைப் பதாகப் பொருள் கொண்டு தலைவாழை இலை போட்டு பொங்கலையும் இதர உணவுப் பண்டங்களையும் காய்கறிகளையும் பக்தியோடு படையல் செய்து சூரிய உதய நேரத்தில் தூப தீப ஆராதனைகளைச் செய்து வணங்குவார்கள். பின்பு அண்டை அயலில் வாழ்வோருடன் அன்பு பாராட்டும் விதமாக பொங்கலைப் பகிர்ந்து உண்பார்கள்.

மாட்டுப் பொங்கலுக்கு மறுதினம், அதாவது பொங்கல் விழாவின் நான்காவது நாள் காணும் பொங்கலாகக் கொண்டாடப்படுகிறது. இந் நாளில் காலச் சக்கரத்தில் சிக்கிச் சுழன்று, பிழைப்புக்காக வெவ்வேறு இடங்களுக்குச் சென்றுவிட்ட உறவினர்களையும் நண்பர்களையும் குடும்பத்தோடு சென்று கண்டு வருவது வழக்கமாகும். உறவுகளையும், நட்புகளையும் பொங்கல் விழாக்களையொட்டி காணச் செல்வதால் இது காணும் பொங்கல் என்று அழைக்கப்படுகிறது. மாட்டுப் பொங்கலன்று உழவர்கள் மாடுகளை மிகவும் விசேடமாகப் போஷிக்கின்றார்கள். அவற்றின் கொம்பு களையும் குளம்புகளையும் சீவிச்சுத்தப்படுத்துவார்கள். அனைத்து மாடுகளையும் நன்கு தேய்த்துக் குளிப்பாட்டி மஞ்சள், சந்தனம், குங்குமம் முதலான மங்கலப் பொருட்களை அணிவித்துப் பூஜித்து மகிழ்வார்கள். பின்னர் சுத்தம் செய்யப்பட்ட தொழுவத்திற்கு அவற்றைக் கொண்டு செல்வார்கள். பின்னர் பொங்கலைப் பொங்கி, அதை மாடுகளுக்கு பசியாறத் தருவார்கள்.

பொங்கல் திருநாள் நாடு மகிழ்கின்ற நன்னாள். நாட்டு மக்கள் மறுமலர்ச்சி அடைகின்ற மங்கல நாள். உள்ளங்கள் மகிழ்ச்சியால் பொங்குகின்ற நேரத் தில் பொங்கலும் பொங்கி வழிகின்ற தங்கத் திருநாள். மங்கலமான அமைதியிலே அறப்பண்பின் அடிப்படையில் இயற்கையின் எழுச்சியோடு எழுகின்ற இன்பத் திருநாளே பொங்கல் நன்னாளாகும். சூரியனின் திசைமாற்றம் மக்களின் வாழ்க்கையிலும் புதுமாற்றத்தை ஏற்படுத்தும் என்கின்ற தூய நம்பிக்கையோடு உலகின் இந்துக்கள் அனைவரோடும் நாமும் பொங்குகின்ற உள்ளத்தோடும் பூரிப்போடும் இனிய பொங்கல் திருநாளை இனிதே கொண்டாடி மகிழ்வோம்!

ஜெயா நாகேந்திரன்

# ஆயர்குலத்தை ஆடாமல் வைத்த பரந்தாமன்



கோகுலம் முழுவதும் எங்கும் ஒரே மகிழ்ச்சிப் பெருவெள்ளம் ஓடியது. கண்ணன் காளியனை விரட்டியது குறித்து விழாக் கொண்டாடத் தீர்மானித்தார்கள். யமுனா தீரத்தி லேயே அவர்கள் ஆடிப்பாடிக் களித்ததில் அன்று இரவு அதிக நேரம் சென்றதை அவர்கள் உணர வில்லை. ஆகவே களைத்துப் போய் அங்கேயே தங்கி விட்டார்கள். பாவம்! மட்டற்ற மகிழ்ச்சியில் இருந்த அவர்களை நோக்கி மற்றொரு பேரபாயம் வருவதை அவர்கள் அறியவில்லை. அவர்கள் மிகவும் அசந்து தூங்கிக் கொண்டு இருக்கும் போது, அந்த வனத்தில் எங்கோ திடீரென்று காட்டுத்தீ பற்றிக் கொண்டது. பற்றிய தீ காற்றில் சிறகடித்து வந்தது போல மளமள என்று பரவி அவர்களை நாலாபுறமும் சூழ்ந்து கொண்டது. "மட மட" என வெந்த தீயில் வெடித்துச் சிதறும் மரத்துண்டுகளின் சப்தத்தால் அவர்கள் எழுந்து பார்த்தனர்.

சுற்றிலும் நெருப்புக் கோட்டை அதற்குள் கோகுல மக்கள் சிக்கியிருப்பதை உணர்ந்து அவர்கள் பீதி அடைந்தார்கள். அலறினார்கள்! அரற்றினார்கள். "ஹே கிருஷ்ணா! பரமாத்மா! பற்பல விபத்துக் களில் இருந்து இந்தக் கோகுலத்தைக் காப் பாற்றிய நீ இப்போதும் இந்தக் கொடிய நெருப்பிலிருந்து எங்களைக் காப்பாற்று!" என்று சொல்லி பிள்ளைகளும் கண்ணனைக் சூழ்ந்து கொண்டார்கள்.

"உயிர் தப்புவது மிகவும் கடினம்" என்று தெரிந்த கோபியரும் தம் அங்க உணர்வை இழந்து நின்று பிள்ளைகளைப் போல "கிருஷ்ணா! எங்களை நீதான் இரட்சிக்க வேண்டும்!" என்று வேண்டிக் கொண்டே விம்மி விம்மி அழுதார்கள்.

அப்போது குறுநகை புரிந்தவாறு அவர்களைப் பகவான் பார்த்தார். அதே சமயம் அவர்கள் கண் களுக்குப் புலப்படா வண்ணம் விசுவரூபம் தரித்து வனவிருட்சங்களை எரித்து வரும் காட்டுத்தீயைத் தன்

### ஞானசாதனை!

எந்த ஒரு நற்செயலையும் தொடர்ந்து செய்து வந்தால், அது ஒரு ஞானசாதனையாகும். நல்ல எண்ணங்களைத் திரும்பத் திரும்ப நினைக்கும் போது, அவை நம்மை இறைவனுடன் தொடர்படுத்தி வைக்கின்றன. எனவே நல்ல எண்ணங்கள் அனைத்தும் ஞானசாதனையே ஆகும். இறைவனிடம் அரிய ஆன்மிகப் பொக்கிஷங்கள் உள்ளன. அவற்றைப் பெறுவதற்குரிய தகுதிகளை நாம் வளர்த்துக்கொள்வதே ஞான சாதனை ஆகும்.


சக்தியால் கிரகித்துக் கொண்டார். பகவான் ஸ்பரிசம் பட்டதும் கணப்பொழுதில் எரிமலையாகக் கொழுந்து விட்டு எரிந்த பேய்த்தீ மக்கி மடிந்தது. எங்கும் சூழ்நிலை "தண்" எனக் குளிர ஆரம்பித்தது. பகவானைப் பலரும் போற்றினர். "யதுகுலம் காக்க வந்த என் கண்ணா!" என்று கூறி அவனை அழைத்து அரவணைத்தபடியே முத்தங்கள் இட்டனர். இதற்குப் பின் நடந்த பிரலம்பாசுரன் வதம் பலராமன் அவதாரத்தில் சிறப்புறக் கூறப்பட்டிருக்கிறது.

ஆயர் குலத்து அணங்குகளான கோபியர்கள் எல்லாம் கண்ணபெருமான் மீது அளவு கடந்த அன்பு, பாசம், பற்று, பக்தி அத்தனையும் கொண்டு, தங்களின் ஒரே தலைவன் தங்கள் உயிர்த்தலைவன் அவனே என்று வாழ்ந்து வந்தார்கள். பெருமானைப் பார்க்கும் நாளும் பொழுதும் அவர்களுக்குத் திருநாள் அல்லது பெருநாள், அவனைப் பாராது ஒழியும் மற்றைய நாள் எல்லாம் வெறுநாள் அல்லது கருநாள் என்றே கருதினார்கள். அவர்களால் தங்கள் கணவரையோ பெற்ற பிள்ளைகளையோ பார்க்காவிட்டாலும் பரவாயில்லை, வருத்தம் ஏற்படாது. ஆனால் கண்ணபெருமானைப் பார்க்காவிட்டால் அவர்கள் உள்ளம் அவனை நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, நெகிழ்ந்து நெகிழ்ந்து அன்பு நிறைந்து, ஊற்றெழும் கண்ணீர் அதனால் அவர்கள் உள்ளமும் உடம்பும் நனைந்து கிடக்குமாம். அதற்காக அவர்கள் மார்கழி மாதத்தில் கார்த்திகாயினி விரதம் ஏற்பார்களாம்.

ஆண்டவனுடைய உறவு இல்லாமல் உயிர்வாழ முடியாது. அதை ஆயர்ப் பெண்கள் இப்படிச் சொல்லுகிறார்கள். கோவிந்தா! நாங்கள் மாடுகள் பின்னாலேயே போவோம். காட்டில் கண்ட இடத்தில் உட்கார்ந்து உண்போம். அறிவே இல்லாத இடைக்குலத்தவர் நாங்கள். ஆயினும் எங்கள் குலத்தில் பிறக்கும் புண்ணியத்தைச் செய்தோம். உன் உறவு எங்களுக்கு இங்கு இல்லையேல், வேறு வேலை எங்களுக்கு இல்லை. ஒன்றும் அறியாத அப்பாவிப் பிள்ளைகள் நாங்கள். உன்னைச் சர்வ சாதாரணமாக அழைப்பதைப் பற்றிக் கோபித்துக் கொள்ளாதே! இறைவா! நீங்கள் அருள் தந்து எமக்கு வேண்டியதைக் கொடுத்து எம்மைக் காப்பாற்று! என்பதாம். அன்றொரு மார்கழி மாத நோன்பு காலத்தில் நடந்தது இது.

கோபியர்களுக்குக் கிருஷ்ணனுடைய வேணு கானம் கேட்டால் போதும். பெண்கள் தங்களுடைய வீட்டு வேலைகளை எல்லாம் அப்படி அப்படியே போட்டுவிட்டு, கண்ணனுடைய புல்லாங்குழல் ஓசை வரும் திசை நோக்கி ஓடிவிடுவார்கள். அது போலவே மாடு கன்றுகளும் நடந்து கொள்ளும் பால் கொடுத்துக் கொண்டிருக்கிற பசு, கன்றை ஒதுக்கிக் கண்ணன் குழலோசைக்குக் கட்டுண்டு போகும். கன்றும் பால் குடிப்பதைத் துறந்து பரந்தாமனுடைய வேய்ங்குழல் ஓசையில் மகிழ்ந்து மயங்கி அவனிடம் போய் நிற்கும்.

மாடு கன்றுகள் சூழ்ந்திருக்கின்றன. ஒரு சின்னஞ் சிறு பாறை மீது அமர்ந்து கண்ணன் கால் மீது கால் போட்டு உட்கார்ந்திருக்கிறான். நெற்றி முகப்பில் மயில் பீலி சுட்டி அணிந்திருக்கிறான். மஞ்சள் பட்டாடை மொற மொறக்க காதில் ரத்தின குண்டலங்கள் அசைய அவன் சிறு விரல்களில் உள்ள மோதிரங்கள் மினுங்கப் புல்லாங்குழலில் படிய கழுத்தைச் சாய்ந்த வண்ணம் குழல் இசைத்தான். நீக்கமற நிறைந்திருந்த காற்று மண்டலத்தில் அவன் இசைத்த கானம் கடலில் மிதந்த கப்பல் என மிதந்தது. மென்னொலி கிரணங்களைப் பரப்பி விண்ணையும் மண்ணையும் தொட்டது. தாவர



சங்கமப் பொருள்களும் செவி சாய்க்க, புள்ளும், மாவும், விலங்குகளும் மனிதரும் தேவரும் வேணு கானத்தில் இசை லயத்தோடு லயமாகக் கலந்து கருத்தொருமித்து அவனையே சிந்தித்தனர். அவன் இசைக்கு ஏற்றவாறு கோபியர்கள் கூடப் பாடினார்கள். மெய்மறந்து அவனுடைய திவ்ய சொரூபத்தில் இவர்கள் தாம் வணங்கும் நாராயணனையே தரிசித்தார்கள். இறைவனே தங்கள் கலி தீர்த்து ஆட்கொள்ளக் கண்ணனாக வந்திருக்கிறான் என்று அவனிடம் அதீத பக்தி செலுத்தினார்கள்.

தங்கள் உள்ளம் எல்லாம் அவனுடைய தேஜோமயமான திவ்ய மங்களத் தோற்றத்தை நினைவின் பிரதிபலிப்பாகக் கண்டு களித்தனர். அவனே ஆனந்த சொரூபன். அனந்தன் என்று அவனுக்கு அஞ்சலி செய்து ஆராதித்தார்கள். மொத்தத்தில் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் அவனுக்கு கோபியர் அர்ப்பணிப்பதில் அகம் மிக மகிழ்ந்தார்கள். கண்ணன் திருமேனி தொட்டுத் தித்திக்கும் ஸ்பரிசத்தில் அவர்கள் தனி ஒரு இன்பத்தைத் துய்த்தார்கள்.

ஏ.எஸ்.வழித்துணை ராமன்



# பூரட்டாதி நட்சத்திரத்திற்கான தலவிருட்சம் (தேற்றான் கொட்டை)

தேற்றான் கொட்டை மரமும் இந்து மத மக்களின் போற்றத்தக்க வகையில் புனிதமாக மதிக்கப்படுகிறது. பூரட்டாதி நட்சத்திரத் தில் பிறந்த வர்கள் வணங்கி வர வேண்டிய மரமும், வளர்க்க வேண்டிய மரமும் தேற்றான் கொட்டை மரம் ஆகும்.

இந்த மரத்தை தலமாக கொண்ட சிவபெருமானைப் பற்றி தேவாரத்தில் திருநாவுக்கரசர் பாடியிருப்பதாவது.

விண்ணு ளாரதொழு தேத்துக்கும் விளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்கும் மருந்தினை
மண்ணு ளார்பயி லுந்திருக் கோளிற
அண்ணலாரடி யேதொழு துய்மினே!
என்று திருநாவுக்கரசர் பாடி பெருமைப்படுத்தி உள்ளார்.

இந்த மரம் நிலவேம்பு மரத்தைப் போன்ற தோற்றம் உடையது. மரத்தின் பட்டை கறுப்பாகவும், ஆழமான கோடுகளும் காணப்படும். இலைகள் சிறியதாக இருக்கும். பழம் மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. காய்கள் பழுத்தால் நாவல் பழத்தை போல் தோற்றம் உடையதாக இருக்கும். பழத்திற்குள் கெட்டியான சதையுடன் கூடிய பருப்பு இருக்கும். இந்த விதைகளுக்கு எட்டிக்காயைப் போல் விஷத்தன்மை கிடையாது. பழம் கறுப்பாகவும், பழத்திற்குள் பட்டன் போன்று சிறிய வடிவில் விதை மறைந்திருக்கும்.

தேற்றான் கொட்டை மரத்தின் விதையில் அரை பாகத்தை எடுத்து நன்கு அரைத்து மோரில் கலந்து குடித்தால் நாள்பட்ட பேதி உடனடியாக குணமாகும். அதன் பொடியை பாலில் கலந்து குடித்தால் வெட்டை நோய் பூரணமாக குணமடையும். சிறுநீர் கழிக்கும் போது ஏற்படும் எரிச்சலையும் சரி செய்யும்.

இன்றைக்கு சுத்தமான நல்ல சுவையான குடிநீர் கிடைப்பது அரிதாக உள்ளது. அதிலும் சுத்தமான தண்ணீர் என்பது கேள்விக்குறியாகி விட்ட நிலையில் நம் முன்னோர்கள் தண்ணீரை சுத்திகரிப்பதற்காக தேற்றான் கொட்டை மரத்தின் கொட்டையை பயன்படுத்தி வந்தார்கள் என்பது நமக்கு ஆச்சரியமான தகவலாகும். மிகவும் கலங்கிப் போய் இருக்கும் தண்ணீரில் தேற்றான் கொட்டை



மரத்தின் கொட்டையை நன்கு அரைத்து அதை தண்ணீரில் கலந்து விடுவார்கள். சிறிது நேரத்தில் தண்ணீரில் உள்ள மாசு அடிப்பகுதியில் ஆழ்ந்து விடும். மேற்பகுதியில் சுத்தமான தண்ணீர் மட்டும் வரும். அந்த தண்ணீரை குடிப்பதற்கும் சமைப்பதற்கும் எடுத்துக் கொள்வார்களாம். இதனால் இந்த மரத்தின் கொட்டைக்கு தண்ணீர் சுத்திகரிப்பான் என்ற பெயரும் உண்டு.

இந்த மரத்தின் விதைகள் இரத்த சுத்திகரிப்புக்கு சிறந்த மருந்தாகும். சிறுநீரகம் பாதிக்கப்பட்ட நோய்களுக்கு சிறந்த மருந்தாக பயன்படுத்தப்படுகிறது. ஆஸ்துமா, சிறு நீர் எரிச்சல், வெட்டை நோய். கண் வலி போன்ற நோய்களுக்கும் பயன்படுத்தப்படுகிறது. ஆறாத புண் உள்ளவர்கள் தேற்றான் கொட்டை மரத்தின் இலைகளை அரைத்து பூசினால் அந்த புண் ஆறிவிடும். காலரா நோயை கட்டுப்படுத்தவும், குஷ்டநோயை விரட்டவும் இந்த மரத்தின் பட்டை மருந்தாக பயன்படுகிறது.

## பரம்பரை ஜபமாலையை பயன்படுத்தலாம்!

வீட்டில் சிவலிங்கம், சாளக்ராமம் ஆகியவற்றைப் பரம்பரை பரம்பரையாகப் பூஜித்து வருவது உண்டு. அது போல் ருத்திராட்ச மாலையையும் கூடப் பரம்பரை பரம்பரையாகப் பயன்படுத்தலாம். அதனால் அந்த ஜப மாலையின் ஆன்மிகச் சக்தி அதிகரிக்கவே செய்யும்.



### தலவிருட்சம்

தேற்றான் கொட்டை மரத்தையும் கோவில்களில் நம் முன்னோர்கள் தலவிருட்சமாக வணங்கி பாதுகாத்து வந்துள்ளனர். திருவாரூர் மாவட்டம் திருக்குவளையில் உள்ள கோளிலிநாதர் சிவன் கோவிலில் இந்த மரம் தலவிருட்சமாக இறைவனோடு சேர்ந்து வணங்கப்படுகிறது. இறைவன் தியாகேஸ்வரருக்கு பிடித்தமான மரம் தேற்றான் கொட்டை மரம். இந்த மரத்தின் அடிப்பகுதியில் பிரம்மன் சிவலிங்கத்தை பிரதிஷ்டை செய்து வணங்கி வந்ததால் தேற்றாவனம் என்ற புனித பெயரையும் தாங்கி உள்ளது. பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த அன்பர்களின் பரிகார விருட்சம் தேற்றான் கொட்டை மரம் ஆகும். இந்த மரத்தை பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் வளர்க்கலாம். தலவிருட்சமாக கொண்டுள்ள கோவிலுக்கு சென்று வணங்கியும் வரலாம்.

புகழும், பெருமையும் பெற்ற திருத்தலம் தான் திருக்குவளையில் உள்ள திருக்கோவில் என்ற சிவ தலமாகும். நவக்கிரகங்களின் குற்றங்களை மன்னித்து அவர்களுக்கு அருள்பாலித்த காரணத்தால் தான் கோளிலிநாதர் என்று அழைக்கப்பட்டு வருகிறது.

நவக்கிரக தோஷங்களைப் போக்கும் தலமாகவும் இருந்து வருகிறது. சிவபெருமானின் அற்புதங்களை கண்டு மகிழ்ந்த நட்சத்திர கூட்டம் தான் பூரட்டாதி நட்சத்திர தொகுப்பாகும். இந்த நட்சத்திரத்தில் தான் குபேரனும் பிறந்தான். திருக்குவளை திருத்தலத்தில் தான் தேற்றான் கொட்டை மரம் தல விருட்சமாக உள்ளது.

சுந்தரரின் அன்னதான சேவைக்கு குபேரன் உதவி செய்த சம்பவத்தை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் மாசி மகத்தன்று நெல் கொட்டிச் செல்லும் திருவிழாவாக திருக்குவளையில் கொண்டாடப்பட்டு வருகிறது.

பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் ஆதிதேவதை யாக அஜைபாதகர் இருக்கிறார். இந்த நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் திருவாரூர் அருகே உள்ள திருக்குவளை திருத்தலம் சென்று இறைவனையும் தேற்றான் கொட்டை மரத்தையும் வழிபட்டு வரலாம். இவர்கள், மகாலட்சுமி மற்றும் தாயாரையும் வழிபடலாம். பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் கலகலப்பாக இருக்கக்கூடியவர்கள். மற்றவர்கள் குறை சொல்வதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். முன்னால் வைத்த காலை பின்னால் எடுக்க மாட்டார்கள், எதையும் சாதிக்கக்கூடிய மனவலிமை பெற்றவர்களாக திகழக்கூடியவர்கள்.

* தி.பெருமாள் மலர்மதி



# நமது செய்கைகளும் சுவாசத்துடனான அவற்றின் சம்பந்தமும்

நாம் நினைக்கிறபடி நம்மால் செய்யப்படும் காரியங்கள் கை கூடுவதில்லை என்பதை பார்க்கிறோம். நமது சுவாச கதியை அனுசரித்து நாம் காரியங்களை செய்ய ஆரம்பித்தால் நம் காரியங்கள் அனுகூலம் ஆவதுடன் நமது செயல்கள் யாவும் வெற்றிகரமாக நடைபெறும். ஆதலால் சர நூலை அனுசரித்து அதன்படி சுவாச ஓட்டத்தைத் தெரிந்து அதை நாம் எப்படி நமக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என இனி பார்ப்போம்.

நமது சுவாசமானது ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஏதாவது ஒரு நாசித்துவாரத்தின் வழியே ஓடிக் கொண்டே இருக்கிறது. இரண்டு துவாரங்கள் வழியாக ஒரே நேரத்தில் இந்த ஓட்டம் நடைபெறாது. ஆனால் அபூர்வமாக இந்த ஓட்டம் சுசும்னா நாடிகளில் ஓடுவதும் உண்டு. அதாவது இரண்டு நாசி துவாரங்களிலும் ஒரே சமயத்தில் ஓடுவதை சுசும்னாவில் ஓடுவதும் என சர நூல் கூறுகிறது.

ஆதலால் இம்மாதிரியான மூன்று விதமான ஓட்டங்களின் கதிகளைக் கொண்டு நமது செயல்களையும் மூன்று விதமாகப் பிரித்துக் கொள்ளலாம். ஒவ்வொரு கதியும் பஞ்ச பூதங்களுடன் சம்பந்தப்பட்டு இருக்கின்றது. ஆகையால் சுவாசமும் தத்துவமும் அனுகூலமாக இருக்கும் பொழுது ஒரு காரியத்தை செய்ய ஆரம்பித்தால் அது வெற்றியாகவே முடிவடையும்.

இப்படி இல்லாத வேளைகளில் செய்யப்படும் காரியங்கள் திருப்தியான பலன்களைக் கொடுக்காது. சில சமயங்களில் இதனால் விபரீதமான பலன்களைக்கூட நாம் சந்திக்க நேரும்.

சுவாசத்தில் பிருத்வி, அப்பு தத்துவங்களின் ஆதிக்கம் பலமாக ஓங்கி நடக்கையில் செய்யப்படும் காரியங்கள் எல்லாம் சுபமாகவும் நீண்ட கால பலனை அளிக்கக் கூடியதாகவும் இருக்கும் என்பது பொதுவான விதி ஆகும்.

ஆதலால் ஒவ்வொரு நாசியிலும் சுவாசம் ஓடும் காலத்தில் என்ன காரியங்கள் செய்யலாம் என அட்டவணைப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆதலால் குறிப்பிட்ட காரியங்களை குறிப்பிட்டபடி உள்ள நாசியில் சுவாசம் ஓடும் காலங்களில் செய்தால் அவை எல்லாம் நன்மையாகவும் வெற்றி கரமாகவும் முடியும்.

எக்காரணத்தைக் கொண்டும் சுசும்னையில் அதாவது இரண்டு நாசிகளிலும் ஒரே நேரத்தில் சுவாசம் ஓடிக் கொண்டிருக்கும் போது ஏதும் செய்யக்கூடாது. ஏனென்றால் அப்போது செய்யும் காரியங்கள் விபரீதமான பலன்களையே தரும்.

* சிவராஜயோகி

மன்மத ஆண்டு தை மாதம்
15.01.2016 முதல் 12.02.2016 வரை



# கன்னி

அறிவும் ஆற்றலும் கொண்டு திறம் பட செயல்படும் கன்னி ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ஜென்ம குருவாக தற்காலிகமாக இருப்பதால் எதிலும் அவசரம் கொள்ளாமல் தெளிவான முடிவுகளை எடுக்க முயற்சி செய்தால் எல்லாம் சிறப்பாக அமையும். தொழிலில் மிக பெரிய மாற்றங்களை உருவாக்கி கொள்வீர்கள்.

### பணியாளர்களுக்கு

எண்ணங்களில் உதிக்கும் செயல்களை சிறப் பாக செய்வீர்கள். தொழிற்சங்க பணிகளில் சில ருக்கு முக்கிய பணிகள் செயல்படுத்த வேண்டி வரும். முக்கிய முடிவுகளை எடுக்க வேண்டி வரும். தொழிலாளர்களின் ஆதரவு உங்களுக்கு நல்ல பலனை தரும். பொருளாதாரம் மேம்படும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது காரியத்தில் நீங்கள் நினைக்கும் வகையில் சூழ்நிலைகள் அமையும். அரசாங்கமும், உதவிகளை செய்ய முன் வரும் போது உடன் இருந்து உதவிகளை செய்வீர்கள். மனதில்உள்ளதை மறைக்காமல் வெளிப் படுத்துவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சி கிட்டும்.

### வியாபாரிகளுக்கு

விவசாய பொருட்கள் விற்பனை நன்றாக இருக்கும். தேயிலை, கோப்பி விற்பனையில் முன்னேற்றம் உண்டாகும். வாகன வசதியும், வீட்டு பராமரிப்பும் செய்து கொள்ள வேண்டி வரும். சின்ன கைவினை பொருட்கள் விற்பனை வளர்ச்சியை தரும். பொருளாதாரத்தில் சிறந்து விளங்குவீர்கள்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் பாக்கியம் கிட்டும். சில புதிய நிகழ்ச்சிகள் சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் நடக்கும். பொருளாதாரத்தில் நன்மையை பெறுவீர்கள்.



## தத்துவம், இதம், புருஷார்த்தம்

தத்துவம் பகவான், இதம் சரணாகதி, புருஷார்த்தம் முக்தி என்பது பொருள். தத்துவம் பகவான் என்பதை உணர்ந்து, இதமான சரணாகதி செய்தால், புருஷார்த்தமான மோட்சம் கிடைக்கும் என்பதில் என்ன சந்தேகம்?

### பெண்களுக்கு

பெண்களின் பேச்சும், செயலும் எல்லோரிடமும் அன்பையும், நட்பையும் பெற்று தரும். அடுத்தவருக்கு உதவி செய்வதில் பெருமை கொள்வீர்கள். பொருளாதாரத்தில் ஏற்றம் கிடைக்கும்.

### மாணவர்களுக்கு

கல்வி செல்வம் எப்பொழுதும் நீங்காதது. அதை பெறுவதில் உங்களின் சாமர்த்தியம் அளவிட முடியாதபடி மேன்மை பெறுவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

17.01.2016 ஞாயிறு அதிகாலை 03.08 முதல் 19.01.2016 செவ்வாய் அதிகாலை 05.43 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

**உத்திரம் 2, 3, 4 ஆம் பாதங்கள்**

மனை அபிவிருத்தி செய்வீர்கள். குல தெய்வ வழிபாடு செய்து வேண்டுதல்களை நிறை வேற்றுவீர்கள். தொழில் கவனம் செலுத்துவீர்கள்.

**ஹஸ்தம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

முடிவுகளை பற்றி கவலைப்படாமல் எதிர்ப்புகளை சந்தித்து எடுத்த காரியத்தை முடிப்பீர்கள். சொந்தங்களை புதுப்பித்து கொள்வீர்கள். துரிதமான பயணம் தவிர்க்கவும்.

**சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்**

விளையாட்டுத் துறையில் சிறப்பாக செயல்படுவீர்கள். கணக்கு விடயத்தில் மிக கெட்டிகாரராக திகழ்வீர்கள். சுபகாரியம் விரைவில் நடக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள் :** பச்சை, வெண்மை, நீலம்

**அதிர்ஷ்ட திசைகள் :** தென்மேற்கு, தெற்கு, மேற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** புதன், வியாழன், வெள்ளி

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

நாகதேவதைகளை வணங்கி நெய்விளக்கு போட்டு வணங்கி வரவும். அம்மனுக்கு வெள்ளிக்கிழமை நெய்விளக்கு போட்டு வர சரியான வழிகளில் எல்லாவற்றையும் சரியாக செய்வீர்கள்.



# வழுவூர்

# கஜசம்ஹாரமூர்த்தி ஆலயம்

கயிலைநாதன் வீரச் செயல் புரிந்த எட்டுத் தலங்களை, “அட்ட வீரட்டத் தலங்கள்” என்பர். காலனை வென்றது. பிரமன் தலை கொய்து. மன்மதனை எரித்தது என்ற வகையில், கஜமுகாசுரனைக் கொன்ற தலம் வழுவூர்.

தமிழ்நாட்டில் மயிலாடுதுறையிலிருந்து திருவாரூர் சாலையில் ஒன்பது கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது வழுவூர். பிரளய காலத்தில் நிலமெல்லாம் கடல் சூழ்ந்தபோது இத்தலம் மட்டும் அழியாமல் வழுவின காரணத்தாலும், ருத்ர பீஜம் இவ்விடத்தில் வழுவியதாலும் வழுவூர், வழுவை என்ற பெயர் ஏற்பட்டதாகப் புராணம் தெரிவிக்கிறது. மிகப் பெரிய கோபுரம். கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றால் ஈசான தீர்த்தம் என்ற திருக்குளம் இருக்கிறது. கோயிலின் உள்ளேயிருந்து வெளி மதில் வரை நான்கு பிரகாரங்கள் உள்ளன. இறைவனுக்கு யானையின் தோலைப் போர்த்தியவர் என்ற பொருளில் கிருத்திவாசேஸ்வரர் என்று பெயர். சுயம்புலிங்கம், தேவி பாலகுசாம்பிகை, தமிழில் இளங்கிளை நாயகி. கிருபாவதி என்ற பெயரும் உண்டு. சுவாமி சந்நிதிக்கு முன்புறம் உள்ள மண்டபத்தில் ஒரே லிங்கத்தில் ஆயிரம் சிறு லிங்கங்கள் அமைக்கப் பெற்ற சஹஸ்ரலிங்கம் உள்ளது. கஜசம்ஹாரர், பிக்ஷாடனார், மோகினி போன்ற உற்சவ மூர்த்திகள் பார்ப்பவரைப் பரவசமூட்டுபவை.

கடுந்தவத்தில் ஆழ்ந்திருந்தான் கஜாசுரன். என்ன காரணம்? காலங்காலமாக அசுரர்களைத்

## மகான்களின் நாமம்!

மகான்களின் பெயர்களை மட்டும் நாம ஜபம் போன்று கூறலாம். ஆனால் அது பொது விதி அல்ல விதி விலக்கு உதாரணம். ஒருவர் எப்போதும் இறைவனுடன் சேர்ந்திருப்பதாலேயே, மகான் என்ற நிலையைப் பெறுகிறார். இறைவனை விட்டுப் பிரியாமல் இறைவனுடன் எப்போதும் சேர்ந்திருப்பவர்களையே "மகான்கள்" என்று சொல்கிறோம்.



தோற்கடித்து வரும் தேவர்களைப் பூண்டோடு தொலைக்க வேண்டும். தவறான நபராய் இருந்தாலும், செய்வது தவமாயிற்றே. பிரமன் காட்சி தந்தார். "முக்கண்ணனைத் தவிர, உன்னை எதிர்ப்பாரில்லை" என்று வரமளித்தார். தேன் குடித்த நரியானான் கஜாசுரன். விளைவு, முனிவர்களும் தேவர்களும் கலங்கித் தடுமாறினர்.


அதே சமயம், தாருகாவன முனிவர்கள் தருக்கிக் கிடந்தனர். சிவபக்தியின்றி, கர்ம பலத்தால் எதையும் பெற முடியும் என்ற நினைப்பில் இருந்தனர். அந்தத் தவ பலத்தையும், அகந்தையையும் அடக்க நினைத்தார் பெருமான். காண்பவர் மயங்கும் பேரெழில் கொண்டவராக பிட்சாடனராகப் பெருமானும், எண்ணமெல்லாம் ஒடுங்கி பிரமிக்கச் செய்யும் எழில் துலங்கும் மோகினியாகத் திருமாலும் தாருகாவனத்தை அடைந்தனர்.

அதன் பயனாக, முனிவர்கள் தவம் கலைந்தனர். முனிபத்தினிகள் நெறி கெட்டனர். அதனால், முனிவர்களின் தவவலிமை குறைந்தது. அதனால் சினந்த முனிவர்கள் ஏவிய நெருப்பையும் தம் கரத்தில் தாங்கினார் பெருமான். கடைசியாய், தங்களைத் துன்புறுத்த வந்த கஜாசுரனை சிவன் மீது ஏவினர். அந்த கஜாசுரனை அழித்து, அதன் தோலை உரித்து ஆடையாகத் தரித்து அவனின் யானைத் தலைமேல் வலக்காலை ஊன்றி இடக்காலை உயர்த்திய வண்ணம் நடனம் புரிந்தார் பெருமான்! பெருமான் ஊர்த்துவ நடனம் ஆடும் காட்சியும்,

தேவி பாலகுசாம்பிகையின் இடுப்பிலிருந்து முருகன் சுட்டிக் காட்டும் காட்சியும் இங்கு அவசியம் தரிசனம் செய்ய வேண்டிய காட்சிகளாகும். இறைவனின் நவதாண்டவங்களில் ஒன்றாக இது கருதப்படுகிறது. நடன சபைகளில் ஞான சபையாகப் போற்றப்படுகிறது.

சிதம்பரத்தில் ரகசியப் பிரதிஷ்டை உள்ளது போல் இத்தலத்திலும் கஜசம்ஹார மூர்த்தியின் திருவுருவத்திற்குப் பின்னால் ரகசிய யந்திரப் பிரதிஷ்டை உள்ளது. சிவபெருமானுக்கு ஈசானம், தத்புருடம், ஆகோரம், வாமதேவம், சத்யோஜாதம என ஐந்து முகங்களுண்டு. இந்த ஐந்து முகங்களும் இத்தலத்தில் ஐந்து தீர்த்தங்களாக உள்ளன என்றும், அவை பிரம்ம தேவரால் உண்டாக்கப்பட்டதால் பஞ்சப் பிரம்ம தீர்த்தங்கள் என்று அழைக்கப்படுகின்றன என்றும் தல புராணம் விவரிக்கிறது. துயரெல்லாம் அறவே துடைத்தழிக்கும் இந்த வழுவூர்ப் பெருமானை வழிபடுபவர்கள், எதிர்ப்பகை இல்லாத சந்தோஷமயமான வாழ்வை அனுபவிப்பார்கள். இன்புறுவார்கள் என்பது நிச்சயம்.


K.குருமூர்த்தி







# உள் மனதுடன் தொடர்பு கொள்ளும் விதம்



நாம் உள் மனதுடன் தொடர்பு கொள்வதற்கு முதலில் நாம் அதை உணர வேண்டும். தினசரி உள் மனதுடன் பேசிப் பழகி வர வேண்டும். நமது பிரச்சினைகளை ஆழ்மனதில் சொல்லி அதற்கு ஒரு பதில் கேட்க வேண்டும்.


இதற்கு நாம் இரவு படுக்கும் முன்பு அமைதியாக ஐந்து நிமிடம் உட்கார்ந்து இருக்க வேண்டும். கண்களை மூடிக் கொண்டு மானசீகமாக உள் மனதுடன் பேசவேண்டும். உள் மனதை ஓர் உயிருள்ள மனிதராக, இறைவனாக எண்ணி அதனிடம் நிதானமாகவும், அமைதியாகவும் மனம் உருகி உணர்வுடன் பேச வேண்டும்.

நாம் என்ன பேச வேண்டும் என்பதை முதலில் (வெளி மனதில்) தீர்மானித்துக் கொள்ள வேண்டும். வேண்டுகோள் சுருக்கமாக இருக்க வேண்டும். உள் மனதைக் கூப்பிட்டு அதனிடம் உனது கோரிக்கையை சுருக்கமாக மனதுள் சொல்லவும். இடைவிடாது ஐந்து நிமிடம் உமது கோரிக்கையைச் சொல்லிவிட்டு எனக்கு அந்த காரியத்தை முடித்துக் கொடு என்றும் கடைசியில் உனக்கு நன்றி என்றும் மூன்று தடவை அதற்கு நன்றி சொல்லிவிட்டுப் படுத்துக் கொள்ளவும். அதேபோல காலை எழுந்ததும் இரண்டு நிமிடம் அமைதியாக இருக்கவும். இரவு சொன்ன கோரிக்கையை

மறுபடியும் உள் மனதைக் கூப்பிட்டு மூன்று தடவை நிதானமாக உணர்வுடன் சொல்லி விட்டு உள் மனதுக்கு மூன்று தடவை நன்றி சொல்லவும்.

முதலில் சொல்லியபடியே வாசகத்தை மாறாமல் தினசரி காலை மாலை உள் மனதிடம் அமைதியாகச் சொல்லி வரவும். நிச்சயம் உங்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். இதற்கு உங்களிடம் உள் மனதில் மேல் திட நம்பிக்கை இருக்க வேண்டும். எந்தப் பிரச்சினையானாலும் அதை உள் மனதிடம் மூன்று தடவை சொல்லி மூன்று தடவை நன்றி சொல்லி விட்டு எனக்குக் காலையில் ஒரு பதில் கொடுக்கவும் என்று சொல்லிப்படுக்கவும்.

காலையில் எழுந்ததும் ஐந்து நிமிடம் அமைதியாக கண்களை மூடி உட்கார்ந்திருக்கவும். மனதில் முதலில் என்ன எண்ணம் வருகிறது என்பதை குறித்துக் கொள்ளவும். அதுதான் இறைவனின் பதில் இரண்டாவது வரும் எண்ணம் உன்னுடையது அதை தவிர்க்கவும். இப்படி நிதானமாக ஒரு தடவைக்கு ஒரு கோரிக்கையை உள் மனதிடம் சொல்லி அதை முடித்துக் கொடுக்கும்படி தினசரி படுக்கும்முன் உணர்வுடன் ஐந்து நிமிடம் சொல்லி விட்டு படுத்துவிடவும்.



காலையிலும் எழுந்தவுடன் ஒரு தடவை உள் மனதிடம் நிதானமாக உங்கள் கோரிக்கைகளைச் சொல்லிவிட்டு தவறாமல் மூன்று தடவை நன்றி சொல்லிவிடவும். உங்களது எண்ணங்கள் தேவைகள் நிச்சயம் பூர்த்தியாகும். மேலும் இதுபோல அடிக்கடி உள் மனதுடன் தொடர்பு கொண்டு பேசி வந்தால் காலையில் எழுந்ததும் பிரச்சினைக்கான பதில் மனதில் தோன்றும். முதலில் மனதில் தோன்றுவதை மட்டும் எடுத்துக் கொள்ளவும்.

சரி, இப்படி கோரிக்கைகளை உள் மனதில் சொல்லி விட்டோமே என்று நீங்கள் சும்மா இருக்கக்கூடாது. பகலில் ஓய்வாக இருக்கும் போது நீங்கள் விடுத்த கோரிக்கை நிறைவேறிவிட்டதாகவும், அதை நீங்கள் அனுபவிப்பதாகவும் மனத்திரையில் பார்த்து வரவும். உதாரணமாக நீங்கள் ஒரு வீடு வாங்க வேண்டும் என எண்ணி உள் மனதில் ஒரு கோரிக்கை விடுத்திருந்தால் பகலில் ஓய்வாக இருக்கும் சமயம் உங்களுக்கு வீடு கிடைத்துவிட்டதாயும் நீங்கள் அந்த வீட்டில் குடியிருப்பதாயும் மனத்திரையில் அந்த வீட்டைப் பார்த்து வர வேண்டும். இது என்ன பகல் கனவு போல இருக்கிறதே என்று எண்ணி அலட்சியப்படுத்தி விடாதீர்கள். நீங்கள் உங்களது தேவையை உள் மனதில் விதையாக முதலில் விதைத்துவிட்டீர்கள்.

தினசரி காலையும், இரவு படுக்கும் முன்னும் எனக்கு சொந்த வீடு வேண்டும் என்ற கோரிக்கையைச்சொல்லி,“உனக்குநன்றி நன்றி நன்றி என உள் மனதிடம் ஐந்து நிமிடம் நிதானமாகவும் உணர்வுடனும் சொல்லி வருகிறீர்களல்லவா? இவை எல்லாம் நீங்கள் விதைத்த விதைக்கு உரம் போடுவது போலவும், தண்ணீர் பாய்ச்சுவது போலாகும். பகலில் கற்பனையில் உங்கள் மனத் திரையில் அந்த வீட்டைப் பார்த்தும் அதில் நீங்கள் மனைவி மக்களுடன் வசிப்பதையும் மனத்திரையில் ஓய்வு கிடைக்கும் போது பார்த்து வருவது உங்கள் எண்ணத்தைத் துரிதப்படுத்துகிறது.

திடீரென ஒரு நாள் நீங்கள் மனத்திரையில் பார்த்தது போலவே வீட்டை வாங்கிவிடுவீர்கள்.ஒரு நேரத்தில் ஒரே கோரிக்கையை மட்டும் உள் மனதில் சொல்லவும். அப்போதுதான் அது செயல்படும். பல கோரிக்கைகளைச் சொல்லும் போது குழப்பம்தான் ஏற்படும். இதுதான் உள்மனதிடம் தொடர்பு கொள்ளும் வழிமுறை ஆகும்.

என். தம்மண்ணன்

### ஆசை என்னும் மேகம்!

உலகம் முழுவதற்கும் சூரியன் ஒளி தரக்கூடியது என்றாலும், அதை மேகம் மறைக்கும் போது சூரியன் தனக்கே உரிய இயல்பான ஒளியை இழந்ததுபோல் காணப்படுகிறது. அது போல் மனிதனிடமே பேரின்பம் என்ற தெய்விக ஒளி இயல்பாகவே உள்ளது. அந்த ஒளி காமகாஞ்சனம் முதலான ஆசைகள் என்ற மேகத்தால் மூடப்பட்டு, தன் ஒளியை இழந்தது போல் காணப்படுகிறது. அருள் வழியில் வாழ்ந்தால் இருள் வழி நீங்கிப் பேரின்பம் பெற முடியும்.



# துலாம்

மன்மத ஆண்டு தை மாதம்
15.01.2016 முதல் 12.02.2016 வரை

பெருந்தன்மையும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையும் கொண்டு விளங்கும் துலாம் ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு யோகாதிபதி சனி தனஸ்தானத்தில் அமருவதும் சனி தசை சனிபுத்தி நடப்பவர்களுக்கும் மிக நல்ல பலனை தரும். தொழிலில் எதிர்பார்த்த பலன்களை பெற சிறிதுகாலம் ஆகும். ஆனால் நீங்கள் வெற்றி பெறுவது உறுதி.

### பணியாளர்களுக்கு

தொடர்ந்து பல பிரச்சினைகளை சந்தித்து வந்த உங்களுக்கு இனி படிப்படியாக நற்பலன்களை அடைவீர்கள். வெளியூர், வெளிநாட்டு தொடர்புகளால் பதிய வேலைவாய்ப்பு ஒரு சிலருக்கு அமையும். பொருளாதாரத்தில் தேவைகளுக்கு பணவரவு இருக்கும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

வெறுத்து ஒதுக்கியவர்களை அரவணைத்து செல்லும் பண்புகள் உண்டாகும். பொது விடயங் களில் உங்களின் பங்குகள் சிறப்பான வளர்ச்சியை பெறும். லாபஸ்தானத்தில் ராகு அமருவது உங்கள் வாழ்க்கையில் வளர்ச்சியை பெறும். பொருளாதாரத்தில் மேன்மை பெறும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானாதிபதி சந்திரன் உங்களின் வளர்ச்சி பாதைக்கு உறுதுணையாக இருப்பார். முத்து, பால்வளம், உணவு பண்டங்கள், உப்பு வியாபாரம் நன்றாக இருக்கும். குறுகிய முதலீடுகளில் அதிக லாபம் பெறுவீர்கள். பண வரவு நன்றாக இருக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினர் தொடர்ந்து முன்னேற்றம் பெறுவீர்கள். கருத்துகளை வெளிப்படுத்துவதில் திறம்பட செய்வீர்கள். ஒப்பனை கலைஞர்களுக்கு பியூட்டி பார்லர் உரிமையாளர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கும்.

### பெண்களுக்கு

பெண்களின் வாழ்க்கையில் ஏற்றம் பெறுவீர்கள். சகோதரர்களின் உதவி கிடைக்கும். பூர்வீக சொத்து சார்ந்த பிரச்சினை முடிவுக்கு வரும்.

### மாணவர்களுக்கு

கல்வியில் கூர்மையாக ஆராய்ச்சி செய்யும் பக்குவம் உங்களுக்கு உண்டாகும். உறுதியான கல்வி பயிலும் நீங்கள் தேர்வில் முன்னேற்றம் காண்பீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

19.01.2016 செவ்வாய் அதிகாலை 05.44 முதல் 21.01.2016 வியாழன் காலை 09.24 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

### சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்

முக்கிய காரியங்களில் ஈடுபட்டு விரைவில் முடித்து கொடுப்பீர்கள். குற்றம் இழைப்பவர்களுக்கு தகுந்த தண்டனை பெற்று தருவீர்கள். பண வரவு நன்றாக இருக்கும்.

### சுவாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

தினசரி செய்ய வேண்டிய விடயங்களை செய்து நிலைமையை சரி செய்து விடுவீர்கள். அன்னியர் உதவிகள் கிடைக்கும். முக மலர்ச்சியுடன் செயல்படுவீர்கள்.

### விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்

திடீர் செலவுகள் வந்து பண பிரச்சினைகளை தந்து விடும். பல திருப்பங்களை சந்திக்கும் நீங்கள் தொழிலில் சிரமங்களை அடைந்தாலும் வருமானம் பெறுவீர்கள்.


அதிர்ஷ்டநிறங்கள் : வெண்மை, நீலம், பச்சை

அதிர்ஷ்ட திசைகள் : மேற்கு, வடக்கு, வடமேற்கு

அதிர்ஷ்ட கிழமைகள்: வெள்ளி, சனி, புதன்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

வியாழக்கிழமை விநாயகருக்கு காலை 06 07 க்குள் தேங்காய் எண்ணெய் விளக்கு போட்டு வரவும். செவ்வாய் கிழமை வேலுக்கு அபிஷேகம் செய்ய நன்மை பெற்று பொருளாதார வளர்ச்சியை பெறுவீர்கள்.



**ஸ்ரீராமரின் விரதம்!**

"நான் உன்னைச் சேர்ந்தவன்" என்று சொல்லி ஒரே ஒரு சமயம் என்னை நாடுபவனை, "எதற்கும் எப்போதும் பயப்பட வேண்டாம்" என்று அறுதியிட்டுப் புகலிடம் தருவேன். இது நான் கொண்ட விரதம்." இது ஸ்ரீ ராமரின் வாய்மொழியாகும்.

# இறையருள் பெற
# மனித நேயம் அவசியம்!

உலகில் எங்கும் இறைவன் நிறைந்திருக்கிறான். எல்லா உயிர்களிலும் இறைவன் இருக்கிறான். பார்க்கும் அனைத்தும் பரம்பொருளின் வெளிப்பாடுகளேயாகும். அதனால் அருளாளர்கள், அனைத்தையும் மனிதர்கள் உட்பட அனைத்து உயிர்களையும் நேசிக்கிறார்கள்.

நாம் அனைவரும் இறைவன் திருவடியை நோக்கிப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறோம். அதனால் உடன் வருபவர்கள் உடன் வாழ்பவர்கள் நம் சக திருவடி யாத்திரைக்காரர்கள் என்பதை உணர்ந்து, அவர்களோடு இனிமையாகப் பேசிப் பழகி, நட்புடன் இனிய வாழ்க்கை வாழ வேண்டும்.

நம் உயிர் பணத்திலும், பதவியிலும், நம் உடலில் ஓடும் இரத்தத்திலும், நாம் விடும் மூச்சுக் காற்றிலும் இல்லை, அது பிறருடன் நாம் சுயநலமற்ற அன்புடன் வாழ்வதில்தான் இருக்கிறது. இதை, "அன்பின் வழியது உயிர்நிலை" என்று, பெருநாவலர் திருவள்ளுவர் குறிப்பிடுகிறார்.

சுயநலமுடைய அன்பு மாயைக்குட்பட்டது. சுயநலமற்ற அன்புதான் இறைவன். இதையே, "அன்பே சிவம்" என்று திருமூலர் கூறினார்.

வாழ்க்கைக்கு அன்பு இன்றியமையாதது. அன்பு என்பது ஒரு வழிப்பாதை போன்று சிலர் நினைத்து நடந்து கொள்கிறார்கள். ஆனால் அன்பு இரு வழிப்பாதை என்பதுதான் உண்மை.

ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் பரஸ்பர அன்புதான் சுமுகமாகவும் இயல்பாகவும் இனிமை தருவதாகவும் அமைகிறது. நாம் பிறரிடமிருந்து (பிறர்) அன்பைப் பெறுவதற்கு உரிமை உடையவர் என்று நினைக்கும் சிலர், "நாம் பிறருக்கு அன்பை வழங்கவும் கடமைப்பட்டிருக்கிறோம்" என்பதை ஏனோ மறந்துவிடுகிறார்கள்.

மனிதநேயம் இல்லாதவர்கள் இறைவன் அருளைப் பெறுவதில்லை.





# அற்புதங்கள் செய்யும் சூரிய நமஸ்காரம்!

தொடர்ச்சியாக செய்யப்படும் 24 யோகாசனங்கள் தான் சூரிய நமஸ்காரம் என்று அழைக்கப்படுகிறது. அதை சூரிய நமஸ்காரம் என்று அழைப்பதிலேயே பல அர்த்தங்கள் இருக்கின்றன. அதில் ஒன்று தான் சக்தி சார்ந்த பகுதி. சூரிய நமஸ்காரம் உங்கள் நாடிகளைத் திறந்து உங்களுக்குள் இருக்கும் சூரியனை தூண்டிவிடுகிறது. இதன் மூலம் நீங்கள் மிகத் துடிப்பாக, உயிர்ப்புடன் இருக்க முடியும். மெதுவாக 100 சூரிய நமஸ்காரங்கள் செய்யும் நிலைக்கு வந்துவிட்டால் நீங்கள் ஒரு தடகள வீரரைப் போல ஆகிவிடுவீர்கள்.

இன்னொரு விஷயம், உங்களை பேணிப் பாதுகாக்கின்ற சூரியனுக்கு தினமும் காலையில் செய்யும் ஒரு வழிபாடாகவும் அது இருக்கிறது. இந்த உடல் உங்களுக்கு இருப்பதற்கு காரணமே சூரியன்தான், இல்லையா? இந்தக் கலாசாரத்தைப் பொறுத்த வரை, சில சடங்குகளைச் செய்வதோ அல்லது சில மந்திரங்களை முணுமுணுப்பதோ வழிபாடு அல்ல. உங்கள் முழு உடலையுமே வழிபாடாக ஆக்குவதுதான் இங்கு வழிபடும் முறை.

### சூரிய நமஸ்காரத்தின் பலன்கள்

போதுமான அளவு சூரிய நமஸ்காரம் செய்தால், உங்களுடைய தூங்கும் நேரம் குறைந்து, எப்போதும் ஒரு உயர்ந்த நிலையிலேயே இருப்பீர்கள். நீங்களாக எந்த முயற்சியும் செய்யாமலேயே உங்கள் தூக்கம் 4 அல்லது 4½ மணி நேரமாக மிகச் சுலபத்தில் குறைந்து விடும். சில வாரப் பயிற்சியிலேயே உங்கள் உற்பத்தித் திறனும், செயல்திறனும் மேம்பட்டுவிடும்.

யோகப் பயிற்சி செய்வதால், ஒருவர் நாள்பட்ட நோய்களான ஆஸ்துமா, இரத்தக் கொதிப்பு, மூட்டு வலி போன்றவற்றிலிருந்து விடுதலை பெற முடியும். அது தன்னளவில் ஒரு முழுமையான பயிற்சியாகும். அதற்கு எவ்விதமான கருவிகளும் தேவையில்லை. அது ஒரு வரம். ஏனென்றால் நீங்கள் பயணம் செய்து கொண்டிருந்தாலும், உங்களது பயிற்சிகளைத் தொடர முடியும்.

சூரிய நமஸ்காரத்தை சரியாக செய்து பாருங்கள். உங்கள் உடலில் இருக்கும் அத்தனை பகுதிகளும் நீண்டு, மடங்கி அவற்றுக்குத் தேவையான உடற்பயிற்சி கிடைத்துவிடும். இதைத் தவிரவும், உங்கள் சக்தி நிலைகளும் உயர்ந்த நிலையை அடைவதால் வாழ்க்கையின் மேடு, பள்ளங்களை பெரிய சிரமங்கள் இல்லாமல் எதிர்கொள்ள முடியும். அதை ஒரு குறிப்பிட்ட விழிப்புணர்வோடு செய்பவருக்கு சூரிய நமஸ்காரம் அற்புதங்களை நிகழ்த்தும், தியானத் தன்மைக்குள் நுழைவதற்கு இது மிக எளிமையான ஒரு வழி.

## ஆலய வழிபாட்டில் செய்யத்தகாதவை!

கோபுர வாயிலுக்குள் காலணிகளுடன் செல்லக் கூடாது. கோயில் இடங்களை அசுத்தம் செய்வது, அதிலும் கோயில் பின்பகுதியிலேயே சிறுநீர் கழித்தல் பாவம் நீங்கக் கோயிலுக்குச் சென்று பாவமூட்டையை ஏற்றிக் கொண்டு வருவதற்குச் சமமாகும். வீண் பேச்சுகள், சுத்தம் போடுதல் கூடாது.

நிர்மாலியத்தையும், அபிஷேக தீர்த்தங்களையும் மிதிக்கக் கூடாது. மற்றவர்கள் காலில் மிதிபடும் வகையில் ஆங்காங்கே அருட்பிரசாதங்களை கைவிடவும் கூடாது. சண்டிகேஸ்வரர் முன்பு துணி, நூல் போடக் கூடாது. விக்கிரகங்களைத் தொட்டுப் பார்த்தல் கூடாது. மரியாதைக்குரிய பெரியவரிடத்தில் தள்ளி நின்று பேசுவது போல, பணிவு செய்து வழிபட வேண்டும்.



கோயில் அலுவலர்கள் தெரிந்தவர்கள் என்பதால், ஆணவத்துடன் செல்லக் கூடாது. அப்படிச் செல்வது கோயிலுக்குச் சென்றுவந்த பலனையே பாழாக்கிவிடும்.

யோகப் பயிற்சி செய்வதால், ஒருவர் நாள்பட்ட நோய்களான ஆஸ்துமா, இரத்தக் கொதிப்பு, மூட்டு வலி போன்றவற்றிலிருந்து விடுதலை பெற முடியும். ஆனால் யோகா என்பது ஒரு சிகிச்சை முறை அல்ல. நீங்கள் யோகாசனங்களை பயிற்சி செய்து வந்தால், அதற்கு நிறைய மருத்துவ குணங்கள் இருக்கின்றன என்பது வேறு விஷயம். ஆனால், இதை ஒரு சிகிச்சை முறையாகப் பயன்படுத்தக் கூடாது.

ஒரு சிகிச்சை முறை என்றால், உடல் கோளாறு ஏற்பட்டு மருத்துவரிடம் செல்கிறீர்கள், அவர் உங்களுக்கு மருந்து கொடுக்கிறார். எத்தனை காலம் அந்த மருந்தை சாப்பிடுவீர்கள்? பிரச்சினை நீடிக்கும் வரை உட்கொள்வீர்கள். பிரச்சினை முடிந்தவுடன், மருந்து உட்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. யோகாசனத்தையும் இப்படி எண்ணக் கூடாது. நீங்கள் யோகாசனங்கள் செய்ய ஆரம்பித்தவுடன், அவற்றை உங்கள் வாழ்க்கையின் ஒரு ஒழுக்கநெறியாகவே கடைப்பிடிக்க வேண்டும். அதை தொடர்ந்து செய்து கொண்டே இருக்க வேண்டும். அப்படி செய்தால் அது உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியாகவே ஆகிவிடுகிறது. அதிலிருந்து உங்களுக்கு கணக்கிலடங்காத பலன்களைப் பெற முடியும். யோகாசனங்களை அனுஷ்டிக்க இதுதான் சரியான வழி. ஆனால், எந்த ஒரு குறிப்பிட்ட பலனுக்காகவும் யோகாசனங்களைச் செய்யவேண்டாம்.

* சத்குரு ஜக்கி வாசுதேவ்





# துரியோதனன் யாகம் செய்தல்!

துரியோதனனும் கர்ணனும் மீண்டும் சந்தித்து அடுத்த செயல்திட்டம் பற்றி வெகுநேரம் விவாதித்தனர். "யுதிஷ்டிரன் நடத்திய ராஜசூய யாகத்தைப் பார்த்ததிலிருந்து அது போன்றதொரு யாகத்தை நாமும் செய்ய வேண்டும் என வெகு ஆவலாக இருக்கிறேன்" என்றான் துரியோதனன். கர்ணனும் அதை ஆமோதித்து,

"ஏன் கூடாது? இப்போது பூமியில் உள்ள எல்லா முக்கிய நாடுகளும் உன் ஆட்சிக்கு உட்பட்டுத்தான் உள்ளன. உடனடியாக உரியவர்களை வரவழைத்து யாகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்யச் சொல்" என்றான்.

ஆன்றோர்கள் வரவழைக்கப்பட்டனர். ஆனால் அவர்கள், "யுதிஷ்டிரனும் திருதராஷ்டிரனும் இருக்கும் வரை நீ ராஜசூய யாகம் செய்ய முடியாது. அதற்குப் பதிலாக வேண்டுமானால் வைஷ்ணவ யாகத்தைச் செய். அதுவும் ராஜசூய யாகத்திற்கு சமமானதுதான்" என்று கூறினர்.

அவர்கள் சொற்களை ஏற்றுக்கொண்டு அந்த மாபெரும் யாகத்தைச் செய்ய ஆயத்தமானான் துரியோதனன். எல்லா நாட்டு மன்னர்களையும் அழைக்க தூதர்கள் அனுப்பப்பட்டனர். துச்சாதனன், தூதன் ஒருவனை அழைத்து, "நீ உடனே துவைத வனத்திற்குச் சென்று யாகம் பற்றிக் கூறி அனைத்து பிராமணர்களையும் அந்த தந்திரமிக்க பாண்டவர்களையும் அழைத்து வா" என்று கூறி அனுப்பினான்.

துவைத வனம் சென்ற தூதனிடம் யுதிஷ்டிரர் கூறினார் "இத்தகைய பெரிய யாகத்தை துரியோதனன் நடத்துவது அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் பதின்மூன்று வருடங்கள் முடியாதவரை நகரத்துக்குள் நாங்கள் நுழைய முடியாதே."

பீமன் தொடர்ந்தான், "போ, பதின்மூன்று வருடங்களுக்குப் பிறகு நாங்கள் செய்யப் போகும் யாகத்தில் துரியோதனனும் அவனைச் சேர்ந்தவர்களும் பலி மிருகங்களாக இடப்படுவார்கள் என்று துரியோதனனிடம் போய்ச் சொல்."

யாகம் கோலாகலத்துடனும் பெரும் ஆரவாரத்துடனும் நடைபெற்றது. அனைவருக்கும் விலையுயர்ந்த பரிசுகள் வழங்கப்பட்டன.

துரியோதனனின் நண்பர்கள் இந்த யாகத்தை யயாதி, பரதன் போன்றோர் செய்த யாகங்களுக்கு ஒப்பிட்டு வானளாவப் புகழ்ந்தாலும் நகர மக்கள் அவ்வாறு எண்ணவே இல்லை. யுதிஷ்டிரர் செய்த ராஜசூய யாகத்தின் சிறப்பில் பதினாறில் ஒரு பங்கு கூட இந்த யாகத்தில் இல்லை என்றுதான் பேசிக் கொண்டார்கள்.

எல்லாம் நிறைவுற்ற பின்னர் துரியோதனன் கர்ணனை அணைத்துக் கொண்டு, "கர்ணா, உன் உதவியினால்தான் இவ்வளவு பெருமை மிக்க யாகத்தை என்னால் வெற்றிகரமாகச் செய்ய முடிந்தது. உன் ஒருவனின் உதவியால்தான் நான் பாண்டவர்களைக் கொன்று எதிரிகள் இல்லாமல் வாழ முடியும்" என்று மிக்க மகிழ்ச்சியுடன் கூறினான்.

கர்ணனும் பெருமையுடன், "நண்பா, அர்ஜுனனைக் கொல்லும்வரை, நான் என் கால்களைக் கழுவ மாட்டேன். மதுவோ மாமிசமோ உண்ண மாட்டேன். யார் எதைக் கேட்டாலும் தட்டாமல் கொடுக்கவும் செய்வேன்" என்று

கூறினான். இதனைக் கேட்ட கௌரவர்கள் சந்தோஷத்தால் தலைகால் தெரியாமல் கூச்சலிட்டு, அப்போதே பாண்டவர்கள் கொல்லப் பட்டது போல் மகிழ்ந் தார்கள். இந்த விஷயம் பாண்டவர்களுக்கு எட்டியது. கர்ணனின் வலிமை யுதிஷ்டிரருக்குக் கவலை அளிக்கத் தொடங்கியது.



ஒரு நாள் யுதிஷ்டிரர் கனவொன்று கண்டார். அந் நாட்டில் வாழ்ந்த மான் ஒன்று வந்து அவரிடம், “மன்னா, எங்கள் இனத்தை அழித்துவிட வேண்டாம். தயவு செய்து உங்கள் சகோதரர்களுடன் வேறொரு காட்டிற்குச் சென்று வாழ்வதன் மூலம் எங்களை வாழ விடுங்கள்” என்று பரிதாபமாக வேண்டிக் கொண்டது. மனம் இரங்கிய யுதிஷ்டிரரும் சகோதரர்களுடன் காம்யக வனம் நோக்கிச் சென்றார்.

(தொடரும்)



## பஞ்சகவ்யத்தின் சிறப்பு!

பசுவின் பால், தயிர், நெய், சாணம், கோமயம் ஆகிய ஐந்து பொருள்களும் சேர்ந்தது என்ற பொருளில் “பஞ்சகவ்யம்” என்ற சொல் வழங்கப் பெறுகிறது. இதுவே “ஆனிரை ஐந்து என்றும் “கோ” எனப்படும் பசுவிடமிருந்து கிடைக்கும் செல்வம் என்ற பொருளில் “கோநிதி” என்றும் கூறப்படும். பசுவின் பால் சந்திரனின் இருப்பிடம், தயிர் வாயு பகவானின் இருப்பிடம், நெய் சூரிய பகவானின் இருப்பிடம், சாணம் அக்கினி பகவான் இருப்பிடம், கோமயம் வருணபகவானின் இருப்பிடம் என்று கூறுவர். இவ்விதம் பஞ்சகவ்யம் தேவர்களின் வாசஸ்தலம் என்பதால், அதை சில பூஜைக்குப் பயன்படுத்துவது சிறப்புக்கு உரியதாயிற்று.



# கண்ணீரால் உலகை உய்வித்த அருள்வணிகர்

அழுகையும் கண்ணீரும் அனைத்து உயிர்களுக்கும் உண்டு! அழுகையே மனிதனின் முதல் மொழி! அழுதுகொண்டே பிறக்கிறோம்! அழவைத்து இறக்கிறோம்! தொல்காப்பியர் காட்டிய எட்டு வகை மெய்ப் பாடுகளில் நகைச்சுவைக்கு அடுத்து அழுகையைக் காட்டினார்.

**உலகுக்காக அழுத மழலை**

திருஞானசம்பந்தர் முற்பிறவியில் நற்றவம் செய்துவந்த சாமுசித்தர். ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து (குறள் 398) என்ற வள்ளுவத்தின் நெறிப்படி பலப்பிறவிகள் கல்விஞானம் பெற்றதால் மூன்றாம் வயதிலேயே இறையருள் பெற்று தேவாரம் பாடத்தொடங்கினார்.

பெரியபுராணம் 4286 பாடலில் திருஞான சம்பந்த ருக்காக 1256 பாடல்கள் மூன்றில் ஒருபங்கு சேக்கி ழார் பாடினார். தன் பசிக்காக உலகக் குழந்தைகள் அழும்! அவர் உண்ட சிவஞானப் பாலால் பாடிய 385 பதிகங் களும், 4169 தேவாரப் பாடல் களும் உலகோரின் ஆன்மப் பசியைப் போக்கியது!

**எவ்வுயிரும் குதூகலிக்க அழுதார்**

சீர்காழியில் சிவபாத இதயர் கோயில்குளத்தில் நீராடக் கிளம்பும் போதே, மூன்று வயது சம்பந்தக் குழந்தை தானும் கூடவருவேன் என்று தொடர்ந்து அழுது பின் சென்றார். சிவம் பெருக்க, தவம் பெருக்கும் ஞானக்குழந்தை தந்தை குளத்து நீரில் மூழ்கியதும் அழுதது. தண்ணீருக்குள் நின்று அகமர்ஷண மந்திரம் ஓதி மேலே வருவதற்குள் கண்களைப் பிசைந்தபடி வாய் அதரம் துடித்தபடி அம்மையே அப்பா என்று அழுதகாட்சியை ஓவியமாகத் தீட்டுகிறார் சேக்கிழார்.

**கண்மலர்கள் நீர்ததும்பக் கைம்மலர்களால் அசைந்து**

**வண்ண மலர்ச் செங்கனி வாய்மணி அதரம் புடைதுடிப்ப**

**எண்ணில் மறைஒலி பருக எவ்வுயிரும் குதூகலப்ப**

**புண்ணிய கன்று அனையவர் தாம் பொருமி அழுது அருளினார்**

**பெரிய புராணம்**

முற்பிறவி ஞானம் நினைவில் வந்ததும் அழுகையும் வந்தது முன் உணர்வு மூள அழத் தொடங்கினார்.

அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி அருட் கருணை எழுகின்ற திருவுள்ளத்து இறைவர் பால் அடிசில் பொன் வள்ளத்து ஊட்டு என்ன.. அழுததும் பால் கிடைத்தது. இதனால் தமிழகத்திற்கு ஒரு பழமொழியும் கிடைத்தது. அதுதான் அழுதப் பிள்ளை பால் குடிக்கும் என்பது. உமாதேவி பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலூட்டி கண்ணீரைத் துடைத்து அருளினார். உமையம்மை கண்ணீர் துடைத்து அருளிக்கையில் பொற்கிண்ணம் அளித்து அண்ணலை அங்கு அழுகை தீர்த்து அங்கணனார் அருள் புரிந்தார்

அச்சிறிய பெருந்தகையார் ஆனந்தக் கூத்தாடி னார். அழுது பெற்றவளுக்குத்தான் அந்நோவு தெரியும் என்பது பழமொழி. எனவேதான் தன்முன்னர் அழுதுவந்தவருக்கு சம்பந்தர் அருட்செயலால் ஆனந்தம் தந்தார். அழுதவர் குறையை உடனே சிவனைத் தொழுது நீக்கினார்.

**சிவன் தந்த பரிசுகள்**


நாளும் இன்னிசையால் தமிழ் பரப்ப

## இறைவழிபாட்டிற்கு நாளும் கோளும் அவசியமில்லை!



மருந்து சாப்பிடும் நோயாளிகள் பத்தியம் இருக்க வேண்டும். அது போல் ஆன்மிக வாழ்க்கையில் ஈடுபடுபவர்களிடம் புலனடக்கம் மனக்கட்டுப்பாடு இருந்தால்தான் மெய்யடியார்கள் என்ற இலட்சியத்தை அடைய முடியும். உள்ளத்தில் சிவபெருமானை எழுந்தருளச் செய்வதற்கு நாளையும் கோளையும் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதில்லை. உடனே செய்ய வேண்டும்.

வந்தவர் திருஞான சம்பந்தர். தமிழகத்தில் சிலப்பதிகாரம் நடந்தது கி.பி.200 என்பர். இதன்பிறகு 500 ஆண்டு காலம் இருண்ட காலமானது. திருஞானசம்பந்தர் தோன்றிய பிறகே தெய்வத்தமிழ் ஒளி பெற்று உலகை ஆண்டது. 16 ஆண்டிலேயே சிவனருள் பெற்று பற்பல சாதனைகள் செய்தவர்.



சீர்காழியில் இறைவன் சிவ ஞானப்பால் தந்தார். திருக் கோலக்காவில் பாடுவதற்குப் பொற்றாளம் வழங்கினார். முத்துச்சி விசை முத்துக்குடை, சின்னங்கள், முத்துப்பந்தர் திருப்பட்டீசுவரத்தில் கொடுத்தார். திருவாவடுதுறையில் உலவாப் பொற்கிழியும், திருவீழ் மிழலையில் பொற்காசும் சிவன் பரிசாகத்தந்தார்.

24 வகைப்பண்களில் 225 ஆலயங் களைப் பாடி மகிழ்ந்தார் சம்பந்தர், ஆசு, மதுரம், சித்திரக் கவிகளையும், ஏகபாதம், மாலை மாற்று, ஏழு கூற்றிருக்கை என்றும் யாப்பணி நுட்பமிகு பாடல்களையும் பாடி தெய்வத் தமிழை சம்பந்தர் வளப்படுத்தினார். 385 பதிகங்கள் 4169 தேவாரப்பாடல்கள் பாடினார்.

திருப்பாச்சிலாக்கிராமத்தில் முயலகன் நோயால் அழுது துடித்த, கொல்லி மழவன் மகள் நோயைப் பாடல் பாடி குணப்படுத்தினார். பவானியில் குளிர்க்காய்ச்சலில் வாடி அழுத மக்களின் பிணிபோக்கப் பாடினார். திருக்கொள்ளம்புதூரில் பாடலால் விடத்தை ஓட்டிக் காட்டினார்.

### மங்கையர் கண்ணீர் மாற்றினார்

திருமருகலில் தாமன் என்னும் வணிகனின் ஏழாவது மகள், மாமனுடன் ஓடி வந்தார். திருமணம் ஆகும் முன்பே பாம்பு தீண்டி மணமகன் மாண்டான்.

வாளரவு தீண்டவும், தான் தீண்ட இல்லாள் பாம்பு தீண்டிய மாமனை தான் தீண்டி அழமுடியாது கதறி அழுதாள் மங்கை.

கண்ணீரின் விலை தெரிந்த அருள்வணிகர் பாடல்பாடி பிணமகனை எழுப்பி மணமகன் ஆக்கித் திருமணமும் செய்வித்தார் திருஞான சம்பந்தர். மதுரையில் சோழப்பேரரசி மங்கை யர்க்கரசியின் அழைப் பால் சம்பந்தர் பாண்டிய நாடு சென்றார்.

அனல்வாதம், புனல் வாதத்தால் சமணர் களை வென்று, கூன் பாண் டியனுக்கு மந்திரத்திருநீற் றுப் பதிகம் ஓதி நோய் தீர்த்தார். சமணர்கள் தீ வைத்தனர். வைத்த சம ணர்களுக்கே அதைத் திருப்பி அனுப் பினார். கோளறு பதிகம் பாடி நவக் கிரக தோஷங்கள் சிவனடியாரைப் பற்றா வண்ணம் ஆணையிட்டார். வளவர் கோன் பாவை, மங்கையர்க்கரசியின் அழு கையை ஆனந்தக் கண்ணீராக மாற்றினார் சம்பந்தர். திருமயிலையில் சிவ நேசச் செட்டியாரின் மகள் பூம்பாவையை எலும்பு சாம்பலிலிருந்து உயிர் தந்து எழுப்பினார். குமரிப்பருவமாய் உருப்பெற்று பூம்பாவை எழுந்ததும், தந்தையாய் நின்று அவள் கண்ணீரை மாற்றினார்.

கண்ணீரால் சிவன் அருள் பெற்று, சிவன் அடியார்களின் கண்ணீரைத் துடைத்து அருள் செய்த திருஞானசம்பந்தரை நினைத்து அருள் பெறுவோம்!

என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே சம்பந்தரை எண்ண!

* ம.கி.ரமணன்



## அருளாளர்களுக்கு அருட்காட்சியளித்த

# மகாகுரு பாபாஜி!

ஆதிசங்கரர் மிகப் பெரிய மகான். அம் பாளின் அருள் பெற்றவர். இவர் குண்டலினி பிராணாயாமம், கிரியா யோகம் இவற்றில் பாபாஜியின் போதனைகளைப் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆதிசங்கரரின் சிட்சைகுரு கோவிந்தபாதர், தீட்சைகுரு (யோகம்) பாபாஜி.

ஆதிசங்கரர் இந்தியாவின் நான்கு மூலை களிலும் மடங்களை நிறுவியிருக்கிறார். தென்னிந் தியாவில் சிருங்கேரி, மேற்கில் துவாரகை, கிழக் கில் பூரி, வடக்கில் ஜோஷிமத் ஆகிய இடங்களில் மடங்கள் உள்ளன. வேதாந்த தத்துவத்தை சரி யான அத்வைத (ஒரு பொருண்மை வாதம்) வழி யில் விளக்கியவர் இவர். ஆதிசங்கரர் பாபாஜி யிடமிருந்து வாரணாசியில் கிரியா யோகத்தில் தீட்சை பெற்றார். ஆதிசங்கரருடன் தமக்கு ஏற்பட்ட சந்திப்பு பற்றி லாஹிரி மகாசயரிடமும், சுவாமி கேவலானந்தரிடமும் விவரித்திருக்கிறார் பாபாஜி.

பதினைந்தாம் நூற்றாண்டின் மிகச்சிறந்த கவிஞர் மகான். இவரும் பாபாஜியிடம் தீட்சை பெற்றவரே. கபீர் இந்து, முஸ்லிம் நல்லிணக்கத் துக்குப் பாடுபட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. உருவ வழிபாட்டைக் கண்டித்து, அத்வைதக் கொள்கையைப் பரப்பியவர் இவர். கபிரின் இறுதிச் சடங்கில் இரு மதத்தினரும் கலந்து கொண்டனர். இரு மதத்தினரும் அவரைப் போற்றுகின்றனர்.

"யோகி எஸ்.ஏ.ஏ. இராமையா"

தமிழகத்தில் செட்டிநாட்டைச் சேர்ந்த இராமையா எஸ்.ஏ.அண்ணாமலைச் செட்டியார் என்ற வணிகரின் மகன். தாய் தேவான ஆச்சி.

இராமையா சென்னைப் பல்கலைக் கழகத்தில் நிலவியல் (Geography) படித்துப் பட்டம் பெற்றவர். மேற்படிப்பு படிக்க அமெரிக்கா சென்றிருந்த போது சயரோகப் பாதிப்பு ஏற்பட்டது.

பாபாஜி இவருடைய நோயைக் குணப்படுத் தினார்.

1970ல் இராமையாவுக்கு இரண்டு அருட்காட் சிகள் கிடைத்தன. ஷீரடிபாபா அவருக்குத் தரிசன மாகி, உமது குரு பாபாஜி என்றார். பாபாஜியின் திருவுருவை இரண்டாவது அருட்காட்சியில் கண்டார் இராமையா.

நோயில் அவதியுற்ற காலத்தில் இராமையா தற்கொலைக்கு முனைந்தார். அப்போது "மகனே, உன் வாழ்வு தொடரட்டும். இனி என்னுடைய வாழ்வாக அதைத் தொடர்வாய்" என்றொரு குரல் ஒலித்தது. மறுநாளே அவருடைய நோய் குணமானது. மருத்துவர்களும் அவர் நலம் பெற்றதை, சோதித்து உறுதி செய்தனர். அது பாபாஜியின் அருள் என்பதைப் புரிந்து கொண்ட இராமையா தம்மை அவருடைய சேவையில் அர்ப்பணித்துக் கொண்டார்.

எலும்புச் சயரோக நோயில் பாதிக்கப் பட்டிருந்த அவருடைய கால் சரியாகி விட்டது. அவர் குணமுற்ற பின்பு, ஒரு நாள் பாபாஜியை அகக்காட்சியில் கண்டார். பாபாஜி நொண்டி நடந்தார். "ஏன் நொண்டுகிறீர்கள்?" என்று இராமையா கேட்டார். "உனது நோயை நான் தற்காலிகமாக ஏற்றுக் கொண்டிருக்கிறேன்" என்று பதில் வந்தது. பாபாஜியின் அன்பையும் கருணையையும் எண்ணியெண்ணி உருகினார் இராமையா.

கிரியா யோகத்தில்தாம் உருவாக்கிய புது வழியை பாபாஜியே இராமையாவுக்கு நேடியாக உபதேசித்தார்.

நாம் மற்றவர்களுக்குப் பயன்படும்படியாக வாழ வேண்டும் என்று தீர்மானித்த இராமை யா இயன்றமுறை மருத்துவம் பயின்றார். சென்னையில் ஒரு மருத்துவமனை தொடங்கி ஊனமுற்றவர்களுக்கு இலவசமாய் சிகிச்சையளித்தார்.

### பூரண மௌனத்தின் பெருமை!

பூரண மௌனத்தில்தான் ஆத்ம ஞானத்தை உணர முடியும். பூரண மௌனத்தில்தான் அகந்தை அழியும். "மோனம் என்பது ஞான வரம்பு" இது அவ்வைப் பாட்டியின் அமுதமொழி.

"வி.டி.நீலகண்டன்"

சென்னையைச் சேர்ந்த பத்திரிக்கையாளர் டாக்டர். அன்னிபெசன்ட் அம்மையாரின் பிரம்ம ஞான சபை உறுப்பினர். இவர் இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேருவின் நண்பருமாவார்.

பாபாஜி இவருடைய நீரிழிவு, வயிற்று உபாதை, காலில் ஏற்பட்ட புண், கடுமையான காய்ச்சல் இவற்றினை குணமளித்திருக்கிறார்.

பாபாஜியின் கருத்துக்களை 'The voice of Babaji and mysticism unlocked', Babaji's masterkey to all Ills' and 'Death of Death' ஆகிய மூன்று நூல்களாக நீலகண்டன் எழுதியுள்ளார்.

பாபாஜி அறிவுறுத்தியதன் பேரில் இராமையாவும், நீலகண்டனும் இணைந்து "கிரியை யோக சங்கம்" (1952) நிறுவினர்.

இராமையா வீட்டில் கூட்டுப் பிரார்த்தனையின் போது (1952 ஜுலை 26) பாபாஜி தனது முழுத் தோற்றத்தையும் அவர்களுக்கு வெளிப் படுத்திக் காட்டினார். நீலகண்டன் வீட்டுப் பூஜையிலும் தன்னுடைய உருவில் பாபாஜி தோன்றியிருக்கிறார். இராமையாவை தனது மகன் என்றும், நீலகண்டனைத் தன் குழந்தை என்றும் பாபாஜி குறிப்பிட் டிருக்கிறார்.

இராமையாவும், நீலகண்டனும் சேர்ந்து "கிரியா" என்ற இதழ் ஒன்றையும் நடத்தியிருக்கின்றனர். (அவர்களுக்கிடையே 20 வயது வித்தியாசம் இருந்தாலும் அவர்களுடைய ஆன்மீகப் பார்வையும், சேவைப் மனப்பான்மையும் ஒன்றாகவே இருந்தது) 1968ல் தாம் உருவாக்கிய சித்தர்கள் நூலில் பாபாஜி பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார் இராமையா.

1955க்குப் பிறகு நீலகண்டன் தம்முடைய குடும்பப் பொறுப்புகள் மற்றும் இதர விவகாரங்கள் காரணமாய் கிரியா சங்க வேலைகளில் தொடர்ந்து ஈடுபடவில்லை.

இராமையா தமது மனைவியுடன் அயல் நாடுகளுக்குச்சென்று பாபாஜியின் புகழைப்பரப்பி னார். போகிற இடமெல்லாம் கிரியா யோகம் பற்றிப் போதிக்கத் தவறவில்லை.

1964-68 கால கட்டத்தில் அமெரிக்கா, இலங்கை, மலேசியா, ஆஸ்தி ரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்குச் சென்ற இராமையா, உலக அளவில் ஐம்பது யோக மையங்களை நிறுவினார். இனி உலகின் கவனம் பாபாஜியின் யோக முறையின் பால் திரும்பும் (2053ல் இருந்து) என்று இராமையா குறிப்பிட்டிருக்கிறார்.

**"சுயநலமற்றவராயிருங்கள்,**
**செயலின் பலன்களைக் கருதாதீர்கள்**
**அகந்தையை விடுங்கள்"**

என்பார் பாஜி. கிரியை யோகம், சரணாகதி, சேவை இவற்றின் மூலம் மக்கள் தங்கள் பிரச்சனைகளில் இருந்து விடுபட முடியும் என்பது அவருடைய கருத்து.

அன்பைப் போதித்தார் பாபாஜி உலகமே அன்புமயமாகிவிட வேண்டும் என்பது அவருடைய நோக்கம். இராமையா போன்றவர்கள் தங்கள் குருவின் நோக்கத்தை நிறைவேற்றப் பாடுபட்டிருக்கின்றனர்.


* C.S.தேவநாதன்



# ஆலயச்சிற்பங்கள் அழகுக்கு மட்டுமா?

ஆலயங்களில் உள்ள சிற்பங்களைப் பார்த்தால், அவை அழகிற்காக உருவாக்கப்பட்டவை போல் தெரியவில்லை. அழகான பெண் என்பவள் லிங்கபைரவி தேவி போல் இருக்க மாட்டாள் என்பது என் கருத்து. லிங்கபைரவி, பெண் தன்மையின் ஒரு குறிப்பிட்ட பரிமாணத்தை குறிக்கும்படி உருவாக்கப்பட்டுள்ளது.

தெய்வீக பெண்தன்மைக்கு இரண்டு பரிமாணங்கள் உண்டு. அவர்களை காளி என்றும் கௌரி என்றும் இருவிதமாக அழைக்கிறோம். காளி கருப்பு, கௌரி சிவப்பு. இது வேறுமனே அவர்களது தோல் நிறத்தைப் பற்றியது அல்ல. இந்திய மொழிகளில் ராகா என்றால் வண்ணம் என்று பொருள்படும். ஆனால், அந்த வார்த்தை ஏதோ ஒன்றின் குணத்தைப் பற்றியும் சொல்லும். இந்திய சாஸ்திரிய சங்கீதத்தில் இசையின் ஒரு குறிப்பிட்ட சுவையை ராகம் என்று அழைக்கிறார்கள். ஒருவிதமான சுவையை நீங்கள் உருவாக்கினால், அது ஒரு குறிப்பிட்ட அமைப்பையும், வர்ணத்தையும் உங்கள் மனதில் உருவாக்கும். இதனாலேயே, ஒரு சபதத்தையும், அதன் அதிர்வையும், அந்தச் செயலையும், சூழ்நிலையையும்



குறிப்பிட நாம் ராகா எனும் வார்த்தையை பயன்படுத்துகிறோம். ஏனெனில், நம் விழிப்பு நிலை மூலம் இவை நமக்குள் வெவ்வேறு வர்ணங்களை உருவாக்குகிறது என்பதை நம்மால் உணர முடிகிறது.

கோவில்களில் நாம் பார்க்கும் தேவிகள், ஒன்று கௌரியாகவோ அல்லது காளியாகவோ இருக்கிறார்கள். அதாவது சிவப்பு வர்ணம் அல்லது கருப்பு வர்ணம். ஒருவர் கறுப்பு கிரானைட்டிலும் இன்னொருவர் வெள்ளை மார்பிலிலும் உருவாக்கப்படுகிறார் என்று அர்த்தம் அல்ல. இருவருமே கருப்பு கிரானைட்டில்தான் உருவாக்கப்படுகிறார்கள். இந்த கருமையும் வெண்மையும் அவர்களது தோல் நிறத்தைச் சார்ந்தது அல்ல, நல்லது தீயதை சுட்டுவதும் அல்ல. கருமையும் வெண்மையும் படைப்பின் இருவேறு பரிமாணங்களை குறிக்கிறது. இரண்டுமே இவ்வுலகம் நிகழ அவசியமாகிறது. கறுமை நிறமுடைய காளி, மூர்க்கமானவள். வெண்மையான கௌரி சாந்தமானவள். பொதுவாக, மென்மையான குணமுள்ளவர்கள் கோவிலின் மூலவருக்கான துணையாக வழிபடப்படுகிறார்கள்.

எங்கு சிவன் இருக்கிறாரோ அங்கு அவருக்கு கௌரியும் இருக்கிறாள். சிவன்தான் அங்கு முக்கிய சக்தி, அவள் அங்கு மற்றொரு அம்சமாய் இருக்கிறாள். ஏனெனில், அவள் சாந்தமாக, நாகரிகமானவளாக, பழக்கப்படுத்தப்பட்ட பெண்ணாக அதாவது மூர்க்கத்தனம் குறைந்தவளாக இருக்கிறாள். காளி எப்போதும் தனித்திருப்பாள். அவளருகே ஆண் உருவம் இருக்காது. தன்னிச்சையாகவே அவள் முழுமையான சக்தியாக செயல்படுவாள். வடிவியலைப் பொறுத்தவரையில், லிங்கபைரவி மூன்றரை சக்கரங்களை உடையவள். அவள் காளி என்பதால் கீழேயுள்ள 3 சக்கரங்களான மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதத்தின் ஒரு பாதியை மட்டுமே உடையவளாய் இருக்கிறாள். அவளுக்கு அரை இதயமே இருக்கிறது. அதனால் அவள் உங்களை அன்பு செய்வாள் என எதிர்பார்க்க வேண்டாம். அவள் அன்பிற்கு தகுதியானவள் அல்ல, ஆனால் அளப்பரிய கருணைக்கும்

சக்திக்கும் பாத்திரமவாள்.

இந்தச் சிலைகள் அழகு சார்ந்தவையா, கலா சாரம் சார்ந்தவையா அல்லது இவைகள் தத்துவ ங்கள் சார்ந்த அம்சங்களா? சிலை அமைப்பினைப் பொருத்த வரையில், அதில் எந்த தத்துவமும் இல்லை. அவற்றை வடிவியல் கலை எனலாம். துரதிருஷ்டவசமாக, மக்கள் வார்த்தைகளை மட்டுமே பிடித்துக் கொள்கிறார்கள். அதற்கு வேறு சிலர் தத்துவம் சார்ந்த விளக்கங்களை வழங்கு கிறார்கள். ஆனால், கிழக்கத்திய கலைகளுக்கு தத்துவம் சார்ந்த பின்னணி கிடையாது. நீங்கள் செய்யும் செயல்களுக்கு துணையாய் இருப்பதற்காக தத்துவங்கள் ஜோடிக்கப்படுகிறது. கிழக்கத்திய கலைகளோ, இந்தப் பிரபஞ்சத்தின் வடிவியலுடன் ஒத்த கூறுகளை ஆக்கும் நிகழ்வாக சிற்பங்களை உருவாக்குகிறது.

இங்கு ஒரு கலைஞர், படைப்பின் ஒரு குறிப்பிட்ட அம்சத்துடன், அவர் உருவாக்கிய கலை ஒத்திசைவில் இருந்தால் மட்டுமே வெற்றி பெற்றவர் எனக் கருதப்படுகிறார். இதனாலேயே, கிழக்கத்திய நாகரீகத்தில் தோன்றிய கலைஞர் தன் பெயரினை தன் வேலையில் பதிவு செய் வதில்லை. எப்படியிருந்தாலும், அவர் செய்தது எதையோ ஒன்றினைப் பார்த்துத்தானே! இந்தப் பிரபஞ்சத்தில் பிரம்மாண்டமாய் நிகழ்ந்து கொண் டிருக்கும் ஏதோவொன்றின் சிறிய பிம்பத்தை அவர் நகல் எடுக்கிறார். அந்த பிரம்மாண்டத்தின் செயல்பாடுகளைப் போலவே இவர் உருவாக்கிய சிற்றுருவமும் செயல்படுகிறது. அதைத்தானே அவர் நினைத்து பெருமைப்பட்டுக் கொள்கிறார்.

வெளித்தோற்றத்தைப் பொறுத்த வரையில் கைகளும் கால்களும் அழகம்சம் உடையதாய் உள்ளதா என நாம் பெரிதாய் கவனம் செலுத்து வதில்லை. ஒவ்வொரு கையும், காலும், நரம்பு



**ஆபத்தர்மம்!**

உடல்நலக் குறைவு, வெளியூர் பிரயாணம் போன்ற சில நியாயமான காரணங்களால் சில சமயங்களில் விரதத்தைப் பின்பற்ற இய லாமல் போய்விடும். அந்த நிலையை "விதி விலக்கு" அல்லது ஆபத்தர்மம்" என்று கருத வேண்டும். மற்றபடி பொதுவாக விரதத்தைக் கடைப்பிடிப்பதில் உண்மையான முயற்சி இருக்க வேண்டும்.

புடைக்க நேர்த்தியாய் உருவாக்கப்பட்டுள்ளதா என நாம் பார்ப்பதில்லை. ஏனெனில், இந்தியா வில் கலை வடிவங்கள் நம் கண்களுக்கு விருந் தாய் அல்லாமல், வடிவியலுடன் ஒத்திருக்கிறதா என்றே பார்க்கிறோம். அந்த வடிவத்திற்கு வடிவி யல் உருபடிவம் இருக்கிறதா, அதன்படி செம்மைப் படுத்தப் பட்டுள்ளதா என்றே பார்க்கிறோம். அந்த ரூபம் உங்கள் மேல் ஏற்படுத்தும் தாக்கமே அதிமுக்கியத்துவம் வாய்ந்ததாய் அமைகிறது.

கோவில்களின் பிரம்மாண்ட வெளிப்புற அமைப்புகளும் ஒரு குறிப்பிட்ட சக்தியை வெளிப் படுத்தும் விதமாகவே அமைக்கப்படுகின்றன. சில கோவில்கள், பல கோவில்களை விடவும் அறிவியல் நேர்த்தியில் பிரம்மாண்டமானதாய் அமைகின்றன. ஆயினும், கடந்த 700, 800 வருடங்களில் இந்தியாவில் பக்தி இயக்கம் துவங்கியபின், ஜன்னல் வழியே ஊடுருவி, இந்த தொழில்நுட்பம் மாயாமாய் மறைந்து விட்டது. மக்களின் உணர்வே பிரதானமாய் ஆனது.

ஒரு பக்தருக்கு அறிவியல் பற்றியோ தொழில் நுட்பம் பற்றியோ கவலை இல்லை. அவரது பலம் உணர்ச்சி, தனிமனிதருக்கு இது போன்ற விஷயங்கள் பொருந்திப் போகலாம். ஏனெனில், அவர் தன் பக்தியினை ஆடியும் பாடியும் வேறு சில செய்கைகளை செய்தும் வெளிப்படுத்திக் கொள்வார். பக்தர்கள் கோவில்களை எழுப்பக் கூடாது, அவற்றை யோகிகள் செய்ய வேண்டும். பக்தர்கள் கோவில்களை எழுப்பத் துவங்கியதால், மிகச் சக்திவாய்ந்த, வடிவியல் சார்ந்த அமைப்புகளாய் உருவாக்கப்பட்ட ஆலயங்கள், அப்படி இல்லாமல் போயின.

ஏனெனில், ஏதோவொரு பிரம்மாண்டத்தை ஒத்த வடிவியல் அமைப்புகளை சார்ந்து ஆலய ங்கள் அமைப்பது வெற்றியாய் கருதப்பட்டது. பெரும்பாலான மக்களுக்கு பிரம்மாண்டமான அந்த ஆலிர்பவத்தை அடைய வழியில்லை. அதன் பிரதி பிம்பத்தை சிறிய அளவில் ஒரு கட்டிடத்திலோ, நம்மால் புரிந்து கொள்ளக்கூடிய பொருளிலோ நாம் கொண்டு வரும்போது மக்களால் அதனை உணர முடிகிறது.

* சத்குரு ஜக்கி வாசுதேவ்



# கதிரவன் 108 போற்றிகள்

ஓம் அதிதி புத்ரனே போற்றி
ஓம் அளத்தற்கரியனே போற்றி
ஓம் அறுகுப்பிரியனே போற்றி
ஓம் அருணன் சோதரனே போற்றி
ஓம் அகந்தை அழிப்பவனே போற்றி
ஓம் அக்கினி அதிதேவதையனே போற்றி
ஓம் ஆண் கிரகமே போற்றி
ஓம் ஆதிவார நாதனே போற்றி
ஓம் ஆய்வின் இலக்கே போற்றி
ஓம் ஆறாண்டாள்பவனே போற்றி
ஓம் ஆன்மாவே போற்றி
ஓம் ஆதித்யஹ்ருதய ப்ரியனே போற்றி
ஓம் இருள்நீக்கியே போற்றி
ஓம் இயக்க சக்தியே போற்றி
ஓம் ஈசன் வலக்கண்ணே போற்றி
ஓம் உக்கிரனே போற்றி
ஓம் உஷா நாதனே போற்றி
ஓம் உவமைப் பொருளே போற்றி
ஓம் உயிர்களின் வாழ்வே போற்றி
ஓம் உத்திர நாதனே போற்றி
ஓம் உத்திரட்டாதிபதியே போற்றி
ஓம் என்பானவனே போற்றி
ஓம் எருக்கு சமித்தனே போற்றி
ஓம் எழுபரித் தேரனே போற்றி
ஓம் எண்ணெழுத்து மந்திரனே போற்றி
ஓம் எங்கும் நிறைந்தவனே போற்றி
ஓம் ஏற்றமளிப்பவனே போற்றி
ஓம் ஒளிப்பிழம்பே போற்றி
ஓம் ஒராழித்தேரனே போற்றி
ஓம் ஒய்விலானே போற்றி
ஓம் ஓங்காரத் துதித்தவனே போற்றி
ஓம் கதிரவனே போற்றி
ஓம் கண்கண்ட தெய்வமே போற்றி
ஓம் களங்கமிலானே போற்றி
ஓம் கமலம் விரிப்பவனே போற்றி
ஓம் கர்ணன் தந்தையே போற்றி
ஓம் கனலே போற்றி
ஓம் கண்ணின் காவலே போற்றி
ஓம் கற்பரசிச் சேவகனே போற்றி
ஓம் கண்டியூரில் அருள்பவனே போற்றி
ஓம் காசியபர் மைந்தனே போற்றி
ஓம் காயத்ரி தேவனே போற்றி
ஓம் கார்ப்புச் சுவையனே போற்றி
ஓம் காலக் கணக்கே போற்றி
ஓம் காய்பவனே போற்றி
ஓம் காலைமாலைக் கனிவோனே போற்றி
ஓம் கிழக்கு நோக்கனே போற்றி
ஓம் கிருத்திகை அதிபதியே போற்றி
ஓம் கிரக நாயகனே போற்றி
ஓம் கிருபாகரனே போற்றி
ஓம் குந்திக்கருளியவனே போற்றி
ஓம் குறை தீர்ப்பவனே போற்றி
ஓம் கோதுமைப் பிரியனே போற்றி
ஓம் கோணார்க்கிலருள்பவனே போற்றி
ஓம் ஞாயிறே போற்றி
ஓம் ஞாலக் காவலே போற்றி
ஓம் சனித் தந்தையே போற்றி
ஓம் சங்கராந்தி நாயகனே போற்றி
ஓம் சாட்சித் தேவனே போற்றி
ஓம் சமரிலானே போற்றி
ஓம் சிங்கக் கொடியனே போற்றி
ஓம் சிம்மராசியதிபதியே போற்றி
ஓம் சிரஞ்சீவியே போற்றி
ஓம் சிதம்பரத்தாலயமுளானே போற்றி
ஓம் சுயம்பிரகாசனே போற்றி
ஓம் சூர்ய நமஸ்காரப் பிரியனே போற்றி
ஓம் சூரியனார் ஆலயத் தேவனே போற்றி
ஓம் செம்மேனியனே போற்றி
ஓம் செம்மலர்ப்பிரியனே போற்றி
ஓம் செந்நிறக் குடையனே போற்றி
ஓம் செந்தாமரை ஏந்தியவனே போற்றி
ஓம் சூலாயுதனே போற்றி
ஓம் சோழர் மூதாதையே போற்றி
ஓம் சௌரத் தலைவனே போற்றி
ஓம் தனிக்கோயிலுளானே போற்றி
ஓம் தாமிர உலோகனே போற்றி
ஓம் தூயவனே போற்றி
ஓம் திருமேய்ச்சூரில் அருள்பவனே போற்றி
ஓம் நடுவிருப்போனே போற்றி
ஓம் நன்னிலத்தருள்பவனே போற்றி
ஓம் நலமேயளிப்பவனே போற்றி
ஓம் நளாயினிக்கருளியவனே போற்றி
ஓம் நான்முனித் தந்தையே போற்றி
ஓம் நாடப்படுவனே போற்றி
ஓம் நீதித் தேவனே போற்றி
ஓம் நோய் தீர்ப்பவனே போற்றி
ஓம் பகற் காரணனே போற்றி
ஓம் பனையபுரத் தருள்பவனே போற்றி
ஓம் பரஞ்சோதியே போற்றி
ஓம் பரிட்சுத்துக்கருளியவனே போற்றி
ஓம் பாலைநிலத் தேவனே போற்றி
ஓம் பிரபாகரனே போற்றி
ஓம் புகழ் வாய்த்தவனே போற்றி
ஓம் புத்தியளிப்பவனே போற்றி
ஓம் மல நாசகனே போற்றி
ஓம் மதி ஒளிரச் செய்பவனே போற்றி
ஓம் மயில் வாகனனே போற்றி
ஓம் மயூரகவிக்கருளியவனே போற்றி
ஓம் முதல் கிரகமே போற்றி
ஓம் முக்கோணக் கோலனே போற்றி
ஓம் முழுமுதற் பொருளே போற்றி
ஓம் மும்மூர்த்தி அம்சமே போற்றி
ஓம் ரவிகுலத் தலைவனே போற்றி
ஓம் ருத்ரன் ப்ரத்யதிதேவதையனே போற்றி
ஓம் விடியச் செய்பவனே போற்றி
ஓம் வலிவலத்தருள்பவனே போற்றி
ஓம் "ஹ்ரீம்" பீஜ மந்திரனே போற்றி
ஓம் சூரியநாராயணனே போற்றி

N. கிருஷ்ணமூர்த்தி

மன்மத ஆண்டு தை மாதம்
15.01.2016 முதல் 12.02.2016 வரை



## விருச்சிகம்

அவசரமும் பதற்றமும் கொண்டு விளங்கும் விருச்சிக ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு சாதகமான கிரக நிலை இல்லை என்றாலும் லாபஸ்தானாதிபதி புதன் தனஸ்தானத்தில் அமருவது பொருளாதாரத்தில் நல்ல வரவு வந்து சேரும். தன ஸ்தானாதிபதியும் தற்காலிகமாக அமருவது நல்ல பலனை தரும்.

### பணியாளர்களுக்கு

எந்த வேலையாக இருந்தாலும் அதில் ஈடுபாடுகளை கொண்டு விளங்கும் நீங்கள் குறுகிய காலத்தில் செய்து முடிக்கும் எண்ணம் உருவாகும். தொழில் சார்ந்த விவாதத்தில் கலந்து கொள்வீர்கள். உடல்நலனில் சிறு குறை இருந்தாலும் பாதிப்பை தராது. எனினும் பொருளாதார வளர்ச்சி பெறுவீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

உங்கள் நல்ல முயற்சிகளுக்கு சிறப்பான வளமும் ஏற்றமும் பெறுவீர்கள். பொது விடயங்களில் நீங்கள் எல்லோரிடமும் அன்பாக பழகும் விதம் செயல்பாடுகள் பாராட்டும்படி அமையும். முதலில் வளர்ச்சியை நோக்கி பயணம் செய்வீர்கள். பணவரவு இருக்கும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானாதிபதி உங்களின் இலக்குகளுக்கு பக்கபலமாக அமைந்து செயல்படுவார். விடுதிகள், பேக்கரி கடை வியாபாரம் நன்றாக இருக்கும். பேருந்து இயக்கம் நல்ல லாபத்தை தரும். வரவும் செலவும் சமமாக இருக்கும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினரின் எண்ணம் ஈடேறும். தொலைதூர பயணம் நன்மை தரும். சிறந்த இடத்தை அடைய உங்களின் முயற்சி நல்ல பலனை தரும். விளையாட்டு வீரர்களுக்கு விருது கிடைக்கும் வாய்ப்பு அமையும்.

### பெண்களுக்கு

பெண்களின் சுறுசுறுப்பான பணிகளால் பாராட்டு பெறுவீர்கள். சுய தொழிலில் ஓரளவு நன்றாக செயல்படுவீர்கள். பொருளாதாரத்தில் வளர்ச்சி இருக்கும்.

### மாணவர்களுக்கு

கடல்சார்ந்தகல்வியும் ஆராய்ச்சியும் உங்களுக்கு பெருமையை தேடித் தரும். ஆசிரியர்கள் உங்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து தருவார்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

21.01.2016 வியாழன் காலை 09.25 முதல் 23.01.2016 சனி மாலை 03.00 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

### விசாகம் 4ஆம் பாதம்

திருப்பத்தை பற்றி எண்ணாமல் உங்களின் அன்றாட பணிகளை சரியாக செய்து முடிப்பீர்கள். குடும்ப வாழ்க்கையில் சிறுசிறு சோதனைகள் வந்து சேரும்.

### அனுசம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

பல வருடம் கஷ்டப்பட்டிருந்தாலும் தற்சமயம் பொங்கும் சனி நடப்பவர்களுக்கு ஏற்றமான நற்பலன்களையும் வெற்றியையும் தரும். பொருளாதார நிலை மேம்படும்.

### கேட்டை 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

முதலீடுகள் இல்லாத கமிஷன் வியாபாரத்திலும் ஒன்லைன் வர்த்தகத்திலும் வளர்ச்சியை பெறுவீர்கள். பொருளாதாரம் சிறக்கும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்: ஓரஞ்சு, வெண்மை, நீலம்**

**அதிர்ஷ்ட திசைகள் : வடக்கு, வடமேற்கு, வடகிழக்கு**

**அதிர்ஷ்ட கிழமைகள் : திங்கள், செவ்வாய், புதன்**

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் நவக்கிரக வழிபாடு செய்து விட்டு அம்மனுக்கு வேப்பெண்ணெய் தீபம் போட்டு வர தீமை நீங்கி நன்மை பெறுவீர்கள்.

## ஸ்ரீகிருஷ்ணரின் உறுதிமொழி!

ஸர்வதர்மான் பரித்யஜ்ய
மாமேகம் சரணம்வ்ரஜ!
அஹம்த்வாஸ்ர்வ பாபேப்யோ
மோக்ஷயிஷ்யாமி மா சுச!! கீதை 18 66

சுலோகத்தின் பொருள், "எல்லா தர்மங்களையும் அறவேவிட்டு, என் ஒருவனையே சுளிலிருந்தும் விடுவிப்பேன். வருந்தாதே."




# பாவப் பதிவுகளும் போக்கும் வழிகளும்

பாவம் என்ற சொல்லுக்கு தமிழில் பழிச் செயல் என்று பொருள். இந்த பழிச் செயல்கள் எப்படி பதிவாகின்றன என்பதை நாம் விஞ்ஞான பூர்வமாக உணர்ந்து கொண்டு அதற்கு ஏற்றவாறு நமது எண்ணங்களைச் செயல்களைச் சீர் அமைத்துக் கொள்ள வேண்டும்.

எண்ணம், சொல், செயல் இந்த மூன்று வகையிலே நாம் செயலாற்றி வருகின்றோம் வாழ்கின்றோம். ஒவ்வொரு செயலுக்கும் ஒரு விளைவு உண்டு. அந்த விளைவு தனக்கோ, பிறர்க்கோ. தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, அறிவுக்கோ, உடல் உணர்ச்சிக்கோ, துன்பம் தருமானால் அதைத்தான் "பாவம்" என்று சொல்லப்படுகிறது. இந்த பாவம் வருத்தத்தைத் தரக்கூடியது. ஆகையினாலே ஒரு செயல் செய்யும் பொழுது நம்மிடம் பதிவாகிறது. செய்த பிறகு ஏற்படக்கூடிய துன்பமும் பதிவாகிறது. அந்தப் பதிவு பழக்கமாகி அதன் வழியே மீண்டும் செய்ய பிரதிபலிப்பு, செயலாற்றல், இன்ப துன்ப விளைவுகள் உண்டாகின்றன.


ஆறாவது அறிவினைப் பெற்ற மனிதன் பிறருடைய உள்ளம் உணர்ந்து இன்ப துன்ப உணர்வுகளைத் தெரிந்து கொண்டு அதற்குத் தக்கவாறு தன் எண்ணம், சொல், செயல்களைப் பயன்படுத்தக் கூடிய விவேகத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் "மனம்" என்பது ஒன்று உண்டு. அந்த மனத்தை அறியத்தக்க அறிவுதான் ஆறாவது அறிவு. மனம் இல்லை என்று சொல்லவும் முடியாது. எடுத்துக்காட்டவும் இப்படித்தான் உள்ளது என்று விவரிக்கவும் முடியாத ஒரு மறைபொருளாக இருக்கிறது. இப்படி மறைபொருளாக உள்ள மனத்தின் தோற்றம், இயக்கம், விளைவுகள் இவைகள் எல்லாம் தெரிந்து நல்ல முறையிலே பயன்படுத்தக் கூடிய ஆற்றல்தான் ஆறாவது அறிவின் சிறப்பாகும். அத்தகைய அறிவைப் பெற்ற மனிதன் பாவச் செயல்கள் செய்யாமல் உடல் தூய்மையாகவும், மனம் தூய்மையாகவும் வைத்துக் கொள்ள, அறிவுக்கு மூலப் பொருளாக உள்ள எல்லாம் வல்ல இறை நிலையோடு கலந்து உறவாகி எப்பொழுதும் இன்பமாக இருக்கக்கூடிய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும்.



மெய், வாய், கண், மூக்கு. செவி என்ற பஞ்சப் புலன்களின் மூலமாக அனுபவிக்க கூடிய இன்பம் அவ்வப் பொழுது மாறிவிடும். கொஞ்சம் இன்பம் அதிகரிக்கின்ற பொழுது அதுவே துன்பமாக உணரப் பெறுகிறது. அப்படியின்றி இயற்கையை உணர்வது இறை நிலை யை உணர்வது, அறிவை உணர்வது இந்த உல கிலே உள்ள பரு உருவத் தன்மைகளையும் குணா குணங்களையும் அதற்குரிய காரண காரியங்களையெல்லாம் விளங்கிக் கொள்வது என்ற நிலையில் அறிவு சிந்தித்து செயல்படுத்தி வாழும் போது சலிப்பில்லாத இன்பமாக இருக்கிறது. அந்த சலிப்பில்லாத இன்பத்தைத் தான் பேரின்பம் என்று சொல்லுகிறோம்.

இந்த பேரின்பத்தை அனுபவிக்க, இந்தப் பேரண்டத்தின் உற்பத்திக்குக் காரணமான மெய்பொருளோடு அறிவானது கலந்து ஒன்றி அவனே நானாக இருக்கிறேன். அவனேதான் என்னிடம் அறிவாக இருக்கிறான் என்ற தெளிவு பெற்ற நிலையில் உயிர்கள் எல்லாமே இறைவனுடைய திருவுருவங்கள்தான் என்ற



ஒரு தெளிவில் வாழும் பொழுது ஒருவருக்குத் துன்பம் ஏற்படுத்தக் கூடிய பழிச் செயல்களைச் செய்ய முடியுமா? அதுபோல ஒருவர் துன்பம் அடையும் பொழுது அதைப் பார்த்து விட்டு அலட்சியமாக இருக்க முடியுமா? முடியாது.

ஆகவே இறை நிலையை அறிவினால் உணர்ந்து அன்பும், கருணையுமாக மாறி பிற உயிர்களுக்கு துன்பமே செய்யக் கூடாது என்பதும், துன்பப்படும் உயிர்களுக்கு நன்மையே செய்ய வேண்டும், உதவ வேண்டும் என்ற தெளிவும் உண்டாகும். இதுதான் மனித இனத்துக்குத் தேவையான அறிவு, தேவையான வாழ்க்கைப் பாதை இந்தப் பாதைத் தான் அறநெறி வாழ்வுப் பாதையாகும்.

நாம் எல்லோரும் ஒரே நோக்கத்தோடுதான் செயல்படுகிறோம். பழிச்செயல் பதிவுகளிலிருந்து விடுபட்டுத் தூய்மை பெற்று இறை நிலை அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் பிறந்தோம். வாழ்ந்து கொண்டும் இருக்கிறோம். இருந்தாலும் தேவை. பழக்கம், சூழ்நிலையினுடைய நிர்ப்பந்தங்களினால் சில சமயங்களில் தெரிந்தோ தெரியாமலோ, சில நேரங்களில் தவறு செய்ய வேண்டியதாக இருந்து, தவறு செய்து விடுகிறோம். அந்த இடத்திலே, உணர்ச்சி வயப்பட்ட நிலையிலே, அறிவு சிந்திக்கத் தவறியதாலே, சூழ்நிலையின் நிர்ப்பந்தத்தாலே, தவறு நடந்து விடுகிறது. இந்தத் தவறுகள் எல்லாம் எப்படி நம் உடலிலே பழிச்செயல் பதிவுகளைப் பதிவு பெற்று, மீண்டும் மீண்டும் துன்பங்களையே விளைவிக்கின்றன.

இந்த பழிச் செயல் பதிவுகள் நமது உடலில் எங்கெங்கே பதிவாகின்றன என்று பார்க்கும் போது உடல், செல்களில், மூளைச் செல்களில், உயிர்த்துகள் செல்களில், வித்து செல்களில், சீவகாந்தக் களத்தில், வான் காந்தத்தில் பதிவாகித் தக்க காலத்தில் தனக்கும் தனது விந்துவழித் தோன்றும் சந்ததிகளுக்கும் தக்க விளைவுகளை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு அலைகளாகவும் பதிவுகளாகவும் நம் உடலில் தொடர்ந்து நடைபெற்ற வண்ணம் உள்ளது.

இந்த உண்மையை நீங்களே உணர வேண்டும். இதற்குப் படிப்பு ஒன்றும் பயன்படாது. எந்த விஞ்ஞான கருவியும் கூட பயன்படாது. நம்முடைய மனம், நம்முடைய வாழ்க்கை முறை, நம்முடைய இன்ப துன்ப உணர்வுகள், நம் சிந்தனை இதனைக் கொண்டு உட்கார்ந்து அதற்கு உரிய முறையில் ஆராய்ச்சி செய்து அவரவர்களே தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.

அது நன்மையாக இருந்தாலும் சரி, தீமையாக இருந்தாலும் சரி நன்மையும் தீமையும் செயல்களில் இல்லை. செய்யும் செயல் என்னென்ன விளைவுகளைத் தருமோ அந்த விளைவைக் கொண்டுதான் நன்மையான விளைவாக இருந்தால் "புண்ணியம்" என்றும், தீமையான விளைவாக இருந்தால் "பாவம்" என்றும் கூறுகிறோம்.

**வேதாத்ரி மகரிஷி**



## திரோதானம்!

1. படைத்தல், 2. காத்தல், 3. அழித்தல், 4. மறைத்தல், 5. அருளல் ஆகிய ஐந்து தொழில்களை இறைவன் இயற்றுகிறான். இவற்றில் மறைத்தல் என்பதே "திரோதானம்" என்று அழைக்கப்படுகிறது. தன்னைக் காட்டாமல் உலகியல் பொருள்களை ஜீவாத்மாக்களுக்குக் காட்டும் இறைவனின் செயல், "திரோதானம்" எனப்படும்.



# தனுசு

மன்மத ஆண்டு தை மாதம்

15.01.2016 முதல் 12.02.2016 வரை

தனக்கென்று ஒரு நியாயத்தை வைத்து கொண்டு விளங்கும் தனுசு ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்குரிய சந்திரர்கள் நல்ல நிலையில் அமருவது பொருளாதார வளர்ச்சியையும் தொழிலில் மேன்மையும் பெறுவீர்கள். கொடுத்த இடத்தில் விரைவில் பணம் வந்து சேரும்.

### பணியாளர்களுக்கு

பல வருடம் ஒரே இடத்தில் வேலை பார்த்து வந்த உங்களுக்கு வேறு இடத்தில் மாற்றம் வரலாம். சொந்த ஊருக்கு சென்று உறவினர்களை சந்தித்து விட்டு வருவீர்கள். அதிகாரிகளின் ஒத்துழைப்பு உங்களுக்கு கிடைக்கும். பொருளாதாரத்தில் நன்மை உண்டாகும்.

### பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு

பொது கருத்துகளிலும், புதிய முயற்சிகளிலும் எதிர்பார்த்த நற்பலன்களை பெறுவீர்கள். அவசியமான விடயங்களுக்கு எல்லோரிடமும் உடன்பாடு கொள்வீர்கள். எதிலும் முன்னெச் சரிக்கையுடன் இருப்பீர்கள். வரவு வந்து மகிழ்ச்சியை அனுபவிப்பீர்கள்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானாதிபதி ராசியில் அமர்வது உங்க ளுக்கு சிறப்பான வளர்ச்சியை தருவதுடன் சில புதிய அனுபவங்களையும், வியாபாரத்தில் பெறுவதுடன் எதிர்காலத்தில் லாபகரமான வியாபார முயற்சிகளுக்கு நல்ல பலன் தரும்.

### கலைஞர்களுக்கு

கலைத்துறையினருக்கு சுமையாக இருந்து வந்த பிரச்சினைகள் விடுபடும். இரவு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வேண்டி வரும். துணையாக யாரையும் அழைக்காமல் வெற்றி புன்னகையுடன் இருப்பீர்கள்.

### பெண்களுக்கு

பெண்களுக்கு விரும்பிய வாழ்க்கை வந்து அமையும். குறுக்கு வழி தொழிலை எதிர்க்கும் நீங்கள் தடுக்கவும் செய்வீர்கள். வரவுக்கு மீறிய செலவுகள் செய்வீர்கள். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### மாணவர்களுக்கு

மாணவர்கள் விளையாட்டு போட்டிகளிலும் கவிதை போட்டிகளிலும் வெற்றி பெறுவீர்கள். சீரான கல்வி பெறுவதில் சில தடை இருந்தாலும் சிறப்பாக செயல்படுவீர்கள்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

23.01.2016 சனி மாலை 03.01 முதல் 25.01.2016 திங்கள் இரவு 10.59 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

**மூலம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

தனக்கு தெரிந்த தொழிலை தயங்காமல் செய்து வரும் நீங்கள் முற்பகுதி கஷ்டமும் பிற்பகுதி நன்மையும் பெறுவீர்கள். உழைப்பிற்கு தகுந்த ஊதியம் கிடைக்கும்.

**பூராடம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

பெண்களின் எண்ணம் போல் வாழ்வு அமையும். மகத்துவத்தை அறிந்து சில விடயங்களில் கவ்னமாக செயல்படுவீர்கள். பொருளாதார மாற்றங்கள் உண்டாகும்.

**உத்திராடம் 1ஆம் பாதம்**

அரசாங்க பணியிலிருந்த சிலருக்கு மாற்றம் உண்டாகும். குடும்பத்துடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள். பொருளாதாரம் சிறக்கும்.


**அதிர்ஷ்ட நிறங்கள்:** மஞ்சள், சிவப்பு, வெண்மை

**அதிர்ஷ்ட திசைகள் :** கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** வியாழன், ஞாயிறு, திங்கள்

இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

சனிக்கிழமை ராகு காலத்தில் பைரவரை வணங்கி நல்லெண்ணெய் தீபம் போட்டு வரவும். ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் நவக்கிரக வழிபாடு செய்துவர எல்லாம் நன்மையாக அமையும்.



## சத்சங்கம் அவசியமே!

மனிதன் தன் தெய்வீக இயல்பை மறந்திருக்கிறான். அவன் மறந்திருக்கும் தெய்வீக இயல்பையும், வாழ்க்கையின் இலட்சியத்தையும் சத்சங்கம் அவனுக்கு நினைவுபடுத்துகிறது.

நான் மூச்சு விடுவதற்கு நமக்குக் கற்றுக் கொடுப்பதற்கு ஒருவர் தேவையில்லை. ஆனால் நாம் சிந்திக்கவும், நன்கு வாழவும் கற்றுக் கொடுப்பதற்குச் சத்சங்கம் தேவை.



# புனிதப்படுத்தும் விரதப்பயணம்!



மனிதர்களின் துன்பங்களைப்போக்கிக் கொள்ள தெய்வ வழிபாடு இன்றியமையாதது. நம்மை படைத்த தெய்வத்திடமே கஷ்ட நேரங்களில் முழுமையாகச் சரணடைவது, தாய் தந்தையரின் தாழ்பணிந்துகாத்திட வேண்டுவதற்கு ஒப்பானதேயாகும். ஆலயம் சென்று தமது இஷ்ட தெய்வங்களை வளமான, நலமான வாழ்வினை அளித்து உய்விக்கும்படியும், எல்லோரையும் காத்திடும்படியும் உலக மக்கள் வேண்டிக் கொள்கின்றனர். ஆனால் ஹரி ஹர புத்திரர் ஸ்ரீ சபரிமலை சாஸ்தாவின் ஆலயம் செல்வதற்கு நேர்மையான விரத அனுஷ்டானங்கள் மேற்கொள்ளவேண்டும்.

கல்லையும் முள்ளையும் கடந்து மணிகண்டப் பிரபுவின் தரிசனம் பெறவேண்டி ஒரு ஐயப்ப பக்தர். மேற்கொள்ளும் பிரயத்தனங்களிலேயே அவர் தமது பாபங்களிலிருந்து வெகுவாக விடுபட்டு புனிதப்பட்டு விடுகின்றார்.



இந்த உலகில் மானிடராய்ப் பிறந்த எவராயினும் ஐயப்ப தரிசனம் காண விரும்பினால், ஒரு குருவை அணுகி முறையாக மாலையணிந்து நாற்பத்தொரு நாட்களுக்கு பிரம்மசரியத்தைக் கடைப்பிடித்து, இருமுடி சுமந்து எரிமேலி அடைந்து, பேட்டையாடி ஐயன் எல்லையாகிய அடர்காட்டில் நுழைந்து, அழுதையாற்றில் நீராடி, நீலிமலையைக் கடந்து தூய்மையான விரதத்தை அனுஷ் டித்தவராய், "ஐயப்ப சாமி" யாய் சபரி பீடத்தை அடைய வேண்டும்.

இவ்வாறு பயபக்தியுடனும் தூய்மையான உள்ளத்துடனும் தர்மசாஸ்தாவான ஐயன் ஐயப்ப சுவாமிகசளின் திருவடிகளை பதினெட்டுப் படியேறித் தொழுதால், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் வற்றாத வளமும் பெற்று சிறப்புடன் வாழலாம் என்பது திண்ணம்.

* A.A.ராமன்

# கடன் நிவர்த்தி தலம்

இந்தியாவின் தமிழ் நாட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு அருகில் அமைந்துள்ள அழகிய சிற்றூராகிய திருச்சேறை என்னும் கிராமத்தில் அமைந்துள்ளது புராண பெருமைகள் நிறையப் பெற்ற சாரபரமேஸ்வரர் ஆலயம். திருசேறையில் அருள்பாலிக்கும் இவ்விறைவனை செந்நெறியப்பர் என சைவ சமய குரவர்கள் போற்றிப் பாடியுள்ளனர். இத்தலத்து அம்பிகையை ஞானாம்பிகை என்றும் ஞானவள்ளி என்றும் அழைக்கின்றார்கள்.

இவ்வலாயம் அமைந்துள்ள இந்த ஊருக்கான புராண பெயராக உடையார் கோவில் என்பது இருந்துள்ளது. திருஞானசம்பந்தர் அப்பர் முதலான நாயன்மார்கள் இந்த தலத்தை பற்றியும் இங்கு அருள்பாலிக்கும் மூலவர் சாரபரமேஸ்வரர் பற்றியும் போற்றி பாடியுள்ளனர்.

இச்சிவத்தலத்தில் மார்கண்டேய மகரிஷி, ஆலயத்தின் உட்பிரகாரத்தில் விநாயகருக்கு அருகில் ஒரு லிங்கத்தை பிரதிஷ்டை செய்து வணங்கி வந்தார். இந்த லிங்கமே கடன் நிவர்த்தீஸ்வரராக விளங்கக் கூடிய ரிணவிமோசன லிங்கேஸ்வரர் என அழைக்கப்படுகின்றார்.



ரிண என்றால் கடன் என்றும் விமோசனம் என்றால் நிவர்த்தி என்றும் பொருள் படுகின்றது. கடன் நிவர்த்தி செய்யும் ஈசன் ரிணவிமோசன லிங்கேஸ்வவரராக விளங்குகின்றார். மனிதராய் பிறந்த ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்க்கையில் துன்பங்கள் அண்டாத நிலையில் சுகமாக வாழ வேண்டும் என்று தான் விரும்புகின்றார்கள்.

ஒருவர் பிறக்கும் போது நல்ல ஆரோக்கியத்துடனும், அறிவு உள்ளவராகவும், கல்வி உடையவராகவும் இருந்த போதிலும், வறுமை என்ற ஒன்று பற்றிக் கொள்ளும் பட்சத்தில் எந்தவித சுகத்தையும் அனுபவிக்க முடியாமல் போய் விடும். ஆதலால் தான் அவ்வை மூதாட்டியார் கொடிது கொடிது வறுமை கொடிது என்று சொல்லியுள்ளார். ஆகையால், மனிதர்களுக்கு பெரும் துன்பத்தை அளிக்கின்ற கடன் பட்ட நிலை வரக் கூடாத ஒன்றாகும்.

இதையே தான் கவிசக்கரவர்த்தி கம்பரும் "கடன் பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்று கடன் படுதலின் கொடுமையை வலியுறுத்தி கூறுகின்றார்.

இப்படிப்பட்டவறுமை வராமலிருக்க, வறுமையை நீக்கி செம்மையான வாழ்வளிக்கும் இறைவனே





"ரிணவி மோசன லிங்கேஸ்வரர்" ஆவார். இவரை 11 வாரங்களில் 11 திங்கட்கிழமைகளில் தொடர்ந்து அர்ச்சனை செய்து 11ஆவது வாரத்தில் அபிசேகத்தில் கலந்து கொண்டால் பக்தர்களின் பிரார்த்தனைகள் நிறை வேறும். அவர்களின் கடன் நீங்கி, வறுமை விலகி, செல்வம் பெருகும்என்பது நம்பிக்கை. அத்துடன் மக்கட்பேறு,கல்விச் செல்வம், பொருட் செல்வம் என அனைத்தும் கிடைக்கப் பெறுவது திண்ணம்.

மனிதனுக்கு செம்மை தரும் நெறியை அதாவது முக்தி நெறியை அளித்து அருளும் இறைவன் இங்கு குடி கொண்டுள்ளதால் இந்த தலத்தின் திருச்சேறை பெருமானுக்கு "செந்நெறியப்பர்" என்ற பெயரும் வழங்குவது சிறப்பானதாகும். இத்தலத்திலேயே பஞ்சசேத்திரம் என்னும் பெருமாள் ஆலயமும் இருப்பதால் இவ்வால யத்து இறைவன் செந்நெறியப்பரை "சாரபரமேஸ்வரர்" என அழைக்கத் தொடங்கினார்கள்.



இவ்வாலயத்தில் சிவதுர்க்கை, வைஷ்ணவி துர்க்கை, விஷ்ணு துர்க்கை என மூன்று வடிவங்களாக ஒரே சன்னதியில் துர்க்கை காட்சியளிப்பது சிறப்பான ஒன்றாகும். இத்துர்க்கையை வெள்ளிக்கிழமை தோறும் ராகு காலத்தில் வழிபாடு செய்வது சிறப்பாக கருதப்படுகின்றது.

ஆலயத்தின் நவகிரகத்தை தரிசித்து நடராஜ பெருமான் சன்னதிக்கு அருகில் சென்றால் பைரவர் அருள்காட்சி அளிக்கின்றார். இவர் அப்பரால் பாடப் பெற்றவர் மற்றும் இடது மேற்கரத்தில் சூலம் போட்ட மணியுடன் கூடிய பைரவராவார் இவர். இந்த பைரவர் வடிவம் வேறு எந்த ஆலயத்திலும் காணப் பெறாத தனிச் சிறப்பாகும்.

இவ்வாலய பைரவருக்கு அஷ்டமி அன்று வடமாலை சாற்றி, சஹஸ்ரநாம அர்ச்சனை செய்தால் காரியா அனுகூலங்கள் கிடைக்கப் பெற்று வழக்கு விவகாரங்களில் வெற்றியும், நவகிரக தோஷங்கள் விலகுவதும் கிட்டும் எனவும் சொல்லப்படுகின்றது.

சூரியன் பூஜித்த சிவத்தலங்களுள் சாரபரமேஸ்வரர் ஆலயமும் ஒன்றாகும். ஆண்டுதோறும் மாசி மாதத்தில் 13, 14 மற்றும் 15 தேதிகளில் காலையில் சூரியனது ஒளிக் கற்றைகள் இத்தலத்து இறைவன் மீதும் அம்பிகையின் பாதங்களிலும் நேரடியாக விழுகின்றன. இந்த மூன்று நாட்களிலும் மாலை வேலைகளில் கண்டியூரில் சூரிய பூஜை நடத்தப் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும். மாசி மாதம் முழுவதும் காலையில் இந்த ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.

தேவாரப்பாடல் பெற்ற காவிரி தென்கரை திருத்தலங்களில் இது 95ஆவது தலமாக விளங்கு கின்றது. சேற்றூர் என்ற பெயர் சேறை என வழங்கியது எனலாம். தேவாரப் பாடல்களில், திருச்சேறை வயல்களால் சூழப் பெற்ற பசுமையான வளநகர் என இத்தலத்தின் பெருமைகள் குறிக்கப்படுகின்றது. ஆலயத்தின் வெளிப்பிரகாரத்தில் மூலவர் சாரபரமேஸ்வரருக்கு இடப்பக்கத்தில் இறைவி அம்பிகையான ஞான வள்ளியம்மன் சன்னதி அமைந்துள்ளது. உள்பிரகாரத்தில் விநாயகர், நடராஜர் இடபாரூடர் தட்சிணாமூர்த்தி, காலபைரவர், துர்க்கை, சனிபகவான் ஆகியோருக்கு சன்னதிகள் அமையப் பெற்றுள்ளன. மேற்கு பிரகாரத்தில் தலவிநாயகரும் அவரை அடுத்து மார்கண்டேயரும், அவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ரிணவிமோசன லிங்கேஸ்வரரின் சன்னதியும் அமைந்துள்ளன.

இதையடுத்து பாலசுப்பிரம்ணியர் சன்னதியும் உள்ளது. இந்த தொன்மைமிகு ஆலயம் சோழர் காலத்தில் குலோத்துங்க அரசனால் கட்டப்பட்டதாகும். இவ்வாலயத்தின் தல விருட்சமாக மாவிலங்கை விளங்குகின்றது. மகாசிவராத்திரி, ஐப்பசி அன்னாபிசேகம், மார்கழி திருவாதிரை ஆகிய விழாக்கள் இந்த ஆலயத்தில் வெகுச் சிறப்பாக கொண்டாடப்படுகின்றன.

* அபிதா மணாளன்

# பூட்டிய ஆலயத்தில் வழிபாடு செய்யலாமா?

கண்டிப்பாக தரிசனம் செய் யக் கூடாது. ஒரு காரியம் செய்வதிலிருந்தே அதை எதற்காகச் செய்திருப்பார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் பூட்டியிருப்பதே நாம் தரிசனம் செய்யக் கூடாது என்பதற்காகத்தானே! ஒரு ஆலயத்தில் திரை இட்டிருக்கும் போது சுவாமியைச் சுற்றி வருவதைத் தவிர்க்க வேண்டும். நமது அதிகாரத்தினாலோ ஆசையினாலோ திரையை விலக்கிப் பார்த்தோமானால் மிகக் கடுமையான தோஷங்கள் சம்பவிக்கும் என ஆகமங்கள் எச்சரிக்கின்றன.

ஒரு விளக்கு ஸ்விட்சை கீழே அழுத்தினால் எரிகிறது. மேலே அழுத்தினால் அணைகிறது. ஒரே இணைப்பில் இரண்டுவிதமான விளைவுகள், அதை எப்படி இயக்குகிறோமோ, அதன்படி அமைகிறது. இதுபோல், நமது சாஸ்திரங்களில் வேண்டாம் என்று சொல்லப்பட்டதை, எக்காரணத்தைக் கொண்டும் செய்யக்கூடாது. ஆலயங்கள் முழுவதும் பல தேவதைகள் சூட்சும ரூபமாக சஞ்சரித்துக் கொண்டிருப்பார்கள். கதவுகளில்கூட விசேஷ பூஜைகள் செய்யப்பட்டிருக்கும். ஆதலால், அகாலத்தில் அவர்களை நாம் தொந்தரவு செய்யக்கூடாது.

சரி, அவசர காலமாக இப்போது இருப்பதனால் தாங்கள் தரிசிக்கச் சென்றபோது, ஆலயம் பூட்டியிருந்தால் அந்த ஆலயத்தின் கோபுரத்தை தரிசித்தாலே போதுமானது. கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்ற வழக்குக்கு இணங்க, தாங்கள் எந்தப் பிரார்த்தனைக்காகச் செல்கிறீர்களோ அது கண்டிப்பாக நிறைவேறும்.

இனி எந்த ஆலயம் செல்வதாக இருந்தாலும், முடிந்தவரை கோயிலின் காலங்களை விசாரித்துச் செல்லவும். இதனால், சாஸ்திரத்தை மீறிய தோஷமமும் வராது. நமக்கும் குறித்த நேரத்தில் கடவுளைப் பார்த்த திருப்தி கிடைக்கும்.



மன்மத ஆண்டு தை மாதம்
15.01.2016 முதல் 12.02.2016 வரை



# மகரம்

மனதளவில் மறுமலர்ச்சியை விரும்பும் திருப்பங்களை சந்திக்கும் மகர ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு யோகாதிபதியும் ராசி அதிபதியும் லாபஸ்தானத்தில் அமருவதும் ராசிநாதன் பார்வையும், தற்காலிகமாக குரு பார்வை பெறுவதும் உங்களின் வளர்ச்சிக்கு நல்ல பலனை தரும். நீண்ட நாள் பிரச்சினை பேசி தீர்க்கும் நிலை உண்டாகும்.

**பணியாளர்களுக்கு**

செயல்களில் வேகமும், எடுத்த காரியத்தில் கவனமும் கொண்டு செயல்படுவீர்கள். தொழிற்சாலைகளிலும் தோட்ட பணிகளிலும் உங்களின் இலக்குகளை அடைந்து திறம்பட செயல்படுவீர்கள். வரவுக்கு தகுந்த செலவுகள் வந்து வருமானத்தை குறைக்கும். பணதட்டுப்பாடு வராது.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது சேவை செய்வதிலும் பிறரின் கஷ்டங்களை கண்டு வருந்துவதிலும் நீங்கள் எப்பொழுதும் சிறந்த செயல்பாடுகளை உடையவர் என்பதால் அதில் உங்களின் கவனம் சிறப்பாக இருக்கும். மருத்துவ ரீதியான உதவிகளை பிறருக்கு செய்து தருவீர்கள். பணவரவு இருக்கும்.

**வியாபாரிகளுக்கு**

ஆடம்பர பொருட்கள், சமையல் பாத்திரம், கைவினை பொருட்கள், தரை விரிப்பு, பெயிண்ட் போன்ற வியாபாரம் சிறப்பாக அமையும். எந்த தொழிலிலும் உங்களின் நோக்கம் சிறந்ததாக இருக்கும். சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். பொருளாதாரம் வளர்ச்சி பெறும்.

**கலைஞர்களுக்கு**

கலைஞர்களின் ஆசீர்வாதம் உங்களுக்கு கிடைக்கும். முக்கிய நிகழ்ச்சிகளை கண்டு களிக்கும் வாய்ப்பு அமையும். போட்டி பொறாமை அகலும். உங்கள் மீது நம்பிக்கை உண்டாகும். பொருளாதாரத்தில் சிறப்பாக இருக்கும்.

**பெண்களுக்கு**

பெண்களின் வைராக்கியம் நன்றாக முன்னேற்ற பாதையில் அழைத்து செல்லும். சுயதொழிலிலும், புதிய வேலை வாய்ப்பிலும் முயற்சிகள் கை கூடும். பணம் புழங்கும்.

**மாணவர்களுக்கு**

கல்வியில் வெற்றியின் இலக்குகளை அடைவீர்கள். முன் இருந்ததை விட கல்வி ஆர்வம் அதிகரிக்கும். கற்றவற்றை பிறரிடம் பகிர்ந்து கொள்வீர்கள்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

25.01.2016 திங்கள் இரவு 11.00 முதல் 28.01.2016 வியாழன் காலை 09.18 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்**

அரசு சார்ந்த காரியம் கைகூடும். நினைத்ததை உடனே முடிக்க நினைப்பீர்கள். கருத்துகளை பகிர்ந்து கொள்ளுவீர்கள். ஏமாறாமல் விழிப்புடன் இருப்பீர்கள்.

**திருவோணம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

தொழிலில் வளர்ச்சியை பெறுவீர்கள். குறுகிய காலத்தில் வளர்ச்சியை பெறுவீர்கள். சொந்த முயற்சியில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

அனைத்து துறையிலும் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்று ஆசைப்படு வீர்கள். விவசாய உற்பத்தி நல்ல பலனை தரும்.

**அதிர்ஷ்ட நிறங்கள்: நீலம், வெண்மை, பச்சை**

**அதிர்ஷ்ட திசைகள் : தெற்கு, தென்கிழக்கு, வடமேற்கு**

**அதிர்ஷ்ட கிழமைகள் : சனி, வெள்ளி, புதன்**

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் ராகு காலத்தில் அம்மனுக்கு குங்குமம் அர்ச்சனை செய்து நெய் விளக்கு போட்டு வர சகல காரியமும் வெற்றியையும் பொருளாதார வளர்ச்சியையும் தரும்.



## சேர்க்கைப் பலன்!

வானத்திலிருந்து பொழியும் மழைநீர் தூய்மையானதுதான். எனினும் அது சேற்றில் விழுந்தால் சேறாகவும், சாக்கடையில் விழுந்தால் சாக்கடையாகவும், கங்கையில் விழுந்தால் கங்கையாகவும் மாறுகிறது. அதுபோல் ஒருவன் எத்தகையவர்களோடு சேருகிறானோ, அதற்கேற்பவே அவன் குணமும் அமையும்.

# அன்னையின் அருட்சாட்சிகள்!



அங்கிங்கெனாதபடி உலகில் எங்கும் நிறைந்திருக்கிறாள் அன்னை ஆதிபராசக்தி. மேல் மருவத்தூரை மையமாகக் கொண்டு இவ்வுலகில் அன்னையின் அருளொளி பரந்திருக்கிறது. அன்னையின் அற்புதங்களை வார்த்தைகளில் சொல்லிவிடத்தான் முடியுமோ? அது, வானின் நட்சத்திரங்களை எண்ணுவதற்கும், மண் துகளை எண்ணுதற்கும் சமமன்றோ? ஆயினும், அன்னையின் அற்புதங்களை வாயாரச் சொல்லுவதாலும், கேட்பதாலும், வாசிப்பதாலும் நம் ஆன்மாவும் புனிதமாகிவிட வாய்ப்பு உண்டல்லவா? இந்த ஆண்டு தைப்பூசத்தை முன்னிட்டு மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி பீடத்தில் சக்தி மாலை அணிந்து நேர்த்தி செலுத்திவிட்டு ஆத்ம திருப்தியுடன் வெளி வந்தவர்களில், வெளிநாட்டிலிருந்து வந்தவர்களைச் சந்தித்து, அவர்களது தெய்வீக அருளனுபவங்களைக் கேட்டறிந்தோம். மனதில் புளகாங்கிதமும், உடலில் சிலிர்ப்பும், கண்ணில் ஆனந்தக் கண்ணீரும் மேலிட அவர்கள் சொன்ன அனுபவங்கள் இதோ...!

**ரதி, லண்டன்.**

நான் இத்தனை ஆண்டுகளாக ஒரு மனுஷியாய் வாழ்ந்தாலும், அம்மாவிடம் வந்தபிறகுதான் நான் ஒரு புனித ஆத்மாவாக ஆனேன்.


1998ஆம் ஆண்டு சுற்றுலாவுக்காக குடும்பத்துடன் தமிழ்நாடு வந்திருந்தேன். எல்லாக் கோயில்களுடன் இங்கும் வந்து வணங்கிவிட்டு வெளியே வந்தேன். அப்போது அருட்திரு பங்காரு அடிகளார் காரில் இருந்து இறங்கினார். எனது கணவர் அவரைக் காட்டி, 'இவரைத்தான் இங்க அம்மாவா எல்லாரும் கும்பிடுறாங்கள்' என்றார். 'மனுசரக் கும்பிடுவோமோ? ஏறுங்க காரில' என்று கூறி காரில் ஏறிச் சென்றுவிட்டேன்.

2000ஆம் ஆண்டு, லண்டனில் அம்மாவின் மந்திரங்கள் அடங்கிய புத்தகம் ஒன்றை ஒருவர் எனக்குத் தந்தார். அதை வாங்கி நான் படித்து வந்தாலும் அடிகளாரை அம்மாவாக ஏற்க என் மனம் ஒப்பவில்லை.

2007ஆம் ஆண்டு, ஒருநாள் ஒரு கனவு. அதில் அடிகளார் அம்மாவாக தரிசனம் தந்து, பிரசாதத்தை என் வாயில் ஊட்டினார். நித்திரையில் இருந்து விழித்த நான், வயிற்றைப் பிரட்டவே பாத்ரூம் சென்று வாந்தியெடுத்துவிட்டு வந்து படுத்தேன். மீண்டும் கனவில் அம்மா. என் கையைப் பிடித்து நவக்கிரகம் ஒன்றுக்கு அருகில் அழைத்துச் சென்ற அம்மா, அங்கு கையில் கற்பூரத் தட்டை ஏந்தியபடி நிற்க, அவருக்கு அருகில் பென்னம்பெரிய கரு நாகம் ஒன்றும் அதன் அருகில் ஆதிபராசக்தியும் நின்றிருக்கக் கண்டேன். அப்போதுதான் அது மேல் மருவத்தூர் என்பதே என் நினைவுக்கு வந்தது. காரணம் எல்லாக் கோயிலையும் அடுத்தடுத்துப் பார்த்ததால் இந்தக் கோயில் எப்படியிருந்தது என் பதை மறந்துவிட்டிருந்தேன். பின்னர் என்னைச் சுற்றி ஓம் எனும் ஒரு ஒளிவட்டம் தோன்றியது. அத்துடன் கனவு கலைந்துவிட்டது.

அதுவரை, அடிக்கடி என் கனவில் நாகங்கள் என்னைத் துரத்துவது போல் காண்பதுண்டு. இந்தக் கனவுக்குப் பின் கனவில் நாகங்கள் என்னைத் துரத்துவதில்லை. இந்தக் கனவின் பின் என் மனம் அம்மாவை நோக்கித் திரும்பியது. கனவு கண்ட இரண்டாவது மாதம் அதாவது 2008ஆம் ஆண்டு நான் மேல்மருவத்தூருக்கு இருமுடி போட்டேன்.

தைப்பூசத்தன்று மேல்மருவத்தூருக்கு வந்திருந்த போது எனது தாலிக்கொடி கழன்று இம்மண்ணில் விழுந்தது. நான் அதிர்ந்துபோய்விட்டேன். இதுபற்றி அம்மாவிடம் கேட்டதற்கு, அம்மா அபயக்கரம்





காட்டினாள். அவள் என்னை ஆசிர்வதிக்கிறாள் என்று எண்ணினேன். ஆனால் அவள் முகத்தில் கவலை ரேகைகள் படிந்திருந்ததைக் கண்டேன். சரியாக நான்கு மாதம் கழித்து, என் கணவர் இறந்துவிட்டார். அப்போதுதான் அவள் 'உன் கணவர் இறக்கப்போகிறார்' என்பதையும், 'உன் கணவர் இறந்துவிட்டாலும் உன் குடும்பத்தின் ஒளியாய் இருந்து உன்னை வழிநடத்துவேன்' என்பதையும் குறிப்பால் அறிவித்ததையும் உணர்ந்தேன். என் கணவர் தவறப் போவதையும், அதற்கு ஆறுதலாகத் தானே இருக்கப் போவதையும் காலத்தே உணர்த்தி என்னை ஆட்கொண்ட அம்மாவின் அருளை என்னவென்று சொல்வது?

## பிரான்ஸ் மன்றத்திலிருந்து வந்த சக்தி

என் வாழ்க்கையில் அம்மா செய்த அற்புதங்கள் பல. என் மகளுக்கு திருமணம் நிச்சயம் செய்திருந்தோம். அவளுக்கு அம்மாவின் ஆசிர்வாதம் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று மனதுக்குள் நினைத்திருந்தேன். சரியாக, அந்த நேரம் பார்த்து திருமதி அம்மா ஐரோப்பா விஜயம் செய்தார். அவரது கைகளாலேயே என் மகளுக்கும் எனக்கும் புடவை எடுத்துக் கொடுத்து கழுத்தில் மாட்டும் ஒரு டொலரும் தந்து ஆசிர்வாதம் செய்தார். இன்று என் மகள் கணவன், பிள்ளைகள் என்று சந்தோஷமாக இருக்கிறாள். இத்தனை வருடங்களாகத் தொடர்ந்து மாலை அணிந்து வருகிறேன். பதினோராவது மாலை அணியும்போது எனது வாழ்க்கையில் ஒரு பெரும் பிரச்சினை ஏற்பட்டது.

சில நாட்களில் என் கணவருக்கு இரவில் பேச்சு வராது. வாயில் இருந்து எச்சில் ஊறும். நான் பயந்துபோவேன். இதை பிரான்சில் ஒரு விசேட வைத்திய நிபுணரிடம் கொண்டுபோய்க் காட்டினோம். அவர்கள் என்னை பயமுறுத்தும் விதத்திலேயே கதைத்தனர். இரண்டு நாட்கள் கழித்து வரச் சொன்னார்கள். அவர்கள் நடந்துகொண்ட விதம் எனக்குப் பிடிக்கவில்லை. எனவே மீண்டும் அங்கு செல்லக்கூடாது என்று நினைத்தேன்.

அந்த ஆண்டு தைப்பூசத்துக்கு இன்னும் சில நாட்களே இருந்தன. என் வீட்டில் நான் வைத்திருந்த அம்மா படத்தின் முன்னால் நின்று, 'அம்மா, அவரை இந்த வைத்தியர்களிடம் கொண்டுபோக எனக்கு விருப்பமில்லை. போனால் வருவாரோ என்று பயமாக இருக்கிறது. ஒரே மருந்தில் அவரது பிரச்சினையை நீ குணப்படுத்தவேண்டும்' என்று பிரார்த்தித்துவிட்டுப் படுத்துவிட்டேன். மறுநாள் காலை அந்த வைத்தியசாலையில் இருந்து அழைப்பு வந்தது. 'திரு. சண்முகராஜா. நீங்கள் இன்றைக்கு வரவேண்டாம். நாங்களே சொல்லி அனுப்புகிறோம்' என்று மறுமுனையில் இருந்து சொன்னார்கள். நான் துள்ளிக் குதித்து விட்டேன். அத்தனை சந்தோஷம் எனக்கு. உடனே என் மகளை அழைத்து, ஒரு பிரபல அமெரிக்க டொக்டரிடம் என் கணவரை அழைத்துச் சென்றோம். சில பரிசோதனைகளின் பின் அந்த டொக்டர் என் மகளிடம், 'இன்னும் கொஞ்ச நேரம் பிந்தி வந்திருந்தால் ஒன்றுமே செய்திருக்க முடியாது. இந்தப் பிரச்சினைக்கு ஒரேயொரு மருந்து இருக்கிறது. அதைக் கொடுப்பதானால் அவர் வைத்திய சாலையில் தங்க வேண்டிவரும்' என்றார்.

சிகிச்சைக்கு முன் செய்த பரிசோதனைகளில், அவரது இதயத்தில் பெரிய கட்டியொன்று வெடிக்கும் நிலையில் இருந்ததைக் கண்டு பிடித்தார்கள். உடனடியாக ஒப்பரேஷன் செய்ய வேண்டும் என்றார்கள். ஆனால், நான் இருமுடி போடவேண்டிய நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. 'இந்த நிலையில் அப்பாவை விட்டுவிட்டு இருமுடி அவசியமா?' என்று என் மகள் என்னைப் பேசினாள். மீண்டும் அம்மாவிடமே பிரார்த்தித்தேன்.

அன்று மாலை வைத்தியர் எங்களைக் கூப்பிட்டு, 'உங்கள் கணவருக்கு இப்போது சிகிச்சை செய்தால் ஆபத்தாகிவிடும். எனவே இந்தக் கட்டியை சாதாரண நிலைக்குக் கொண்டுவர இரண்டு மாதங்கள் மருந்து கொடுத்துவிட்டு, பிறகு ஒப்பரேஷன் செய்யலாம்' என்றார். உடனே நான் அவரிடம், எனது இருமுடி விடயத்தைக் கூறினேன். அதற்கு அவர், 'தாராளமாக நீங்கள் சென்று வாருங்கள். நீங்கள் வந்த பிறகுதான் ஒப்பரேஷன். அவருக்கு ஒன்றும் ஆகாது' என்று பச்சைக்கொடி காட்டினார். அவர் சொன்னதுதான் நடந்தது. பன்னிரண்டாவது இருமுடியின்போது என் வாழ்க்கையை எனக்குத் திருப்பித் தந்தார் அம்மா.

## ஜெர்மன் மன்றத்திலிருந்து வந்த சக்தி

நான் வசிக்கும் நகரில் அம்மாவின் வழிபாட்டு மன்றம் எதுவும் இல்லை. ஒருமுறை சுவிஸில் இருக்கும் எனது தங்கையின் வீட்டுக்குச் சென்றிருந்தோம். அவள்தான் என்னை அங்குள்ள ஒரு வழி பாட்டு மன்றத்துக்கு அழைத்துச் சென்றாள். எப்போதும் கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டு, விபூதி, குங்குமம் வாங்கிக் கொண்டு வருவதோடு சரி. ஆனால் சக்தி மன்றத்தில்தான் நம் கையாலேயே அம்மாவுக்கு அர்ச்சனை செய்யும் பாக்கியம் கிடைத்தது. இது எனக்கு மிகப் பிடித்துப்போய்விட்டது. அம்மாவின் படம் ஒன்றையும் என் தங்கை எனக்குத் தந்தாள். என்றாலும் அம்மாவின் மீது எனக்கு முழுமையான நம்பிக்கை ஏற்படவில்லை. அங்கு சென்றுவந்த ஒரு சில நாட்களில் நித்திரையில் ஒரு கனவு. அதில், ஊரில் எனது குல தெய்வக் கோயில். அங்கே அழகான ஒரு குழந்தை தவழ்ந்துவருகிறது. கொஞ்சம் கொஞ்சமாக அந்தக் குழந்தையின் முகம் மறைந்து,

தொடர்ச்சி 96ஆம் பக்கம் பார்க்க...



# கும்பம்

மன்மத ஆண்டு தை மாதம்

15.01.2016 முதல் 12.02.2016 வரை

மனத்தில் பட்டதை தவறாமல் செய்யும் குணம் கொண்ட கும்ப ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு ஜென்ம கேதுவும், ஏழாமிட ராகுவும்சில குழப்பங்களைசெய்தாலும், புதன் லாபஸ்தானத்தில் அமருவது நன்மையை செய்துவந்தாலும், கிரக நிலைகள் சுமாராக இருப்பதால் புதிய முயற்சிகளை கைவிடுவதும் நல்லது.

### பணியாளர்களுக்கு

பணியில் செய்ய வேண்டிய கடமைகளை உரிய நேரத்தில் செய்து வளர்ச்சியை அடைவீர்கள். முக மலர்ச்சியுடனும் எழுச்சியுடனும் செயல்படுவீர்கள். தொழிற்சங்க பொறுப்புகள் உங்களுக்கு வந்து சேரும். பொருளாதாரத்தில் ஏற்றம் பெறுவீர்கள்.

### பொதுவாழ்வில் இருப்பவர் களுக்கு

குற்றம் இழைப்பவர்களை மன்னிக்க மாட்டீர்கள். பொது சொத்துக்களை சேதம் விளைவிப்பவர்களை விரட்டி விடுவீர்கள். பொது மக்களுக்கு மருத்துவ உதவிகளை பெற்று தருவீர்கள். வருமானத்தை பெருக்கி கொள்ளும் முயற்சிகளை எடுப்பீர்கள். பொருளாதாரம் சிறக்கும்.

### வியாபாரிகளுக்கு

தொழில் ஸ்தானம் பலம் பெற்று இருப்பது உங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும். போட்டியாளர்களின் இடையூறுகளை களைவீர்கள். விளையாட்டு சாமான்கள் மருத்துவ உணவு பண்டங்கள், பழ வகைகள், காய்கறிகள் விற்பனை நல்ல லாபத்தை தரும். பொருளாதாரம் மேன்மை பெறும்.

### கலைஞர்களுக்கு

கலைஞர்களின் சிந்தனையும், செயல்களும் நன்றாக அமையும். சாகச கலைஞர்களும், இசை கலைஞர்களும் நல்ல மேன்மை அடைவீர் கள். பெண் கலைஞர்களுக்கு வாய்ப்புகளும், வாழ்க்கை துணையும் அமையும். பொருளாதாரம் நன்றாக இருக்கும்.

### பெண்களுக்கு

பெண்களின் வாழ்க்கையில் குறுகிய காலத்தில் வளர்ச்சியை தரும். சுயதொழிலில் மேன்மை பெறுவீர்கள். பொருளாதாரத்தில் தேவைகளுக்கு பணவரவு இருக்கும். கணவன் மனைவி ஒற்றுமையில் சில சங்கடங்கள் வரும்.

### மாணவர்களுக்கு

மாணவர்களுடன் மெக்கானிக் இன்ஜினயரிங், தகவல் தொடர்பு கல்விகள் மேன்மை அடையும். ஆசிரியர்கள் உதவியை தேடி சென்றால் கிடைக்கும். முயற்சியே வெற்றியை தரும்.

### இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்

28.01.2016 வியாழன் காலை 09.19 முதல் 30.01.2016 சனி இரவு 08.56 மணி வரை

### நட்சத்திர பலன்கள்

#### அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள்

விவசாய பொருட்கள் வியாபாரத்தில் நல்ல லாபம் பெறுவீர்கள். மாற்றங்களால் வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பீர்கள். பொருளாதாரத்தில் வெற்றி பெறுவீர்கள்.

#### சதயம் 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்

வெளியூர் சென்று வருவீர்கள். வெளிநாட்டு நண்பர் உதவி கிடைக்கும். சிறந்த கலைஞர்கள் உருவாக்கி தருவீர்கள். கல்வியில் முதலிடத்தில் வருவீர்கள்.

#### பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள்

புதல்வர்களின் வேலை வாய்ப்பு விரைவில் கிடைக்கும். சுயதொழில் செய்பவர்களுக்கு இன்னும் கவனம் செலுத்த வேண்டி வரும். பொருளாதாரத்தில் வளர்ச்சி கிடைக்கும்.



### மூத்தோர் சொல்!

வயது, உருவம், பதவி, பட்டம், ஜாதி, குலம், இனம், மொழி ஆகியவற்றில் இல்லாமல் அறிவும் பண்பும் ஒழுக்கமும் உள்ளவர்களே மூத்தோர் ஆவர். அவர்களின் சொல்லே அமிர்தம் ஆகும். மூத்தோர் சொல் காத்தால் குறைவின்றி வையத்தில் வாழலாம்.

**அதிர்ஷ்ட நிறங்கள்:** நீலம், வெண்மை, பச்சை

**அதிர்ஷ்ட திசைகள் :** மேற்கு, வடமேற்கு, கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** சனி, வெள்ளி, புதன்

### இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்

நவக்கிரக சூரியனுக்கு ஞாயிற்றுக்கிழமை காலை 06, 07க்குள் நெய் விளக்கு போட்டு சிவப்பு நிற பூக்கள் வைத்து வணங்கி வர மனவலிமையும், தைரியமும் தொழிலில் பொருளாதார நன்மையும் கிட்டும்.



நீங்கள் ஒரு குகையின் வாசலில் நிற்பதுபோல் கனவு கண்டால் உங்கள் பெற்றோரோ அல்லது மற்றோரோ நீங்கள் திருமணம் செய்து கொண்டாக வேண்டும் என்று வற்புறுத்துகிறார்கள். ஆனால் உங்களுடைய குறைந்த வருமானத்தையோ. அல்லது வேறு சில காரணங்களையோ கருத்தில் கொண்டு நீங்கள் திருமணம் செய்துகொள்ள அஞ்சுகிறீர்கள். உங்கள் அச்சமெல்லாம் வெறும் கற்பனையே அன்றி, வேறு அல்ல. ஆகையால், துணிந்து மணந்து கொள்ளுங்கள்.

நீங்கள் ஒரு குகைக்குள் நுழைவது போல் கனவு கண்டால் முன்பின் தெரியாத சில புதிய மனிதர்கள் உங்களோடு நெருக்கமான தொடர்பு கொள்ள போகிறார்கள். அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்று அவர்களது வெளித் தோற்றத்தைக் கொண்டு முடிவு கட்டிவிடாதீர்கள். அவர்களைப் பற்றி தீர விசாரித்து அறிந்து கொண்டு அதன் பிறகு முடிவுக்கு வாருங்கள்.

நீங்கள் ஒரு குகைக்குள்ளிருந்து வெளியே வருவது போல் கனவு கண்டால் உங்கள் வாழ்க்கையிலே ஒரு புதிய மாறுதல் ஏற்படப் போகிறது. இதுவரையில் நீங்கள் கொண்டிருந்த கொள்கைகளும் கருத்துகளும் மிகத் தவறானவை என்பதை உணர்ந்து, தெளிவு அடையப் போகிறீர்கள். அதனால் உள்ளூர நீங்கள் ஒரு புதிய மனிதராக மாறிவிடுவீர்கள். என்றாலும், அதை எவரிடமும் வெளியே காட்டிக் கொள்ளாதீர்கள். அப்படிக் காட்டிக் கொள்வீர்களானால், நீங்கள் உங்களது மன அமைதியை இழக்க நேரிடும்.

**தமிழ்வாணன்**



# உன்னோடு இருப்பவனே அவன்!



கல்யாணம் ஆகவேண்டிய பெண் ஒருத்தி இருந்தாள். அவளுடைய பெற்றோர், பந்துக்களுக்குள்ளேயே முறைப் பையனைப் பார்த்து, அவனுக்கு அவளைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கத் தீர்மானித்திருந்தார்கள். ஆனால் அந்தப் பெண் புருஷர்களில் எல்லாம் உயர்ந்தவன் எவனோ, அவனைத்தான் நான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன் என்று பிடிவாதம் பண்ணினாள். அவர்களும், "உன் இஷ்டப்படியே போ" என்று விட்டுவிட்டார்கள்.

அந்தப் பெண், "புருஷர்க்குள்ளேயே உயர்ந்தவன் ராஜா தான். கல்யாணம் பண்ணிக் கொண்டால் அவனைத் தான் கல்யாணம் பண்ணிக் கொள்வேன்" என்று தீர்மானம் பண்ணிக் கொண்டு, அவ்வூர் ராஜா பின்னாலேயே போய்க் கொண்டிருந்தாள்.

ஒரு நாளைக்கு ராஜா பல்லக்கில் போய்க் கொண்டிருந்த போது, ஒரு சாமியார் எதிரே வந்தார். ராஜா பல்லக்கை விட்டுக் கீழே இறங்கி, அந்தச் சாமியாருக்கு நமஸ்காரம் பண்ணி விட்டுத் திரும்பவும் பல்லக்கில் ஏறிக் கொண்டு போனான்.

இதை அந்தப் பெண் பார்த்தாள். "அடடா, ராஜாதான் புருஷர்களுக்கு உயர்ந்தவன் என்று எண்ணி இத்தனை நாளும் ஏமாந்து போய்விட்டேனே! ராஜாவைக் காட்டிலும் உயர்ந்தவர் சாமியார் போல் இருக்கிறதே! கல்யாணம் பண்ணிக் கொண்டால் இந்தச் சாமியாரைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் பண்ணிக் கொண்டு, அந்தச் சாமியார் பின்னாலேயே சுற்ற ஆரம்பித்து விட்டாள்.

சாமியாரோடு போகும் போது, ஒரு நாள் அவர் தெருக்கோடியில் ஓர் ஆலமரத்தடியில் இருந்த பிள்ளையாருக்கு முன் நின்று தலையில் குட்டிக்கொண்டு, தோப்புக்கரணம் போடு வதை அவள் பார்த்தாள். "சாமியாரை விடப் பெரியவர், உயர்ந்தவர் இந்தப் பிள்ளையார்தான். அதனால் பிள்ளை யாரைத்தான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் பண்ணிக் கொண்டாள். சாமியாரோடு போகாமல் அந்தப் பிள்ளை யாருக்குப் பக்கத்தில் உட்கார்ந்து விட்டாள்.

அவளைத் தவிர அந்தப் பிள்ளையாரிடம் யாரும் அடிக்கடி வருகிற இடமாக அது இல்லை. அது கோயில்

கூட இல்லை. வெறும் மரத்தடிதான். அதனால், தெருவோடு போகின்ற நாய் ஒன்று அந்தப் பிள்ளையார் மேலே காலைத் தூக்கிக் கொண்டு ஒன்றுக்குப் போயிற்று. அதைப் பார்த்தவுடன், "அடடா, இந்தப் பிள்ளையாரையும் விட உயர்ந்தது இந்நாய் தான்" என்று அந்த நாயைத் துரத்திக் கொண்டு, அவள் போக ஆரம்பித்து விட்டாள்.


தெருவில் ஓடுகிற அந்த நாயை, ஒரு பையன் கல்லால் அடித்தான். அது வள் வள் என்று குரைத்துக் கொண்டு ஓடி விட்டது.

"ஏண்டா, அந்த நாயை அடித்தாய்?" என்று அந்தப் பையனை, ஒருவன் பிடித்துக் கொண்டு அதட்டினான்.

நாயைக் காட்டிலும், நாயை அடித்தவன் பெரியவன் என்று எண்ணினேன். அடித்தவனை யே திருப்பி அடிக்கிற இவன் தான் உயர்ந்தவன்" என்று தீர்மானம் பண்ணி விட்டாளாம் அந்தப் பெண்.

கடைசியில் கண்டுபிடித்த அந்தப் பிள்ளைதான் அவளுடைய அப்பா, அம்மா அவளுக்குத் தீர்மானம் பண்ணியிருந்த பிள்ளை. "வெகு தூரத்தில் யாரோ இருக்கிறான், இருக்கிறான்" என்று எண்ணிக் கொண்டே சுற்றினாள். கடைசியில் அவன் அவளுக்கு அருகிலேயே இருந்தவனாகப் போய் விட்டான். இப்படி லௌகிகமாக ஒரு கதை சொல்வது உண்டு.

"எங்கோ தூரத்தில் இருக்கிறான் ஸ்வாமி என்று ஊரெல்லாம் சுற்றுகிறாயே! தெரியாத வரையில் அவன் தூரத்தில் இருப்பவன்தான். ஊரெல்லாம் சுற்றினாலும் அவனைப் பார்க்க முடியாது. அவன் உன்கிட்டேயே இருப்பவன் தான். தூராத் தூரே அந்திகேச தூரத்திற் கெல்லாம் தூரம், சமீபத்திற்கெல்லாம் சமீபம்" என்று ச்ருதி



சொல்கிறது.

புளியங்கொட்டை முளைக்கிறபோது பார்த்தால் தெரியும். முளை கண்டவுடன் அந்த விதையை இரண்டாகப் பிளந்து பார்த்தால், அதற்குள் ஒரு மரமே இருப்பது தெரியும். பெரிய மரமாக வளரக்கூடிய சக்தி அதனிடத்திலேயே இருக்கிறது. எல்லா விதைகளிலும் அப்படியே இருக்கும் என்றாலும், புளியங்கொட்டையில் தான் நன்றாக நாம் பார்க்க முடியும்.

* கவிஞர் கண்ணதாசன்

## அழுபவர்கள் பாக்கியசாலிகள்!

தூய பக்தி ஆத்மஞானம் ஆகியவற்றின் பொருட்டு இறைவனுக்காக அழுவது என்பது, பக்தனின் பலமும் ஆயுதமுமாகும். அது ஆன்மிக வீரம் என்று போற்றுவதற்கு உரியது. தூய உள்ளத்திலிருந்து எழுவது. இந்த அழுகை பலவீனத்தைச் சேர்ந்ததல்ல. உலக மக்கள் உலகியல் பொருள்களுக்காக அழுவது போன்றதுமல்ல. மனம் சத்துவ குணத்தில் இருக்கும் போது தான், தூய மனநிலையில் இருக்கும் போதுதான், இறைவனுக்காக அழ முடியும். அப்படி அழுபவர்கள் புண்ணியாத்மாக்கள், பாக்கியசாலிகள். வணக்கத்திற்குரியவர்கள்.




# அநீதிகள் வாழ்வின் ஒரு பாகமே

ஒருவர் மிக உயர்ந்த பாதையை அடைய விரும்பும்பொழுது, அவர் தனக்கு ஏற்பட்டுள்ள துரதிருஷ்டமான துன்பத்தை நேருக்கு நேராக எதிர்த்து போராட வேண்டும். "நான் அவசியமானவற்றில் இருந்து விலகி மிகவும் அற்பமானவற்றை நோக்கிக் கீழிறங்கி, வாழ்வின் அனைத்து வழிகளிலும் பயணம் செய்து, எந்தக் காரணமும் இன்றி அவ்வப்பொழுது கோபம் கொண்டு. எண்ணற்ற அத்துமீறல்களைச் செய்திருக்கிறேன். அதனால் ஏற்பட்ட குற்ற உணர்வு தோன்ற இப்பொழுது நான் ஒரு தவறும் செய்யாமலேயே, எனது கடந்த காலத்துக்காக நிகழ்காலத்தில் தண்டிக்கப் படுகிறேன்" என்று தங்களுக்குள்ளேயே நினைத்துப் பார்க்க வேண்டும்.

ஒருவர் மிக உயர்ந்த ஓர் உண்மையை விளக்க முற்படும்பொழுது, தனக்கு ஏற்பட்ட அனைத்து விதமான துன்பங்களையும், ஒவ்வொன்றாக வரிசைப்படுத்திக் கூறிய பின்னரே, விளக்கம் அளிக்கிறார். ஆயினும் போதி தர்மர், இத்தகைய நிலைமைகளால் நாம் நமது உறுதி நிலையில் இருந்து மாறாமல், சற்றும் வளைந்து கொடுக்காமல், நமது தனித்தன்மையை இழந்து விடாமல் இருக்க வேண்டும் என்று தெளிவுபடுத்துகிறார். முதலில் அவர் இந்தத் துன்பங்கள் எதிர்பாராமல் வருகின்றன என்று சொன்னார்.

இரண்டாவதாக அவற்றை எவ்வாறு ஏற்றுக் கொண்டு, அணைத்துக்கொள்ள வேண்டும் என்பதைக் கூறுகிறார். இந்த வழியில் அவற்றைத் தடுப்பதற்கான எதையும் செய்யாமல் நிறுத்திவிட வேண்டும். இவ்வாறு செய்வதற்கு, நாம் முதலில் நமது துன்பம் நிறைந்த இன்றைய சூழ்நிலைக்கு நமது கர்ம பலன்களே காரணம் என்றும், அவையே இந்தத் துன்பங்களை இன்று உருவாக்கி இருக்கின்றன என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

கடந்த காலத்தில் இருந்து கிடைத்த இத்தகைய பலன்களைப் பொறுமையுடன் ஏற்றுக் கொள்வதன் மூலம், நாம் அதன் பின்னர் அவற்றுடன் உணர்ச்சிபூர்வமாக எதிர்ச்செயல் புரிய மாட்டோம். நாம் நமக்கு இழைக்கப்படும் அநீதிகளை





வாழ்வின் ஒரு பாகமாகவே கருதுவோம். இது நமது இருப்புக்கு, அமைதி நிறைந்த மன நிலையைக் கொடுக்கிறது. இப்பொழுது நமது இருப்புக்கு மிக அதிகமாக தியானத்தைப் பயிற்சி செய்ய முடிகிறது. இரண்டாவது, நமது நிலைமைக்கு ஏற்ப நம்மை மாற்றிக் கொள்வது அதாவது நமது நிலைமைக்குத் தகுந்த வாழ்க்கையை வாழ பழகிக் கொள்ள வேண்டும். மனிதர்களான நாம், கட்டுப்பாடுகளால் ஆட்சி செய்யப்படுகிறோமே அன்றி, நமது தனித் தன்மையினால் ஆட்சி செய்யப்படுவதில்லை. நான் அனுபவிக்கும் துன்பங்கள் மகிழ்ச்சிகள் அனைத்துமே கட்டுப்பாடுகளைப் பொறுத்தது.


நாம் ஏதாவது ஒரு சிறந்த பரிசை, ஆசியைப் பெறவேண்டுமானால், அதாவது நமக்கு பெரும் புகழோ அல்லது புதையலோ கிடைத்தால், அது கடந்த காலத்தில் நட்டு வைத்த ஒரு சிறு விதை தந்த பழமேயாகும். நிலைமை மாறும் பொழுது, இவை அனைத்துமே மாறிவிடும். எனவே இவை கிடைத்தது பற்றி எதற்காக மகிழ்ச்சி கொள்ள வேண்டும்? வெற்றியும் தோல்வியும் நிலைமைக்குத் தக்கவாறு மாறும் தன்மை கொண்டவை. ஆகையால் நமது மனம், மெழுகு போல் உருகுவதோ, முற்றிலுமாகத் தேய்ந்து போவதோ இல்லை. யார் ஒருவர் சந்தோஷக் காற்று வீசும் பொழுது அசைவற்று இருக்கிறார்களோ, அவர்கள் அமைதியாக இந்தப் பாதையில் செல்வார்கள்.

போதி தர்மர், மக்களிடம் எப்பொழுதும் ஸ்திரமான மனத்துடன் இருக்கும்படி கூறுகிறார். அந்த மனம் சூழ்நிலைகளால் அடித்துச் செல்லாத ஒன்றாக இருக்க வேண்டும். என்னதான் நடந்தாலும் ஒருவர் நடு நிலைமையில் இருக்க வேண்டும். மூன்றாவது, எதையும் தேடாதிருப்பது, இந்த உலகில் வாழும் மக்கள் தம்மைத்தாமே ஏமாற்றியபடியே வாழ்கிறார்கள். அவர்கள் எப்பொழுதுமே ஏதாவது ஒன்றுக்காக ஏங்கிக் கொண்டே இருக்கிறார்கள்.

ஒரு வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் தேடிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் புத்திக்கூர்மை படைத்தவர்கள் விழித்துக் கொள்கிறார்கள். அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்தில் இருந்தும் தங்களை வேறுபடுத்திக் கொள்கின்றனர். விலக்கிக் கொள்கின்றனர். பின்னர் அவர்கள் எதைப் பற்றியும் உருவகப் படுத்துவதையும், தேடிக் கொண்டிருப்பதையும் நிறுத்தி விடுகிறார்கள். சூத்திரங்களைத் தேடிச் செல்வது துன்பமடை வதற்காகவே, எதையும் தேடாமல் இருப்பதே பேரா னந்தமாகும். நீங்கள் எதையும் தேடிச் செல்லாமல் இருந்தால், நீங்கள் சரியான பாதையில்தான் பயணம் செய்து கொண்டு இருக்கிறீர்கள் என்று அர்த்தம்.


## மனதை அடக்க முயலுங்கள்!

"பலவந்தமாகப் பேசாமல் இருப் பதும், வெறுமனே வீண் பேச்சில் ஈடுபடுவதும் மனிதனுக்குக் கேடு விளைவிக்கின்றன. மனம் அடங்கப் பெற்றிருப்பதே வாய் திறந்து பேசாமல் இருப்பதைவிட, நிச்சயமாக மேலானது. ஆதலால் எப்பொழுதும் மனத்தை அடக்க முயற்சி செய்யுங்கள். மௌன விரதத்தை வற்புறுத்தி மேற்கொள்வதைவிட, தேவை யான அளவுதான் பேசுவது என்று வைத்துக் கொண்டால் தீமை ஒன்றும் ஏற்படாது. மேலும் அதனால் முறையான மௌன விரதத்தின் பலனும் கிடைக்கும்" என்று சுவாமி பிரம்மானந்தர் கூறியுள்ளார்.



# கண்ணனே கதி



1
குருக்ஷேத்திரத்தில் பதின்மூன்றாம் நாள் போரில் அபிமன்யு கொடூரமாகக் கொல்லப்பட்டான். துரோணர், கர்ணன், துச்சாதனன், துரியோதனன், கிருபர், அசுவத்தாமன் ஆகிய ஆறு பேரும் அந்த மாவீரனைக் கொன்றார்கள்.
2
இந்தச் செய்தியை அறியாத அர்ஜுனன் போர்க்களத்தில் வேறோர் இடத்தில் இருந்தான்.
கிருஷ்ணா, என்ன காரணத்தாலோ என் மனம் மிகவும் அலைபாய்கிறது. தீய சகுனங்கள் பலவற்றைக் காண்கிறேன். ஒருவேளை போரில் தர்மருக்கு ஏதாவது ஆபத்து வந்திருக்குமோ?
பார்த்தாபயப்படாதே, யுதிஷ்டிரருக்கு எந்த ஆபத்தும் வராது. வேறு ஏதோ தீய நிகழ்ச்சி நிகழ்ந்திருக்கிறது போலும்.
3
பாண்டவர் பாசறையில் அனைவரும் துக்கத்துடன் அமைதியாக உட்கார்ந்திருந்தார்கள். பாசறையில் ஜெயமுழக்கம் இல்லை, வீரநாதம் எழவில்லை என்பதை வெகுதூரத்திலிருந்தே அர்ஜுனன் கவனித்தான்.


கண்ணா, நிச்சயமாக நம் படையில் ஏதோ பேரிழப்பு நிகழ்ந்திருக்கிறது. நான் போரிலிருந்து பாசறைக்குத் திரும்பி வரும்போது வழக்கமாக அபிமன்யு வந்து என்னை வரவேற்பான். அவன் இன்று வரவில்லையே...?
தைரியமாய் இரு, அர்ஜுனா,
ஒரு வேளை அபிமன்யு வீர சொர்க்கம் அடைந்திருப்பானோ?
5 அபிமன்யு கொல்லப்பட்டதைக் கண்ணன் அறிந்தே இருந்தார். அதை அர்ஜுனன் அறிந்தால் புத்திரசோகத்தால் உடனே உயிரை விட்டுவிடுவான் என்பதால், கண்ணன் இந்திரனை எண்ணினான்.
தமது யோக சக்தியால் அர்ஜுனனுக்குத் தெரியாமல் இந்திரனிடம் ஏதோ கூறினார். அதன்படி இந்திரன் வயோதிப வேடத்தில் தோன்றினான்.
6 அர்ஜுனா, பிரியமான என் புத்திரன் மாண்டுவிட்டான். அவன் இறந்த பிறகு நான் உயிர் வாழ்வதில் அர்த்தமேயில்லை.
அந்தணரே, கவலைப்படாதீர்கள். உங்கள் சோகம் எனக்குப் புரிகிறது. ஆனால் நம் அனைவருக்கும் எத்தனையோ பிறப்புகள், எத்தனையோ இறப்புகள். இறப்பது உடல் மட்டுமே. ஆன்மா அழிவதில்லை. தயவு செய்து சாகும் எண்ணத்தை நீங்கள் விட்டுவிடுங்கள்.
7 வந்த வயோதிபர் நெருப்பு மூட்டி அதில் விழ இருந்தார். அப்போது அர்ஜுனன் ஓடிச் சென்று அவரைத் தடுத்தான்.
அந்தணரே, நில்லுங்கள்! நீங்கள் சாகக்கூடாது. உங்களுக்கு அப்படி என்ன துக்கம் நேர்ந்தது? என்னிடம் சொல்லுங்கள், நான் அதை நிவர்த்தி செய்கிறேன்.


8
அர்ஜுனா, மற்றவர்களுக்கு அறிவுரை கூறுவது சுலபம்தான். எனக்கு என் மகன் இறந்ததுபோல, உனக்கும் நடந்தால் இப்படி நீ பேச மாட்டாய்.
இல்லை அந்தணரே, நான் சொல்வது...
நீ வேறு ஒன்றும் சொல்ல வேண்டாம். இந்தக் கண்ணபிரான் சாட்சியாக சொல், உன் மகனோ, உன் சகோதரர்களோ போரில் மாண்டால், “நான் என் உயிரை விடமாட்டேன்” என்று உன்னால் உறுதிமொழி கூற முடியுமா? அப்படி நீ செய்தால் இதோ நானும் தீக்குளிப்பதை நிறுத்துகிறேன்.
9
அப்படிநான் உறுதி கூறினால் நீங்கள் சாகும் எண்ணத்தை கைவிட்டு விடுவீர்கள் அல்லவா?
நிச்சயமாக!
இந்தக் கண்ணன் மீது ஆணை. என் மகன் அபிமன்யுவே இறந்தாலும் நான் என் உயிரை மாய்த்துக் கொள்ள மாட்டேன். இது சத்தியம். அந்தணரே தயவு செய்து நீங்கள் தீக்குளிப்பதை நிறுத்துங்கள்.
10
கண்ணனை வணங்கிவிட்டு அந்தணனாக வந்த இந்திரன் சொர்க்கம் சென்றான்.
பிறகு கண்ணனும் அர்ஜுனனும் பாண்டவ பாசறைக்குள் சென்றார்கள். அங்கு அவன் மூர்ச்சையாகி விழும்படியான அந்தச் செய்தி சொல்லப்பட்டது.
11
அண்ணா, இவ்வளவு மாவீரர்கள் இருந்தும் என் மகனை யாரும் காப்பாற்றவில்லையே, இவ்வளவுதானா உங்கள் வீரம்.
12
தம்பி, சிவபெருமானின் வரபலத்தால் ஜயத்ரதன் எங்களைத் தடுத்துவிட்டான். ஒரு நாள் மட்டும் உன்னைத் தவிர மற்ற பாண்டவர்களை வெல்லும் வரம் அவன் பெற்றிருந்தான். அதனால் தனியாகச் சென்ற அபிமன்யுவை எங்களால் காப்பாற்ற முடியவில்லை.


13 பிறகு அபிமன்யுவை எப்படிக் கொடூரமாகக் கொன்றார்கள் என்பதை மற்ற பாண்டவர்கள் அர்ஜுனனுக்குச் சொன்னார்கள். அதைக் கேட்க கேட்க அர்ஜுனனின் தலை சுழன்றது. கண்கள் கலங்கி' மூர்ச்சையானான். மிகுந்த சோகத்தினால் தன் உயிரை விட்டு விட நினைத்து அவன் தீயில் குதிக்கச் சென்றான்.

14




உடனே அர்ஜுனன் மனம் மாறினான். கண்ணனின் கைகளைப் பற்றிக் கொண்டு கண்ணீருடன்...

15




16 பிறகு அர்ஜுனன் ஆறுதல் பெற்று, ஜயத்ரதனைப் போரில் கொல்லுவேன் என்று வீரசபதம் செய்தான். போரில் வீரனாக வெற்றிவாகை சூடினான். கண்ணனின் அருளால் நீங்காப் புகழைப் பெற்றான்.

முற்றும்

## அன்னையின் அருட்சாட்சி
(85ஆம் பக்கத் தொடர்ச்சி...)

எனக்குக் கிடைத்த படத்தில் அம்மாவின் முகம் எப்படியிருக்கிறதோ, அதே முகமாக மாறியது. கனவு கலைந்து எழுந்த எனக்கு, எந்தக் கடவுளை வழிபட்டாலும் அதில் நானே இருக்கிறேன் என்று அம்மா கூறுவதை உணர்ந்தேன். அன்று முதல் அம்மாவின் தீவிர பக்தையாகிவிட்டேன்.

### சக்தி துரை, ஸ்விட்சர்லாந்து.

நான் சுவிஸின் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத் தலைவராக இருக்கிறேன். ஆரம்பத்தில் எனக்கு அம்மா மீது நம்பிக்கை ஏற்படவில்லை.

அப்போது நான் ஒரு இசைக்குழுவின் அறிவிப்பாளராகக் கடமையாற்றிவந்தேன். அப்போது என் வாய்க்குள் புதிதாக ஒரு கடைவாய்ப் பல் முளைத்தது. அதன்போது ஏற்பட்ட ஏற்பினால் என்னால் வாயைத் திறக்கவே முடியவில்லை. வைத்தியசாலையில் இரண்டு வாரங்கள் தங்கியிருக்க நேர்ந்தது. அதன்போது டியூப் மூலம் தான் எனக்கு உணவே வழங்கப்பட்டது.

அப்போது எனக்கு நன்கு தெரிந்த அம்மாவின் தீவிர பக்தையான ஒருவர் ஆஸ்பத்திரிக்கு வந்தார். அவருக்கு குழந்தை இல்லாமல் இருந்த சமயம், ஒரு கிறிஸ்மஸ் தினத்தன்று அம்மாவின் அருளால் அம்மாவின் அறிமுகம் கிடைத்திருக்கிறது. அன்று அவர், தனக்கு அடுத்த கிறிஸ்மஸுக்குள் குழந்தை பிறக்க வேண்டும் என்று வேண்டினாராம். விரைவிலேயே அவர் கருவுற்றார். வைத்தியர்கள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் பிரசவத்துக்கு நாள் குறித்திருந்தார்கள். ஆனால், அதற்கு முன்னதாக, டிசம்பர் 24ஆம் திகதி குழந்தை தலை திரும்பிவிட்டதால், அவருக்கு ஒப்பரேஷன் மூலம் பிரசவம் நடந்தது. அந்தப் பெண்ணின் விருப்பப்படி, அடுத்த கிறிஸ்மஸுக்கு முதல் நாளே அவருக்குப் பிரசவம் ஆனது மிகப்பெரிய ஆச்சரியம் அல்லவா?

அத்தகைய தீவிர பக்தையான அவர், அம்மாவின் படம் ஒன்றைக் கொண்டுவந்து என் தலைமாட்டில் வைத்துவிட்டு, மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி மன்றத்தின் கருவூலப் பிரசாதத்தை ஒரு டம்ளரில் கலந்து மூன்று முறை ஒரு ஸ்பூனால் என் வாய்க்குள் ஊற்றினார். மூன்று வாரமாகத் திறக்க முடியாதிருந்த என் வாய், அன்று தானாகவே திறந்துகொண்டது. எனக்கு மட்டுமல்ல, எனக்கு சிகிச்சையளித்த வைத்தியர்களுக்கும் மிகுந்த ஆச்சரியம்.

அது ஆதிபராசக்தியின் அருள் என்று நான் நம்பினாலும், அடிகளார் மீது நம்பிக்கை ஏற்படவில்லை. அந்த பக்தை தந்த படத்தில் உள்ள ஆதிபராசக்தியை மட்டுமே பார்த்துக் கும்பிடுவதை வழக்கமாக்கிக்கொண்டேன். ஆனால், உலகம் முழுதும் இத்தனை அம்மன் கோயில்கள் இருந்தும், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தரது அருளினால் நான் குணமானதற்கான காரணத்தை ஆராய்ந்து,




குருவின் அருளினாலேயே இறைவன் அருள் கிடைக்கும் என்பதை உணர்ந்துகொண்டேன். நாளடைவில், அடிகளார் மீது எனக்கு அதீத பற்று ஏற்பட்டது. அதன் பின் என் வாழ்க்கையில் பல மாற்றங்களை என்னால் உணர முடிந்தது.

என் மகள் அடிகளார் பிறந்த அதே மார்ச் 3ஆம் திகதிதான் பிறந்திருந்தாள். அடுத்து என் மனைவி கருவுற்றிருந்த சமயம், அது ஆண் குழந்தையாக இருக்கவேண்டும், இந்தக் குழந்தையுடன் எனது கஷ்டங்கள் அனைத்தும் தீரவேண்டும் என்றும் அம்மாவிடம் வேண்டினேன். ஆண் குழந்தை என்பது பரிசோதனையில் உறுதியாயிற்று. அந்தக் குழந்தைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று சில பெயர்களை ஒரு அப்பியாசக் கொப்பியில் எழுதிவைத்துவிட்டு நித்திரைகொண்டுவிட்டேன்.

அன்று என் கனவில் தோன்றிய அம்மா, ஒரு மரத்துக்குப் பின்னால் இருந்தபடி, 'குழந்தைக்கு அட்சுதன் என்று பெயர் வை. அ'ச்'சுதன் இல்லை அ'ட்'சுதன்' என்று தெளிவாகக் கூறினாள். அதன்படியே என் மகனுக்கு அட்சுதன் என்றே பெயர் வைத்தேன்.

அவன் பிறந்ததற்குப் பிறகு என் வாழ்க்கையில் பல கஷ்டங்கள் நீங்கியது. அவன் ஆஸ்பத்திரியில் இருந்து வீட்டுக்கு வருவதற்குள், 12 ஆண்டுகளாகக் கிடைக்காத விசா கிடைத்தது. விசா கிடைத்ததால், என்னிடம் பிடித்துவைத்திருந்த பணத்தையெல்லாம் திரும்பத் தந்துவிட்டார்கள்.

இப்படிப் பல அதிசயங்களை இன்றும் என் வாழ்க்கையில் அனுபவித்து உணர்ந்துகொண்டே இருக்கிறேன்.

### தீபா, இலங்கை.

ஒரு சத்திர சிகிச்சைக்காகத்தான் தமிழகம் வந்தோம். வந்த இடத்தில் அம்மாவைப் பற்றி அறிந்து இங்கே வந்தோம். பார்த்த மாத்திரத்திலேயே அம்மா என்னை ஆட்கொண்டுவிட்டார். என்னைப் பார்த்து, சத்திர சிகிச்சை செய்யவேண்டாம் என்றார். அதன் பின் பரிசோதனை செய்து பார்த்த வைத்தியர் மிகுந்த ஆச்சரியத்துடன், சத்திர சிகிச்சைக்குத் தேவையே இல்லை என்று சொன்னார். இது அம்மாவின் கருணைதானே? இதுபோலவே மோட்டார் சைக்கிளில் அலுவலகத்துக்குச் செல்லும் போது ஒருநாள் ஒரு விபத்தில், நான் கடலுக்குள் விழுந்திருக்க வேண்டியவள். ஆனால், ஒரு பலமான சக்தி அது அம்மாவேதான் என்னை எதிர்ப்பக்கமாக நிலத்தில் தள்ளி என்னைக் காப் பாற்றினாள். முழு நம்பிக்கையுடன் வழிபடும் எவரையும் அம்மா கைவிடுவதேயில்லை. உண்மைதான்! நம்பினார் கெடுவதில்லை என்பது நான்கு மறைகளிலும் சொல்லப்பட்டிருக்கும் தீர்ப்பல்லவா? ஓம் சக்தி!

மன்மத ஆண்டு தை மாதம்
15.01.2016 முதல் 12.02.2016 வரை



மீனம்

சுலபமாக எதையும் நினைக்காமல் வாழ்க்கை ஒரு படிப்பினை என்று நினைக்கும் மீன ராசி வாசகர்களே! இம்மாதம் உங்களின் ராசிக்கு கிரக நிலைகள் நன்மை தரும் அமைப்பாக இருப்பதால் எல்லாம் வெற்றியும் நன்மையும் தரும். குறுகிய காலத்தில் நல்ல வளர்ச்சியை பெறுவீர்கள்.

**பணியாளர்களுக்கு**

பணியின் சிரமங்கள் இருந்து வந்தாலும் சிறப்பாக செய்து முடிப்பீர்கள். குறுகிய காலத்தில் சிலருக்கு சில பணிகளை முடித்து கொடுக்க வேண்டி வரும். மன வலிமையும், ஆன்மீக பலமும் உங்களை திறம்பட செயல்பட வைக்கும். பொருளாதாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள்.

**பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு**

பொது விடயங்களிலும், சேவை செய்வதிலும் இரக்க குணம் கொண்ட நீங்கள் மற்றவருக்கு உதவி செய்வதில் பெருமைப்படுவீர்கள். ஊனமுற்ற வர்கள், முதியவர்களுக்கு உதவி செய்வதை பாக்கியமாக கருதுவீர்கள். பொருளாதார நிலை நன்றாக இருக்கும்.

**வியாபாரிகளுக்கு**

கல்வி கூடம், தங்க அடகுக்கடை, மருத்துவ மனைகள் வைத்திருப்பவர்களுக்கு நல்ல வளர்ச்சியை பெறுவீர்கள். திறமைகளை வளர்த்து செயலில் நன்மை பெறுவதுடன் பொருளா தாரத்திலும் வளர்ச்சியை பெறுவீர்கள்.

**கலைஞர்களுக்கு**

கலைஞர்கள் வெளியூர் சென்று நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பு அமையும். நடன கலை, நடிப்பு, வசனம் போன்ற துறையில் முன்னேற்றம் காண்பீர்கள். கண்களில் சிறு நோய் வந்து மறையும். பொருளாதாரத்தில் நன்மை பெறுவீர்கள்.

**பெண்களுக்கு**

பெண்களின் தேவைகளுக்கு உதவிகள் கிடைக்கும். கணவன் மனைவி உறவு நெருக்கமாக இருக்கும். பிரிந்த தம்பதிகள் இணையும் வாய்ப்பும் அமையும். சுயதொழில் வளர்ச்சியை தரும். பொருளாதாரம் தேவைகளுக்கு கிடைக் கும்.

**மாணவர்களுக்கு**

அறிவாற்றலும் கல்வி வளமும் சிறப்பாக அமையும். ஆசிரியர் பயிற்சி, வங்கி, ஆடிட்டர் கல்வி மேன்மை அடைவதுடன் வளமான கல்வி வாய்ப்பும் அமையும்.

**இம்மாதம் உங்களின் சந்திராஷ்டம நாட்கள்**

30.01.2016 சனி இரவு 08.57 முதல்
02.02.2016 செவ்வாய் காலை 08.15 மணி வரை

**நட்சத்திர பலன்கள்**

**பூரட்டாதி 4ஆம் பாதம்**

செய்யும் தொழிலை தெய்வமாக வணங்கும் நீங்கள் எந்த தொழில் செய்தாலும் அதில் தர்ம நியாயம் இருக்கும் படி பார்த்துக் கொள்வீர்கள்.

**உத்திரட்டாதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

காலசக்கரம் சுழல்வது எப்படி இருந்தாலும் அதை நீங்கள் எதிர் கொண்டு செயல்படுவீர்கள். உறவினர் களுக்கு சொந்த முயற்சியால் வளமான சூழ்நிலை ஏற்படுத்தி தருவீர்கள்.

**ரேவதி 1, 2, 3, 4 ஆம் பாதங்கள்**

கருத்து சுதந்திரத்தை மிகவும் விரும்புவீர்கள். எல்லோருக்கும் எல்லாம் தெரிய வேண்டுமென்று ஆசைப்படுவீர்கள்.


**அதிர்ஷ்ட நிறங்கள்:** இளம் மஞ்சள், வெண்மை, சிவப்பு

**அதிர்ஷ்ட திசைகள் :** வடகிழக்கு, வடக்கு, கிழக்கு

**அதிர்ஷ்ட கிழமைகள் :** வியாழன், திங்கள், ஞாயிறு

**இம்மாதம் நீங்கள் வழிபட வேண்டிய தெய்வங்கள்**

வெள்ளிக்கிழமை ராகு காலத்தில் அம்மனுக்கு நெய் விளக்கு போட்டு தேங்காய் வைத்து வழிபாடு செய்து வர சகல காரியமும் வெற்றியை தரும்.




### இறைவனடி சேர்தல்!

வினையால் உயிர், இன்ப துன்பங்களில் சிக்கித் தவிக்கிறது. இவற்றிலிருந்து விடுவிக்கும் ஆற்றல் இறைவனுக்கு மட்டுமே உண்டு. "பிறவிக்கடலைக் கடப்பது" என்பதை, இறைவனைத் தவிர்த்துவிட்டு மனிதனால் செய்ய முடியாது. அதற்கு ஒரு வழிதான். ஒரு வழிபாதைதான் உண்டு. அதுதான், "இறைவனடி சேர்தல்" என்கிறார் திருவள்ளுவர்.




கணித்தவர் வாடிப்பட்டி
R.ஆனந்தன்
M.A., D.A.. D.V.,
9789341554

# விமர்சன சிற்பிகள்




சோதிட கேசரியில் வெளியிடப்பட்டு வரும் சம்பந் தப்பட்ட தமிழ் மாதங்களுக்கான சுபதினங்கள் எம்முடைய குடும்பத் திற்கு மிகுந்த பயனளிப்பதாக உள்ளது. தொடர்ந்து வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

ஆர்.லட்சுமிப்ரியா,
யாழ்ப்பாணம்

சோதிடகேசரி ஆன்மிக மாத சஞ்சிகையில் வெளிவந்து கொண்டிருக்கும் வெளிநாட்டுக் கோயில்கள் பற்றியதான கட்டுரைகள் அரிய பல தகவல்களைப் படங்களுடன் அற்புதமாய் அளிக்கின்றன, நன்றி!

எம்.எஸ் வேதரட்ணம்,
நீர்கொழும்பு

கிரகப்பெயர்ச்சிகள் தொடர்பான ராசிபலன்கள் சோதிட கேசரியில் மிகத்துல்லியமாக கொடுக்கப்படுகின்றது. எம்முடைய மனமார்ந்த பாராட்டுக்கள்.

மு.சக்திநாதன்,
வெள்ளவத்தை

சோதிடகேசரியில் தற்போது பிரசுரிக்கப்பட்டு வரும் பழமையான கோயில் சிற்பங்கள் பற்றிய கட்டுரைகள் மிகவும் சுவாரஸ்யமாக உள்ளன. தொடர்ந்து பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

வே.மார்த்தாண்டபூபதி,
திருகோணமலை

சோதிட கேசரியின் சில இதழ்களில் கம்பராமாயணக் கதாபாத்திரங்கள் தொடர்பான கட்டுரைகள் இலக்கியச் சுவையுடன் இருந்தன. இவ்வகைக் கட்டுரைகளைக் கூடுதலாய் வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

ம.குணசுந்தரி,
முகத்துவாரம்

சோதிடகேசரியில் கடந்த சில மாதங்களாக வெளியிட்டு வரப்படும் ஈ.எஸ்.பி. ஆற்றல் சம்பந்தமான கட்டுரைகள் மிகவும் நன்றாக உள்ளன, சிந்தனைக்கு விருந்தாக இருக்கின்றன, பாராட்டுக்கள்.

வ.அமிர்தகடேஸ்வரன்,
கொழும்பு





# அஸ்ட்ரோவிஷனின் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.

## ஜோதிடர்கள் மற்றும் ஜோதிட மாணவர்களுக்கான முழுமையான ஜோதிட தீர்வுகள்


**AstroSuite** multi

- ✓ லைப் சைன் - ஜாதக பலன் மற்றும் பரிகாரங்கள்
- ✓ சோல்மேட் - திருமண பொருத்தம்
- ✓ ஜெம்ஃபைன்டர் - ராசி கல் ஆலோசனைகள்
- ✓ இயர் கைடு - வருட பலன்
- ✓ டிஜிட்டல் - எண் கணிதம்
- ✓ நேம் ஃபைன்டர் - குழந்தைகள் பெயர் சூட்டல் ஆலோசனைகள்
- ✓ பஞ்சபட்சி - பஞ்சபட்சி சாஸ்திரம்
- ✓ ஸ்டார் கிளாக் - முகூர்த்தம் & பஞ்சாங்கம்




## அஸ்ட்ரோவிஷன் ஜோதிடத்தீர்வுகள் இப்பொழுது உங்கள் மொபைலில்...

**StarClock ME Ultimate**




- ✓ இராசி
- ✓ நவாம்சம்
- ✓ பாவம்
- ✓ கிரக ஸ்புடம்
- ✓ நேரப் பலன்கள்
- ✓ தினப் பலன்கள்
- ✓ தசா - புக்தி - பரியேந்தர் - சூஷ்மம்
- ✓ பாப புள்ளிகள்
- ✓ கிரக பலன்
- ✓ பாவபல அட்டவணை
- ✓ ஷட்பல அட்டவணை
- ✓ அஷ்டக வர்க்கம்
- ✓ ஷோடச வர்க்கம்
- ✓ யோகங்கள்
- ✓ உபகிரகம்
- ✓ நட்சத்திரப் பொருத்தம்
- ✓ முகூர்த்தம்
- ✓ கிரக யுத்தம் - பாலடி அவஸ்தை
- ✓ சுப பாப நிலை
- ✓ லக்னம் மாற்ற அறிவிப்புகள்
- ✓ பஞ்சமகா சூத்ரம்
- ✓ ஸ்லோகங்கள்(அதன் விளக்கம்)
- ✓ விவாஹப் பொருத்தம்
- ✓ ஒரு பக்க ஜாதகம்(PDF-கிடைக்கும்)

**Softwares are also available in Singhalese Language**

Astro-Vision
the astrology people

Astro-Vision Futuretech Pvt. Ltd., Door No. 31/2165-A3,1st Floor, White Tower, Kuthappadi Road, Thammanam P O, Cochin - 682 032 Kerala, India. Ph: 00 91 9846057978 , 00 91 484 3390017

Dealer Contact details: S Kamalanathan, 109/1-4/1, Wasala Road, Colombo-13, Srilanka
Contact No. 0094777891945, E-mail id : kamal2866@gmail.com

www.indianastrologysoftware.com | www.clickastro.com




இந்த இதழ் எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) பிறைவேட் லிமிட்டெட்டாரால் கொழும்பு-14, கிராண்ட்பாஸ் வீதி, 185ஆம் இலக்கத்தில் 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் அச்சிட்டு வெளியிடப்பட்டது.